
பக்கங்கள்-16 | 31,ஆடி.2016 | விலை-30.00




நடுநிலை இதழ்
# தினப்புயல்
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of. N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -163



## மைத்திரி - ரணில் ஆட்சி மற்றுமொரு ஆயுதப்போராட்டப் பாதைக்கு வழி வகுக்கிறதா?

## கிராமிய பொருளாதார மத்திய நிலையத்தை முஸ்லீம்களுக்குத் தாரைவார்த்துக் கொடுத்த முதல்வர் விக்னேஸ்வரனும், அவரது சகாக்களும்

## தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நடைபாதை அரசியல்




-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமிய பொருளாதார மத்திய நிலையத்தை முஸ்லீம்களுக்குத் தாரைவார்த்துக்கொடுத்த முதல்வர் விக்னேஸ்வரனும், அவரது சகாக்களும்

நீண்டநாட்கள் இழுபறியில் இருந்து வந்த கிராமிய பொருளாதார மத்திய மையத்திற்கு தென்னிலங்கை அரசியல் ஒரு முடிவு கட்டியுள்ளது. இதற்குக் காரணம் வடமாகாண சபையும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் தான். அதிலும் மிக முக்கியமான காரணம் வடமாகாணசபையின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்களும், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனும் அதில் உள்ளடக்கப் படுகின்றனர்.

குறிப்பாக மஹிந்த ராஜபக்ஷவினுடைய ஆட்சிக்காலத்தில் பல்வேறு அபிவிருத்தித்திட்டங்கள் முன்னெடுக்கப் பட்டன. இதில் கிராமத்தை அண்மித்த பிரதேசங்களில் சந்தைகள், ஆடைத் தொழிற்சாலைகள், பண்ணைகள், நெசவுக் கைத்தொழிற்சாலை, காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை, யாழ்ப்பாணம் ஐஸ் பக்டறி என வடக்கிலும், கிழக்கிலும், தென்னிலங்கையிலும் பல்வேறு அபிவிருத்தித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டது மட்டுமன்றி, மஹிந்த சிந்தனைத்திட்டத்தின் கீழ் ஆயிரம் பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டு மஹிந்தோதய விஞ்ஞான ஆய்வு கூடங்கள் நிர்மானிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. இதனால் மாணவர்கள் பல்வேறு பயன்களைப் பெறுகின்றனர். அது மட்டுமன்றி வெளிநாடுகளில் கடன்வாங்கி பாலக் கட்டுமானங்கள், வீதிப்புனரமைப்புக்கள் என்பனவும் செவ்வனவே செய்யப்பட்டு வந்தது. அப்போது இயங்கிக்கொண்டிருந்த வடமாகாணசபை மஹிந்த ராஜபக்ஷவின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு எதிராக அதனைத்தடுத்து நிறுத்த முயற்சி எடுக்கவுமில்லை, தடுத்து நிறுத்தவுமில்லை. அதற்கு அப்பால் மஹிந்த ராஜபக்ஷ தனது அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்துச்சென்றார்.

இதில் குறிப்பாக காணி, பொலிஸ் அதிகாரம் என்றெல்லாம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும், வடமாகாணசபையும் மாறி மாறி பிரேரணைகளை நிறைவேற்றியும், கருத்துக்களைக் கூறியும் வந்தபொழுது அவையும் பயனளிக்கவில்லை. இக் காரணங்களினாலேயே மஹிந்த ராஜபக்ஷ வினுடைய அரசாங்கம் கவிழ்க்கப்பட்டது.

ஒரு கிராமிய பொருளாதார மத்திய மையத்தினைக் கட்டுவதற்குக்கூட வடமாகாண சபையின் அதிகாரத்தைப் பயன்படுத்தமுடியாத நிலையில், வடமாகாணசபைக்குட்பட்ட பிரதேசத்தில் ஒரு பொருளாதார மத்திய மையத்தையோ, ஏனைய அபிவிருத்திகளையோ மேற்கொள்வதற்கு மத்திய அரசு தான் இறுதித் தீர்மானம் எடுக்கவேண்டுமாக இருந்தால் வடமாகாணசபை இயங்குவதனுடைய அர்த்தமென்ன? சிங்களப் பேரினவாதத்தினுடைய அதிகாரம் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது. பயங்கரவாதிகளை அழிப்பதெனக்கூறி தமிழ் மக்கள் மீது முன்னெடுக்கப்பட்ட இனப்படுகொலையை மூடி மறைப்பதற்கு கடந்த அரசாங்கமும், இந்த அரசாங்கமும் தமிழ் மக்களுக்கான தீர்வுத் திட்டத்தில் ஒத்த அரசியல்ப் போக்கினையே கொண்டுள்ளன.

பொருளாதார மத்திய மையம் அமைக்கப்படுவது தொடர்பில் அறிவிக்கப்பட்டு ஆறுமாதங்கள் கடந்துள்ள நிலையில், அதனை தாண்டிக்குளத்திலா? ஓமந்தையிலா? அமைப்பது என்ற தீர்மானம் எடுப்பதில் இழுபறி நிலை தொடர்கையில், வடமாகாணசபையின் முதலமைச்சருக்கு ஒரு கூட்டமும், அமைச்சர் ரிஷாட் பதியூதினுக்கு மற்றுமொரு கூட்டமும், பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனுக்கு இன்னொரு கூட்டமும், அமைச்சர் சத்தியலிங்கத்திற்கு ஒரு கூட்டமுமாக இந்த பொருளாதார மத்திய மையம் வவுனியாவில் அமையப்பெறுவதற்கு பல்வேறு தரப்பட்ட



போராட்டங்களை மேற்கொண்டனர்.

இதில் உள்ளடக்கப்பட்ட அனைவரும் தமிழ் அரசியல்வாதிகளே! இவ்விடயத்தில் தீர்க்கமான முடிவை மாகாணசபையோ அல்லது தமிழ்த்தேசியக் கூட்டமைப்போ எடுத்திருக்கவேண்டும். வடமாகாணத்தில் இரண்டு பொருளாதார மத்திய மையம் அமையப்பெறுவதென்பது தமிழ் மக்களின் பொருளாதாரத்தை முடக்குமொரு செயற்பாடாகும்.

குறிப்பாக அமைச்சர் ரிஷாட் பதியூதீனுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பொருளாதார மத்திய மையத்தை தாண்டிக்குளத்தில் அமைப்பதற்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் அனுமதிகொடுக்க மாட்டார். ஒருவேளை அமைச்சர் ரிஷாட் அவர்கள் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி தாண்டிக்குளத்தில் பொருளாதார மத்திய மையத்தை அமைக்கலாம். அவ்வாறு அமைக்கப்பட்டாலும் அது கடும் எதிர்ப்புக்கள் மத்தியிலேயே நடைபெறும். இக்காரணத்தை அடிப்படையாகக்கொண்டு அமைச்சர் ரிஷாட் பதியூதீன் ஒரு முடிவுக்கு வரலாம். இவ் பொருளாதார மத்திய மையத்தை முஸ்லீம் பிரதேசங்களுக்கு நகர்த்தவேண்டிய தேவை அவருக்கு ஏற்படும். இவர் பொருளாதார மத்திய மையத்தை ஓமந்தையில் அமைப்பதற்கு முன்வரமாட்டார். ஆகவே இவ் பொருளாதார மத்திய மையம் முஸ்லீம் பிரதேசமொன்றில் அமைக்கவேண்டிய தேவை அமைச்சர் ரிஷாட் பதியூதீனுக்கு ஏற்படும். இதனால் எதிர்வரும் தேர்தலில் தனக்கான தனி வாக்குகளை அமைச்சர் ரிஷாட் பதியூதீன் பெற்றுக்கொள்வார். மாங்குளத்தில் பொருளாதார மத்திய மையம் அமையுமாகவிருந்தால் தமிழ் மக்களுடைய பிரதேசத்தில் அமையவிருக்கின்றது என்பது வரவேற்கத்தக்கது. ஆனால் இவ்விடத்தில் கட்டப்படுகின்ற பொருளாதார மத்திய மையமானது பொதுமக்கள் பயனடையும் வகையில் அமையப்பெறுமா? என்பது கேள்விக்குறி. குறிப்பாக சுப்பர் மாக்கெட் ஒன்று அமைக்கவேண்டுமாயின் போக்குவரத்து வசதி, மக்கள் செறிந்து வாழும் இடங்களிலேயே அமைப்பார்கள். இது உலக நடைமுறை. கிராமத்திலிருந்து அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படுவதில்லை. நகரத்திலிருந்து அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டே கிராமத்திற்குச் செல்கின்றன. தனது கௌரவத்தை விட்டுக்கொடுக்கக்கூடாது என்ற காரணத்தினால் சிங்களப் பேரினவாதத்துடன் இரண்டறக் கலந்த வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் மஹிந்த ராஜபக்ஷ வினுடைய நிகழ்ச்சி நிரலுக்கேற்பவே தனது அரசியலை முன்னெடுத்து வருகின்றார். மஹிந்த ராஜபக்ஷவை சர்வாதிகாரியாகக் கூறிய அவர் தன்னையும் ஒரு சர்வாதிகாரியாகவே மக்களுக்கு வெளிக் காட்டி வருகின்றார்.

தமிழ் அரசியல் தலைவர்கள் இந்த பொருளாதார மத்திய மையத்திற்கு மோதிக் கொள்கின்றபொழுது நடுநிலையாக இருந்து தீர்ப்புக்கூறவேண்டிய சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் பக்கச்சார்பாக ஓமந்தையில் தான் இந்த பொருளாதார மத்திய மையம் அமையப்பெறவேண்டும் என்று கூறியது. இவர் நீதியரசராக இருக்கும் பொழுது எப்படிச் செயற்பட்டிருப்பார் என்பது இதிலிருந்து வெளிப்படுகின்றது.

இவர் நீதியரசராக இருந்தபொழுது பயங்கரவாதச் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டிருந்த தமிழ்க் கைதிகளுக்கு 10, 20, 25 வருடங்கள் என சிறைத் தண்டனைகளை வழங்கியிருக்கின்றார். இவை ஆதாரபூர்வமாக உள்ளது. இவை இவ்வாறிருக்க, தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டங்கள், அபிவிருத்திகள் வருகின்றபொழுது தமது சுயநல அரசியலுக்காக தமிழ் மக்களுக்குக் கிடைக்கவிருக்கின்ற நன்மைகளைத் தட்டிக் கழிப்பதில் அண்மைக்காலமாக முதலமைச்சர் செயற்படும் விதங்கள் கவலைக்குரியது. கட்சி சார்ந்த அரசியலைச் செய்பவர்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை சின்னாபின்னமாக பிளவுபடுத்துவதையே நோக்காகக்கொண்டுள்ளனர். இதிலொரு விடயத்தைப் புரிந்துகொள்ளவேண்டும். பொருளாதார மத்திய மையம் அமைப்பதற்கு அரசாங்கம் ஒதுக்கியுள்ள இருநூறுகோடி ரூபாய் நிதியென்பது வன்னி நிலப்பரப்பில் தமிழ் மக்களின் சொத்துக்கள் அழிக்கப்பட்டதற்கு ஈடாகுமா? அந்த வகையில் பேரினவாத அரசே தமிழ் மக்கள், தமிழ் அரசியல்வாதிகள் இடையே குழப்பநிலையை உருவாக்கி, வடமாகாண சபையையும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பையும் இரண்டாக பிரிவடையச் செய்து அதற்குள் ரெலோ, புளொட், ஈ.பி. ஆர்.எல்.எப், தமிழரசுக்கட்சி இவர்களையும் பிளவுபடவைத்து அமைச்சுப் பதவிகளை இவர்களுக்கே வழங்கி அரசாங்கம் தமது கட்சிக்குள்ளேயே இவர்களை இழுத்துக்கொள்ளும் செயற்பாட்டினை தற்போதைய நல்லாட்சியிலும் நகர்த்தி வருகின்றது எனலாம். சமாதான ஒப்பந்தம் எனக்கூறி விடுதலைப்புலிகளுக்குள் பிளவுகளை ஏற்படுத்திய ரணில் விக்ரமசிங்க இன்று மிகத் தந்திரோபாயமாக சிறுபான்மை இனத்துக்குள் மோதல்களைக் கட்டவீழ்த்துள்ளார். ஏற்கனவே சுக்குநூறாக உடைந்துபோயுள்ள சிறுபான்மைக் கட்சிகளைப் பிளவுபடுத்துவதன் ஊடாக, சிங்களதேசம் என உலகமெங்கும் காண்பிப்பதற்கு அரசு முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது. டட்லி சேனநாயக்கா - மைத்திரிபால சிறிசேன வரை தமிழ் மக்களுக்கான தீர்வுத் திட்டங்களை வழங்க எவருக்குமே உடன்பாடில்லை.

ஆட்சிக்கு வந்த:வரும் தலைவர்கள் தமிழ் மக்களுக்கானத் தீர்வுத்திட்டத்தை வழங்க முன்வருகின்றபொழுது, சிங்கள மக்களின் மத்தியில் அவர்கள் எதிர்ப்புக்களைச் சந்திக்கவேண்டிய நிலை ஏற்படும். ஏற்கனவே இணைந்த வடகிழக்கை பிரித்துவைத்துள்ள ஜே.வி.பி இதில் தற்போது இருக்கக்கூடிய ஆட்சியாளர்கள் வடகிழக்கை இணைப்பார்களா? பொலிஸ் காணி அதிகாரம் வழங்குவார்களா? இவற்றைத் தமிழ் மக்களுக்கு வழங்கமுடியாத சிங்களப்பேரினவாத அரசு தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டம் தொடர்பாக பேசுவது அனைத்தும் போலியானவை. தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டத்தை சர்வதேச நாடொன்றின் மத்தியஸ்தத்துடன் பெற்றுக்கொள்ள முடியும் அல்லாது மீண்டும் ஆயுதமேந்திப் போராடித்தான் எமது சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்பதனையே தொடர்ந்து வந்துள்ள மைத்திரி-ரணில் கூட்டு அரசாங்கம் வெளிப்படுத்தி நிற்கின்றது.

பொருளாதார மத்திய மையம் போன்று இன்னும் பல அபிவிருத்தித் திட்டங்களை வடகிழக்கு பிரதேசங்களிலே உருவாக்கி, அதிலே குழறுபடிகளை ஏற்படுத்தி தமிழ் மக்களுடைய வாக்குகளை சுவீகரித்துக் கொள்வதற்கு சிறுபான்மை மக்களிடத்தில் குழப்பநிலையைத் தோற்றுவித்து வருகின்றது அரசு. வடமாகாணசபையோ, தமிழ்த்தேசியக்கூட்டமைப்போ முடிவெடுக்க முடியாத நிலையில் மத்தியரசு முடிவெடுத்து தமிழ் மக்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்கின்றபொழுது, ஒரு கூட்டம் அரசாங்கத்தை நோக்கிச்செல்லும். அப்பொழுது தேசியம், சுயநிர்ணய உரிமை என்பதைக்கூட அவர்கள் மறந்து விடுவார்கள். பொருளாதார மத்திய மையம் அமைப்பது தொடர்பில் குழப்பங்களை உருவாக்கி, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள், முஸ்லீம் பாராளுமன்ற உறுப்பினர்கள், வடமாகாண சபை உறுப்பினர்கள் என்போருக்கிடையில் இந்த பொருளாதார மத்திய மையம் அமைப்பது தொடர்பில் பல்வேறு கருத்துக்களும், முரண்பாடுகளும் பெருகி வரும் இந்த நிலையில் "எரிகின்ற நெருப்பில் எண்ணை ஊற்றும்" அடுத்த நிகழ்வாக அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டுள்ள வவுனியாவில் ஒரு பொருளாதார மத்திய மையமும், மாங்குளத்தில் மற்றுமொரு பொருளாதார மத்திய மையமும் அமையப்பெறுவது என்பது அரசாங்கம் சிறுபான்மை இனத்தை கேலி செய்யும் ஒரு செயற்பாடாகவே அமையப்பெற்றுள்ளது. இறுதியாக ஆடு, மாடுகள் தங்கிச்செல்லும் ஒரு இடமாக மாற்றவே இவ் அரசாங்கம் இப்பொருளாதார மத்திய மையம் அமைப்பதன் பின்னணியில் செயற்படுகின்றது. ஹம்பாந்தோட்டையின் மத்தல விமானநிலையம், துறைமுகம் இந்த இரண்டும் பாரிய முதலீட்டில் கடந்த ஆட்சியாளர் மஹிந்த அரசினால் நிர்மாணிக்கப்பட்ட பொழுதும், அவை நஷ்டத்தில் இயங்கி இறுதியில் நெற்களஞ்சியமாக மாற்றப்பட்ட சுவாரஷ்யமான விடயத்தையும் நீங்கள் அனைவரும் அறிந்ததே. இதில் குறிப்பாக முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பையும், தமிழரசுக் கட்சியையும், அவர்களுடைய செயற்பாடுகளையும் குள்ளநரிபோன்று உடைப்பதற்குப் பேரினவாத அரசினால் அனுப்பப்பட்ட ஒருவர் என்றே மக்களாலும், அரசியல்வாதிகளாலும் கூறப்படுகின்றது.

"வானத்தால்போன சனியனை ஏணி வைத்து இறக்கிய" செயற்பாட்டினைப் புரிந்த சுமந்திரனும், சம்பந்தனுமே இதற்குப் பதில் சொல்லவேண்டும். வவுனியாவில் அமையப்பெறவிருந்த பொருளாதார மத்திய மையம் முஸ்லீம்களுக்குக் கைமாறியுள்ளது தொடர்பில், தமிழ் மக்களுக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் என்ன பதில் சொல்லப் போகின்றார். வாசுதேவநாணயக்காரவின் சம்பந்தியென்பதை இந்த கிராமிய பொருளாதார மத்திய மையம் அமைப்பது தொடர்பில் வெளிக்காட்டியுள்ளேன் என்பதைக் கூறப்போகின்றாரா?

**இரணியன்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## ஜெனிவாத் தீர்மானம் தமிழ் மக்களுக்கு நன்மை பயக்குமா?

பேச்சுவார்த்தைகள், தீர்மானங்கள் என்கிற விடயங்கள் தமிழ் மக்களுக்கு ஒன்றும் புதியவையல்ல. தமிழ் மக்களுக்கான உரிமைகளைப் பெறுவதை நோக்காகக்கொண்டு சிங்கள ஆட்சியாளர்களுடன் அஹிம்சையில் ஆரம்பித்து ஆயுதத்தைப் பயன்படுத்தி விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனால் போராட்டங்கள் பல்வேறு வடிவங்களில் முன்னெடுக்கப்பட்டமை யாவரும் அறிந்ததே.

இந்த 30வருடப்போராட்ட காலங்களில் இலங்கை அரச படைகளால் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் இறுதியாக இனப்படுகொலையோடு நிறைவடைந்திருக்கிறது. மனித உரிமையை மீறுகின்ற சம்பவங்கள் பதிவாகியிருக்கின்றன. பாலியல் வன்கொடுமைகளில் இராணுவத்தினர் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருப்பதுடன் அதற்கான ஆதாரங்களும் ஐ.நா சபைவரை கொண்டுசெல்லப்பட்டிருக்கிறது. இவற்றிற்கு இலங்கை அரசு பொறுப்புக்கூற வேண்டும் என்பதனை வலியுறுத்தி ஜெனிவா மனித உரிமை மாநாட்டின் ஒவ்வொரு கூட்டத்தொடரிலும் இலங்கையின் விவகாரங்கள் சிறப்பாக கவனத்திற்கொள்ளப்படுவது தற்போது வழமையாகிப்போனது. அங்கு வெறுமனே தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதும், பிரதிநிதிகளாலும், தமிழ்த்தரப்பினராலும் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுவதும், கூட்டத்தொடர்களின்போது தமிழினப் படுகொலைக்கு நீதிவேண்டி அங்குள்ள புலம்பெயர் தமிழ் உறவுகள்,அமைப்புக்களால் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படுவதும் வழமையாகிப்போனது.

ஐ.நாவின் முன்னாள் மனித உரிமை ஆணையாளர் நாயகம் நவநீதம் பிள்ளை அவர்களின் காலத்தில் தான் தமிழர் மீதான இனப்படுகொலை விவகாரம் உலகளவில் சூடுபிடித்திருந்தது. இவ்விடயத்தில் இலங்கை அரசு பொறுப்புக்கூறவேண்டும் என்பதில் அவரும் உறுதியாகவிருந்தார். அப்போதும் ஜெனிவா மனித உரிமைச் சபையிலே இலங்கை அரசுக்கெதிராக தீர்மானங்கள் எடுப்பதும், அறிக்கைகளை சமர்ப்பிப்பதும் என ஆரம்பித்து, தற்போது பதவியிலிருக்கும் மனித உரிமைகள் ஆணையாளர் அல் ஹூசைன் வரை இந்த தீர்மானங்கள் நிறைவேற்றுவதும், அறிக்கைகள் சமர்ப்பிப்பதும் தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறதே தவிர, இலங்கை அரசினால் அங்கு நிறைவேற்றப்படும் தீர்மானங்களுக்கு உடன்பட்டு தமிழ் மக்களுக்கு சார்பான செயற்பாடுகள் அல்லது இனப்படுகொலைக்கான நீதி, உரிமைகளை வழங்குதல் தொடர்பில் கால அவகாசம் கேட்பதன் மூலம் இழுத்தடிப்பது தொடர்ந்துகொண்டிருப்பது தான் உண்மை.

ஜெனிவாவில் நிறைவேற்றப்படுகின்ற தீர்மானங்கள் அனைத்தும் ஜெனிவாவுடன் மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன மாறாக அவற்றை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அரசு எவ்வித அக்கறையும் காட்டவில்லை. கடந்தகால அரசு பயங்கரவாதிகளை அழித்தொழிக்கின்றோம் என்கிற போர்வையில் ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் இனச்சுத்திகரிப்பு செய்வதற்கான நடவடிக்கைகளை நேரடியாக மேற்கொண்டிருந்தது. தற்போதைய கூட்டரசு அவர்களைக் காப்பாற்றும் நோக்கில் செயற்படுகிறது. இனப்படுகொலை விவகாரத்தில் தொடர்புள்ள நபர்கள், இராணுவத்தினர் மீது நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு தொடர்ந்தும் பாசாங்குகாட்டுகிறது. இதற்கிடையில் ஜெனிவாவின் ஒவ்வொரு அமர்வுகளிலும் அங்கிருக்கும் தமிழ்ப் பிரதிநிதிகள் சிலர் கலந்துகொண்டு அறிக்கைகளை சமர்ப்பிப்பது தெரிந்த விடயமே. ஏற்கனவே கிடப்பில் போடப்பட்டிருக்கும் தீர்மானங்களை தூசுதட்டி அதற்கானத் தீர்வுகளை ஆராய்வதை விடுத்து, புதிது புதிதாக தீர்மானங்களை நிறைவேற்றுவதில் என்ன பயன் இருக்கிறது? தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஜெனிவாத் தீர்மானங்கள் என்பது இலவு காத்த கிளியின் கதையைப்போலத்தான் என்பது பதியப்படவேண்டிய நிதர்சனமான உண்மை.

# உலக வரலாற்றில் விடுதலைப் புலிகளின் மாலதி படையணி

**87**

பதுங்கிச் சூடுகளுக்கு பதில் கொடுத்தோம். வேலியெரிப்பு திரும்ப எரித்தோம். இப்படி இராணுவம் எமக்கு எதைச் செய்யமுனைந்ததோ, அதனையே அவர்களுக்கும் திருப்பிச் செய்தபோதுதான் அதன் விளைவை அவர்களால் புரிந்துகொள்ள முடிந்தது.

இப்போது ஒரு பேருண்மை புரிந்ததுபோல் இருந்தது. 1958இல் அடித்துத் துரத்தப்பட்டோம். 1977இல் துரத்தப்பட்டோம். 1983இல் எல்லாவற்றையும் இழந்து துரத்தப்பட்டோம். நாம் உறவுகளை, சொத்துக்களை எல்லாவற்றையும் இழந்தபோது இழப்புக்கள் எப்படி இருக்குமென்பது அரசுக்குத் தெரிந்திருக்கவில்லை.

வரலாறு தன்னைப் புதுப்பித்துக் கொள்ள பூநகரியில், முல்லைத்தீவில், கிளிநொச்சியில்என ஆயிரக்கணக்கில் அவர்களுக்கு நாம் இழப்புக்களை ஏற்படுத்தியபோதுதான் தாம் செய்த கொடுமையை அவர்களால் உணர முடிந்தது. ஒரு கன்னத்தில் அறைந்து அதன் விளைவாக மறுகன்னத்தில் வாங்குவதைவிட, தாம் அறையாமலே இருக்கலாம் என்ற உண்மை சிங்களத்துக்குப் புரிந்திருக்கும். அடிப்பவர்களுக்குத் திரும்ப அடிக்கத்தான்வேண்டும் என்பது தமிழர்களுக்கும் புரிந்தது.

சிறிது காலத்தின்பின் சாவகச்சேரிப் பகுதிக்கு கட்டளைகளை வழங்கிக்கொண்டிருந்த கேணல் தீபன் பளைப் பகுதிக்கு மாற்றப்பட, சாவகச்சேரிப் பகுதியை கேணல் சொர்ணம் பொறுப்பெடுத்துக் கொண்டார். தொடர்ந்து இதுவரை நாளும் களமுனைக்குச் சற்றுப்பின்னே கட்டிடப் பகுதி வேவு பற்றிய பயிற்சி பெற்றுக்கொண்டிருந்த வேவு அணிகள், தமது பயிற்சியை முடித்து முன்னரங்குக்கு வந்தன. படையினரதும் எம்மவரினதும் முன்னணி நிலைகளுக்கிடையிலான சூனியப் பகுதியிலே இவர்களது பாதங்கள் பதியத் தொடங்கின.

அதேநேரம் கூடவே துயரமான நினைவுப் பதிவுகளைத் தன்னுள் தாங்கியவாறு ஜூலை மாதம் வந்தது. சிங்கள அரசை விழி பிதுங்கவைக்கும் கரும்புலிகள் நாளுக்கு இன்னும் இரண்டொரு பகல்கள் இருந்தன. நாட்கள் நகர்ந்தன என்பதைவிட பறந்தன எனச் சொல்லலாம். அவ்வளவு வேகம். தொடர்ச்சியான வேலை நாட்களை விழுங்கிக்கொண்டிருக்க, நான்காம் திகதி மாலையாகி மெல்ல இருள் கவிகிறது. மாலதி படையணியின் துணைத்தளபதியாக நின்று கட்டளைகளை வழங்கிக் கொண்டிருந்த லெப்.கேணல் நிஸ்மியா டச்சு வீதியிலுள்ள தனது கட்டளை மையத்தில் நின்றுகொண்டிருந்தார். கூடவே காவியா உட்பட இன்னும் பல போராளிகள். சற்று முன்னர்தான் களமுனை அணியுடன் கதைத்துவிட்டு தளம் வந்திருந்தார். அங்கு எதிர்பாராத விதமாக படையினரின் எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவடைய நேரிட்டது.



அது அவருக்காகவென்ற வந்த எறிகணையாகத்தான் இருக்க வேண்டும். இல்லையென்றால் எப்படி கட்டளைமையப் பதுங்ககழியினுள் நின்றவரின் உயிர்த்துடிப்பை சுவரில் மோதி வெடித்த எறிகணையின் துண்டொன்று நிறுத்தியிருக்கமுடியும். இப்போதும் கூட ஏற்றுக்கொள்ள கடினமாகத்தான் இருக்கிறது. அமைதியான, உறுதியான, அப்பழுக்கில்லாத அந்த வீரமகளின் வித்துடலைக் கண்டபோதும்கூட நம்ப முடியவில்லை. ஏனெனில் அப்போதும் அமைதியாகத் துயின்றதுபோலத்தான் இருந்தது அவரது முகம்.

தனது ஆரம்பப் பயிற்சியை முடித்துக்கொண்டபின் உடனேயே புலனாய்வுத்துறையில் இணைக்கப்பட்டார். அங்கு குறிப்பிட்ட காலம்வரை பணியாற்றினார். அதேவேளை மகளிர் படையணியிலுள்ள மிகத் திறமையானவர்களைத்தேர்ந்தெடுத்து சிறப்பு அணிஒன்றுஉருவாக்கப்பட்டது. அவ்வாறு திறமையடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டவர்களில் நிஸ்மியாவும் ஒருவர். இயல்பாகவே கடின பயிற்சியையும் இலகுவாகச் செய்யும் தகைமை அவரிடமிருந்தது. இதன்மூலம் சிறப்பு அணியில் இடம்பிடித்து தனது தாக்குதல், பயிற்சித் திறமைகளை வளர்த்துக் கொண்டார்.

தொடர்ந்து மணலாற்றில் காட்டுச் சமருக்கேற்ற வகையில் மகளிர் அணி ஒன்று தயார்ப்படுத்தப்பட்டபோது பயிற்சியாசிரியராகத் தெரிவு செய்யப்பட்டு இவரும் அனுப்பப் பட்டார்.

பின்னர் 1993இன் நடுப்பகுதியில் கல்விக் குழுவில் இணைக்கப்பட்டார். இங்கும் அவருக்குக் கற்பித்தற் பணி காத்திருந்தது. இத்தோடு நின்றுவிடாது. அவ்வவ்போது நடைபெறுகின்ற தாக்குதல்களிலும் கலந்துகொண்டதன் மூலம் தனது திறமையை மெருகூட்டிக்கொண்டார். ஆனாலும் நிரந்தர களமுனை வாழ்க்கையே எப்போதும் அவரது விருப்புக்குரிய ஒன்றாக இருந்தது.

சூரியக்கதிர்-1எதிர்நடவடிக்கைக்காக இவர் தாக்குதலணியோடு இணைக்கப் பட்டார். அந்தச் சண்டையில் சிறந்த முறையில் பங்காற்றியிருந்தார். சண்டை முடித்துங்கூட அரசியற் பிரிவுக்குப் போகும் விருப்பம் இல்லாதிருந்தார். அதன்பின்னும் ஒரு தாக்குதலுக்கான பயிற்சி நடவடிக்கையில் கலந்துகொண்டவர் 1996இல் அரசியல்துறைமகளிர்பிரிவின் பொறுப்பாளராகப் பொறுப்பேற்றார்.

அரசியற் பணி புரிந்தபோதிலும் சண்டைத்திறமை எப்போதும் இவருடன் கூடவே இருந்தது. இடையிடையே தாக்குதல்களுக்கு வந்துபோன வேளைகளில்கூட கொம்பனிக் கட்டளை அதிகாரியாகவே செயற்படுமளவுக்கு போர் அனுபவம் இவருக்கு இருந்தது.

களமுனையை வழிநடத்திக் கொண்டிருந்த நிஸ்மியா தன் பணியை முடித்துக்கொண்டு வித்துடலாக கிளாலி நீரேரியைக் கடந்து கொண்டிருந்தார்.

அந்த மண் கும்பிகளின்மேல் ஏறி நின்றால் கடல் அழகாகத் தெரியும். அலைகள் அடிக்கும் ஓசை எப்போதுமே காதில் வந்து விழுவது மனதுக்கு இனிமையாகவே இருக்கும். நடந்தால் கால்கள் மணலுக்குள் புதைந்துகொள்ளும். பாதணிகள் மணலை தலைக்கு மேல் பறக்க வைக்கும். நாகர் கோவில் பகுதி இயற்கை அழகு நிறைந்தது. படையினரின் தளமாக அது மாறிய நாளிலிருந்து அந்த இயற்கைஎவராலும் ரசிக்கப்பட முடியாததாகியிருந்தது.

யாழ் மாவட்டத்துள் நின்ற சிறீலங்காப் படைகளுக்கு பல முனைகளில் நாம் நெருக்கடியைக் கொடுத்துக்கொண்டிருந்தோம். அவர்களுடைய படைத்தளங்கள் அனைத்துமே இப்போது எமது எறிகணை செலுத்திகள் எட்டக்கூடிய தூரவீச்சு எல்லைக்குள் வந்துவிட்டிருந்தன. இது உண்மையில் படைத்தரப்பின் இருப்புக்குப் பெரும் சவாலாகவே இருந்தது. எங்களை எந்த முனையிலாவது பின்தள்ளிவிட அவர்கள் எல்லா முனைகளிலும் ஒரே நேரத்திலும், வெவ்வேறு நேரத்திலும் முயற்சிகளைச் செய்து கொண்டேயிருந்தனர். அவற்றை இழப்புக்களுடனும், இழப்புக்களின்றியும் நாம் முறியடித்துக் கொண்டிருந்தோம்.

பளை தொடங்கி நாகர்கோவில் கடற்கரைவரையிலான நீண்ட பகுதியில் முன்னரங்க நிலைகளமைத்துக் காத்திருந்தோம். அப்போதும் தொடராக வேலைகள் காத்திருந்தன. ஓலை வெட்ட, கம்பு எடுக்க, வேலி அடைக்க என்று எத்தனையோ வேலைகள்.

2000.07.04 அன்று அதிகாலை வழமைபோலவே கலைக்குயிலின் பிளாட்டூன் ஆயத்தநிலையில் நின்றது. அருகிலேயே கீர்த்தியின் பிளாட்டூன். தனது காவல் உலாநேரம் முடிந்து. அப்போதுதான் PK LMGயின் பொறுப்பாளரான கப்டன் அரசியை மாற்றிவிட்ட கீர்த்தி அவரை ஒருமுறை சுற்றிப்பார்த்து வரும்படி விட்டிருந்தார்.

தொடர்வான்...

### தமிழீழ வரலாற்றில் தடம் பதித்தவர்கள்

| இல | பெயர் | சொந்தப்பெயர் | மாவட்டம் | வீரச்சாவு | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 553. | 2ம்.லெப்.அமுதரசி | சித்திரகுமாரி சிவலிங்கம் | மன்னார் | 1998.11.20 | கிளிநொச்சி |
| 554. | 2ம்.லெப்.நகையொளி | வைதேகி ஞானபண்டிதர் | யாழ்ப்பாணம் | 1998.12.03 | கிளிநொச்சி |
| 555. | வீ.வே.சங்கீதா/தமிழ்மொழி | சிறீதேவி சிறீஸ்கந்தராசா | முல்லைத்தீவு | 1998.12.12 | பரந்தன் |
| 556. | வீ.வே.ஈழவள் | மாலா பாலச்சந்திரன் | திருகோணமலை | 1998.01.16 | பரந்தன் |
| 557. | லெப்.தயாரதி | சீத்தா தங்கராசா | கொழும்பு | 1998.01.30 | பரந்தன் |
| 558. | கப்டன்.வெற்றிச்செல்வி | [illegible] | வவுனியா | 1998.01.30 | பரந்தன் |
| 559. | வீ.வே.[illegible] | [illegible] அமலதாஸ் | யாழ்ப்பாணம் | 1999.03.03 | பரந்தன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நடைபாதை அரசியல்

கொழும்பு மாநகர் உள்ளடங்கலான நகரங்களின் நடைபாதைகளில் ஜோதிடம் என்னும் பெயரில் குறப்பெண்கள் பலர் "தம்பிக்கு வெளியூர் போறது கைகூடும்" எனவும் இன்னும் பலவாறாகவும் வீதியில் வோவோர் வருவோரின் மனப்போராட்டங்களை நாடிபிடித்துப் பார்த்துக்கூவியழைப்பதன் மூலம் ஜோதிடத்தையே பொய்ப்பிக்கும்விதமாகவும். கொச்சைப்படுத்தும் பாணியிலும் அவர்களிடம் கரங்களை நீட்டிச் சாஸ்திரங்கேட்கும் பல்வேறு வயதுகளைக்கொண்ட சகல தரப்பான ஆண்கள். பெண்கள் அனைவரினதும் மனப்போராட்டங்களுக்கு ஒத்தடம் கொடுப்பதுபோல எதிர்காலப் பலன்களைக் கூறிப் பவ்வியமாகக் கூறிப் பிழைத்துக்கொண்டும் விடுகின்றார்கள். இங்கே சாஸ்திரமானது நடைபாதையளவுக்குக் கீழிறங்கி வந்து ஒரு சிலரின் அன்றாடப் பிழைப்புக்கு உறுதுணையாகவுமுள்ளது. இவ்வாறே வடக்கு-கிழக்குத் தமிழ் மக்களைத் தற்போது பிரதிநிதித்துவப்படுத்திக்கொண்டிருக்கின்ற தமிழ்த்தேசியக்கூட்டமைப்பும் நடைபாதைச் சோதிடத்துக்கு ஒப்பானதாகத் தமிழ்த்தேசியத்தையும் மாற்றியமைத்துள்ளது. சோதிடமானது நடைபாதையளவுக்குக் கீழிறங்கிக் கொச்சைப்படுத்தப்படுவதற்கும். பொய்யாக்கப்படுவதற்கும் குறப்பெண்கள் காரணமாக இருப்பதுபோல தமிழ்த்தேசியமும் நடைபாதையளவுக்குக் கீழிறங்கிக் கொச்சைப்படுத்தப்படுவதற்கும் போலியாக்கப்படுவதற்கும் சர்வதேச முகாமுக்குள் ஏகாதிபத்திய. முதலாளித்துவ நலன்பேணும் தமிழ் அரசியல் தலைவர்களே காரணமாகவிருக்கின்றார்களெனலாம். குறமாதரின் வறுமை எவ்வாறு சோதிடத்தை நடைபாதைச் சோதிடமெனக் கொச்சைப்படுத்தியதோ அவ்வாறே தமிழ் அரசியல் தலைவர்களின் ஏகாதிபத்தியம். முதலாளித்துவ வர்க்க நலனும் தமிழ்த் தேசியத்தை நடைபாதைத் தமிழ்த் தேசியமெனக் கொச்சைப்படுத்தியதெனலாம்.

அக்காலத்தில் தமிழ்க் கிராமங்களில் நிலபுலன்களோடும். கால்நடைகளோடும் வசதிமிகுவாழ்வைமேற்கொண்ட உயர்சைவ இந்து வேளாளர்களான கமக்காரர். சாதியால் தீண்டாமைக்காளாக்கப்பட்ட பிரிவினர்களில் ஒரு பிரிவினருக்குள் இருந்த பெண்களை மூத்தபள்ளி. இளைய பள்ளியென வகைபிரித்துத் தமது வைப்பாட்டிகளாக வைத்திருந்தமையோடு அவர்களுடைய இச்செயலுக்குத் தமிழ்க் கடவுளான அழகன் முருகனின் குறமாதைப் புணர்வோனே! என்னும் துதிப்பாடலும் நியாயங்கற்பிக்கக்கூடியளவுக்கு இருந்ததெனலாம். இந்நியாயங்கற்பித்தலின் ஓர் அம்சமாகவே இலங்கைச் சட்டக் கல்லூரியில் பயின்று நியாயவாதியாக ஆனதோடு பின்னாளில் சர்வதேச முகாமுக்குள்ளும் இலங்கை நாட்டுக்குள்ளும். ஏகாதிபத்திய முதலாளித்துவ நலன் பேணிக்கொண்டே தமிழர் உரிமை தொடர்பில் சட்டவாதஞ் செய்த இருபெரும் தமிழ் அரசியல் கட்சிகளின் இலங்கைத் தமிழரசுக்கட்சி. அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி ஆகிய இரு அமைப்புக்களும் இணைந்து உருவான தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவராக நியமிக்கப்பட்டவருமான அமரர் முருகேசு சிவசிதம்பரம் அவர்களின் தந்தையரான உடையார் முருகேசு அவர்களும். குறமாதைப் புணரும் குகன்-சற்குமரேசன் பாணியில் வைப்பாட்டி வைத்திருந்தமையுந் தெரிந்ததே. அன்னாரின் மனைவியின் புதல்வரான சிவசிதம்பரம் அவர்கள் உடுப்பிட்டித் தொகுதியின் தமிழ்க் காங்கிரஸ் சார்பான நாடாளுமன்ற உறுப்பினராக நீண்ட காலமாகத் தெரிவு செய்யப்பட்டமையோடு. பின்னாளில் அவர் தமிழர் விடுதலைக்கூட்டமைப்பின் ஸ்தாபிதத்தோடு அதன் தலைவராகவும் நியமிக்கப்பட்டுச் ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்திற்கு நல்லூர்த் தொகுதியின் உறுப்பினராகவும் 1977ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலின்போது தெரிவாகியுமிருந்தார்.

இன்று அவரது சொந்த ஊரான கரவெட்டி நெல்லியடியில் சிலை வடிக்கப்பட்டு அன்னார் கௌரவிக்கப்பட்டிருந்தாலுங்கூட ஆயுதப் போராட்டத்தின் உச்சக்கட்டத்தின்போது கொழும்பிலிருந்தவாறு யாழ்ப்பாண மக்களுடைய முகங்களில் விழித்துக்கொள்ள முடியவில்லையே எனப் பெரிதாகக் கவலை வெளியிட்டிருந்த அமரர் சிவசிதம்பரம் அவர்கள் இவ்வாறாகக் கருத்து வெளியிட்டு ஒரு சில மாதங்களுக்குள்ளேயே, ஸ்ரீலங்கா அரசானது உள்ளூராட்சித் தேர்தலுக்கான அறிவித்தலை விடுத்தபோது டக்ளஸ் தேவானந்தா அவர்களோடு கூட்டுச்சேர்ந்து வடக்கின் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் போட்டியிடுவதற்கு முகமூடி அணிந்துகொண்டு டக்ளஸ் அவர்களிடம் மிகவும் வெட்கக்கேடான நிலைக்குத் தன்னைக் கீழிறக்கிக்கொண்டு மடிப்பிச்சை யாசித்து நின்றமையும் அதற்குத்தேவானந்தா மறுத்து நின்றமையும் அதன் பின்னர் சிவா அவர்கள் முகமூடியை அகற்றிவிட்டு யாழ்ப்பாண மக்களுடைய முகங்களில் விழிக்காமல் கொழும்பு திரும்பியமையுந் தெரிந்ததே. இவ்விடயத்தை ஏன் இவ்விடத்தில் குறிப்பிடவேண்டுமெனில் இன்றைய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பாரின் நடைபாதை அரசியலுக்கு வித்திட்டவை முன்னால் ஐ.தே அரசாங்கத்தின் துணைச் சபாநாயகரான சிவசிதம்பரம் போன்றவர்களின் வெட்கக்கேடான மேற்றரப்பட்ட நடவடிக்கைகளேயெனலாம்.

எனவே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பார் தற்போது தமிழ்த் தேசியத்தை நடைபாதைக்கு வம்புக்கிழுத்து மேற்கொள்ளும் வெட்கங்கெட்ட அரசியல் அவர்களால் சுயமாக மேற்கொள்ளப்படுமொன்றல்ல. இன்று சிலை வடிவில் கௌரவத்தைப் பெற்றுக்கொண்டிருக்கின்ற அவர்களுக்கு முன்பிருந்த தலைவர்களிடமிருந்து பெற்ற பயிற்சியின் பெறுபேறாகவே அவர்களும் நடைபாதை அரசியலைச் சிறிதளவேனும் மனக்கூச்சமின்றி அட்டகாசமாக மேற்கொண்டு வருகின்றார்களெனலாம்.

இவ்வாறான நடைபாதை அரசியலுக்கு ஆரம்ப எடுத்துக்காட்டாகப் பிரபாகரன் அவர்கள் தமிழ் மக்களை வாக்களிக்கும்படி கோரிநின்ற ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்துக்கான தேர்தலில் அவரது கோரிக்கைக்கு இயைபாகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குத் தமிழ் மக்கள் வாக்களித்தமையால் மிகவும் இலகுவாகப் பல புதுமுகங்கள் உள்ளடங்கலாகப் பழைய முகங்களான சம்பந்தன், மாவை சேனாதிராஜா ஆகியோரும் ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தின் ஆசனங்களில் ஒய்யாரமாக வீற்றிருந்து களிப்புறக்கூடியதாகவுமிருந்தது. இந்த நாடாளுமன்றக் குழுவில் தமிழ்த்தேசியக் கொள்கைவாதியான ஈழவேந்தன் அவர்கள் இடம்பெற்றிருந்தபோதுங்கூட பின்னர் தொடர்ச்சியாகச் ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தில் அங்கம் வகிப்பதற்கு மனக்கூச்சமடைந்ததனாற்போலும் மூன்று மாதங்கள் நாடாளுமன்ற அவையைப் புறக்கணித்தமையால் தன்னிச்சையாகவே தான் வகித்த நாடாளுமன்ற உறுப்பினர்ப் பதவியை இழந்திருந்தார் என்பதுந் தெரிந்ததே. ஈழவேந்தன் அவர்களுடைய பதவி இழப்போடு 1965ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சரவையில் இலங்கைத் தமிழரசுக்கட்சி பங்கேற்றமையால் அதிருப்தியடைந்த அக்கட்சியின் தங்க மூளை என வர்ணிக்கப்பட்ட தீவுப் பகுதி நவரத்தினம் அவர்கள் கனடாவில் இருந்தவாறே பிரபாகரனின் அனுசரணையுடன் வேற்றுநாடான ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்துக்கும் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உடனடியாகப் பதவி துறந்து மானங்காக்க வேண்டுமென்னும் கருத்து வெளியிட்டமையை ஒப்புநோக்கும்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாரின் ஸ்ரீலங்கா நாடாளுமன்றப் பிரசன்னமொன்றே அவ்வமைப்பின்தொடர்ச்சியானநடைபாதை அரசியலுக்குக் கால்கோளிட்டதெனலாம்.

1965ஆம் ஆண்டு இலங்கையை ஆளக்கூடிய கட்சிகளிலொன்றான ஐக்கியதேசியக் கட்சியின் அமைச்சரவையில் தமிழரசுக்கட்சியானது இணைந்து கொண்டமையால் அக்கட்சியின் ஸ்தாபகத் தலைவர் எஸ்.ஜே.வி செல்வநாயகம் அவர்களோடு முரண்பட்டுத் தமிழர் சுயாட்சிக் கழகம் என்னும் புதிய கட்சியை ஆரம்பித்து ஊர்காவற்றுறைத் தொகுதியிலே 1970ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலிலே தமிழரசுக் கட்சியை எதிர்த்துநின்றபோது. தீவுப் பகுதியைச்சொந்த இடமாகக்கொண்டவரும் சிவசுந்தரம் என்பாருக்குப் பின் கிளிநொச்சித் தொகுதிக்கான தமிழரசுக் கட்சி சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினராக அங்கம் வகித்தவருமான பண்டிதர் கா.பொ.இரத்தினம் அவர்களை நவரத்தினம் அவர்களுக்கு எதிராகத் தீவுப்பகுதிக்கு மாற்றிப்போட்டியிட வைத்து நவரத்தினம் அவர்களுடைய நாடாளுமன்ற வாழ்வுக்கு இலங்கைத் தமிழரசுக்கட்சி முற்றுப்புள்ளிவைத்திருந்தது.

தமிழரசுக்கட்சியினால் பல்லாண்டுகளாகத் தங்க மூளை என வர்ணிக்கப்பட்டு ஏத்தப்பட்டிருந்த நவம் அவர்களை அக்கட்சியே 1970இல் ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்திலிருந்து வெளியே தூக்கி வீசியதன் மூலம் அன்னாரைத் தகர மூளை ஆக்கியமையே அக்கட்சியின் ஆளுகைக்குள் பேசப்படும் தமிழ்த்தேசியமானது வெறும் வெத்துவேட்டான நடைபாதை அரசியலுக்குப் பச்சை விளக்குக் காட்டியதெனலாம்.

இவ்வாறாகத் தீவுப்பகுதி நவரத்தினம் அவர்களின் தங்க மூளையைத் தமது நடைபாதை அரசியலுக்குத் தடையாகவிருந்த ஒரே காரணத்திற்காக மட்டும் தகர மூளையாக்கித் தமிழ்த் தேசியத்தை வெளிவெளியாகவே கொச்சைப்படுத்திய இலங்கைத் தமிழரசுக் கட்சி எஸ்.ஜே.வி அவர்களின் 1965இன் அடிப்படை நிலையிலே நின்று ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்துக்கான தேர்தலில் போட்டியிடும் இக்கட்டான நிலைக்குப் பிரபாகரனும் ஆளானபோது அந்நிலையைத் தமது நடைபாதை அரசியலுக்கு ஆயுதப் போராட்டத்தின் பின்னடைவின் பின்னணியின் பாற்பட்டதான நிலையில் கச்சிதமாகப் பயன்படுத்தியும் கொண்டது.

தமிழரசுக் கட்சியின் ஆளுகைக்குள் அமைந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பிரபாகரனுடைய அனுசரணையுடனான ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்துக்கான ஆரம்ப வெற்றியே சுனாமி அனர்த்தங்களுக்கு மத்தியிலும், ஸ்ரீலங்கா நாடாளுமன்ற அமர்வில் அவ்வமைப்பின் தலைவர் திருமலை.இராஜவரோதயம் சம்பந்தன் அவர்களினால் தெரிவிக்கப்பட்ட இடைக்கால நிர்வாகம் உடனடியாக அமுலுக்குக் கொண்டுவரப்படாவிட்டால் நாடு பிரியும் ஆபத்தைத் தவிர்க்க முடியாது போய்விடும்" என்னும் கருத்தினால் தமிழ்த்தேசியத்துக்கு ஆப்பு வைக்கப்பட்டமைக்கு முதற்படியாக விளங்கியதெனலாம்.

சுனாமி அனர்த்தங்களுக்கு மத்தியில் நாடு பிரிவதை ஆபத்தெனச் ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தில் கொக்கரித்துநின்ற இரா.சம்பந்தன் 1965இல் தமிழ்த்தேசிய நடைபாதை அரசியலுக்கு எதிராக நின்று அரசியல் வானில் அப்புறப்படுத்தப்பட்ட தீவுப்பகுதி நவம் போன்ற தமிழ்த்தேசிய நடைபாதை அரசியலுக்கு எதிராக நிற்கக்கூடிய புதிய தலைமைத்துவத்தை அரசியல் முகாமிலிருந்து அப்புறப்படுத்தியிருந்தாரெனவே கூறவேண்டும்.

இதன்பின் ஈழவேந்தனின் குறுகிய கால நாடாளுமன்ற அங்கத்துவமும் அதன்பின்னரானதன்னிச்சையானஅவரது பதவியிழப்பும் சம்பந்தன் தலைமையிலான தமிழ்த்தேசியத்தின் எதிர்கால நடைபாதை அரசியலுக்கு வெளிச்சம் இருப்பவையாகவே விளங்கினவெனலாம்.

சுனாமி அனர்த்தங்கள் இடம்பெற்ற போது சம்பந்தன் தலைமையிலேயே ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தின் உறுப்பினர்களாக அம்மன்றத்திலே அமரிக்கையாகத் தோற்றியவர்களின் தமிழ்த்தேசிய அரசியலுக்கு வெற்றி மமதையிலே நாடு பிரிவது ஆபத்தானது என்னும் அபத்தமான கருத்தே கால்கோளிட்டு நின்றதெனலாம். அன்னாரின் நாடு பிரிவது ஆபத்தானது என்னுங் கருத்துக்கு மாற்றீடாக எவ்வகையான ஆபத்தெனத் தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர் வீரசிங்கம் ஆனந்தசங்கரி அவர்கள் மனச்சாட்சிக்கு இயைந்ததாகவில்லாவிட்டாலுங்கூடத் தனிப்பட்ட அரசியல் குரோதங்காரணமாகவேனும் வினாத் தொடுக்காமல் விட்டமையையிட்டு நடுநிலையாளருக்கு மிகுந்த துக்கமே.

மேற்கூறியவாறான சம்பந்தன் அவர்களுடைய பெரும்போக்கான ஸ்ரீலங்கா நாடாளுமன்ற அபிப்பிராயத்துடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குள் நடைபாதை அரசியல் கீழ்வரும் வகையறாக்களாக நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்துகொண்டுவந்ததெனலாம்.

அதில் முதலாவதாகவும். பிரதானமானதாகவும் குறிப்பிடவேண்டியது மாகாணசபைகளுக்கான தேர்தலின்போது வடமாகாணசபையின் முதலமைச்சர் வேட்பாளராக யாரைத் தெரிவுசெய்வது என்பது பற்றியதாகும். மாகாணசபைத் தேர்தலிற்கான நியமனத் தாக்கல் செய்யப்படவேண்டிய நிலையில். தமிழரசுக்கட்சியின் இளைஞர் பிரிவான தமிழ் இளைஞர் பேரவையின் உறுப்பினராகத் தனது அரசியல் வாழ்வை ஆரம்பித்துச் சிறையிலும் இருந்த மாவை சேனாதிராஜா அவர்களை முதலமைச்சர் வேட்பாளராக நியமிக்கும் நிலை வெளித்தெரிந்தமையால் அவரை அத் தெரிவிலிருந்து அகற்றித் தாம் தெரிவுசெய்யப்படுவதற்காகப் பல முகங்கள் தனிநபர் காழ்ப்புணர்வின் காரணமாக போட்டியிட்டதனாலும் இவ்வாறான நிலையொன்று இருப்பதை அன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் உணர்ந்திருந்ததனாலும் அவரது ஆட்சியில் அமைச்சராகவிருந்த வாசுதேவ நாணயக்கார அவர்களின் சம்பந்தியும். இளைப்பாறிய நீதியரசருமான விக்னேஸ்வரன் அவர்களை வடமாகாணசபையின் முதலமைச்சர் வேட்பாளராக நியமிக்குமாறு சம்பந்தனுடன் நாடாளுமன்றப் போசனச்சாலைக்குள் குசுகுசுத்தபோது வேண்டிக்கொண்டதனாலுமே தமிழ் மக்களின் துன்ப துயரங்களுக்கு வெகு தொலைவில் இருந்த விக்னேஸ்வரன் அவர்கள் முதலமைச்சர் வேட்பாளராக நியமிக்கப்பட்டிருந்தாரெனலாம். எனவே வடமாகாணசபையின் முதலமைச்சர் வேட்பாளர் நியமனத்துக்கு ஆதார சுருதியாக விளங்கிய சம்பந்தன்-மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் கூட்டிணைவின்பால் அமைந்த நாடாளுமன்றக் கன்ரீன்(Canteen) முடிவும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உருப்படியான பயனற்ற நடைபாதை அரசியலின் மேலுமொரு அம்சமெனலாம்.

11ஆம் பக்கம் பார்க்க...

**கருணைக் கண்ணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய நாடுகளின் தலையீடும் தமிழ் மக்களின் தீர்வுத் திட்டமும்





இலங்கையைப் போர்த்துக்கேசர். ஒல்லாந்தர். ஆங்கிலேயர்கள் ஆகிய அந்நியர்கள் ஆண்டபின் 1948ஆம் ஆண்டு மாசி 04ஆம் திகதி அந்நாட்டு ஆட்சி உள்நாட்டவர்கள் வசமாகியது.

இலங்கையை அந்நியர் தமது ஆளுகைக்குள் ஆட்படுத்த முன்னர். கண்டி இராச்சியம். கோட்டை இராச்சியம். கரையோர இராச்சியமென மூன்று சிங்கள இராச்சியங்களும். யாழ்ப்பாண இராச்சியம். வன்னி இராச்சியமென இரண்டு தமிழ் இராச்சியங்களும் இருந்தன.

இதனால் இலங்கையை இறுதியாக ஆண்ட பிரித்தானியர் 1948இல் இந்நாட்டுக்குச் சுதந்திரத்தைக் கையளித்த போது அன்றைய காலத்தில் தமிழர் தரப்பினரின் தலைவர்களாக விளங்கியிருந்த சேர்.பொன்.இராமநாதன். சேர்.பொன். அருணாசலம் போன்றோர் பாரத சுதந்திரப் போராட்டத்தின்போது ஜின்னா அவர்கள் பிடிவாதமாக நின்று பாகிஸ்தானைத் தனி நாடாகவே பிரித்தானியாவிடமிருந்து பெற்றதைப்போல போர்த்துகேசரின் ஆட்சியின்போது இழந்த தமிழர் தாயகத்தைப் பிரித்தானியரிடமிருந்து பெற்றுக்கொள்ளத் தவறியமை மிகவும் துரதிட்டவசமானது.

இதனால் சுதந்திர இலங்கையில் பெரும்பான்மையினமான சிங்கள மக்களுக்கும். சிறுபான்மையினமான தமிழ் மக்களுக்குமிடையில் அரசியல் பிரச்சினையானது உருவானதோடு அப்பிரச்சினையானது நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்துகொண்டும் வந்தது.

இவ்வாறான ஓர் இக்கட்டான நிலையில் தான் ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்கள் தமிழர் அரசியல் உரிமைகளைப் பெறும் நோக்கில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி என்னும் ஓர் அரசியல் கட்சியை ஸ்தாபித்தார். அன்னாரினால் இக்கட்சி ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதியிலிருந்தே தமிழ் மக்களின் அரசியல் தீர்வுத்திட்டந் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் தலையீடும் ஆரம்பித்துள்ளதெனலாம்.

மேலும் இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் ஐ.நா சபையானது காத்திரமான பங்கை வகிக்குமெனவும் அச்சபையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளை எடுத்தியம்புவதன் மூலம் அம்மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் இச் சபையானது முன்னின்று பாடுபடுமெனவும் ஆரம்பத்தில் பெரிதும் நம்பப்பட்டது. இப்பின்னணியில் இன்றுங்கூட இச்சபையின் தலையீடு இலங்கைத் தமிழர் விவகாரத்தில் பயன்படக்கூடியவொன்றாகவிருக்குமென்னும் அபிப்பிராயமொன்று இழையோடிக் கொண்டுதானிருக்கின்றது. ஆனால் இச்சபையானது இலங்கைத் தமிழர் பிரச்சினையின் தீர்வு தொடர்பில் வெறும் கேள்விச் செவியனாகவுள்ளதேயொழிய ஆக்கபூர்வமான தீர்வுத்திட்டம் எதையுமே இதுவரையில் அந்தரங்க சுத்தியுடன் முன்வைக்கவில்லை.

இச்சபையில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்கள் தனது தனித்துவம் மிக்க ஆங்கிலப் புலமையுடன் இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பில் ஆற்றிய உரை உலகப் புகழ்பெற்றமையும் அதன்காரணமாக அன்று தொடக்கம் இன்றுவரை அன்னார் பலராலும் வியந்து பாராட்டப்பட்டு வருவதுந் தெரிந்ததே. ஆனால் ஜி.ஜி அவர்களின் இலங்கைத் தமிழ் மக்கள் தொடர்பான ஐ.நா உரை தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு தொடர்பில் எவ்விதத்திலும் பயனளிக்கவில்லை. அதற்குப் பதிலாக அன்னாரின் அவ்வுரையில் உள்ளடங்கியிருந்த ஆங்கிலப் புலமையும் சட்ட நுணுக்கங்களும் அவருடைய தனிப்பட்ட துறை சார் அறிவாற்றில்களை விளம்பரப்படுத்தவே பயன்படுத்தப்பட்டிருந்தனவெனலாம்.

இவ்வாறாகத் தனிநபர் துறைசார் அறிவாற்றல்களை வெளிக்கொணர ஐக்கிய நாடுகளின் அவை மட்டுமல்ல இலங்கை நாடாளுமன்றமும் ஜி.ஜி உள்ளடங்கலான தமிழ்த் தலைவர்களுக்கு அசாதாரணமான வாய்ப்புக்களை அளித்திருந்தனவெனலாம்.

சிங்கள ஆளும் தரப்பினரிடமிருந்து சேர்.பொன்.இராமநாதன் அவர்கள் அன்று பெற்ற மரியாதை அவருடைய மூளையை இலங்கையின் தமிழினம் ஆண்ட பரம்பரையென்பதை உணராத அளவுக்கு மழுங்கடித்தமையோடு. தூர நோக்கோடு தமிழினத்தின் எதிர்காலத்தை எடைபோட இயலாத அளவுக்கு உறைநிலைக்கும் இட்டுச்சென்றது. இதன் பெறுபேறாக இலங்கை தேசத்தைவிட்டு இறுதியாக அகன்ற அந்நியரான பிரித்தானியருக்கு இலங்கையின் ஒரு பகுதியைத் தொன்றுதொட்டுத் தமிழர்களும் போர்த்துக்கேசரின் வருகைக்கு முதல் தொடர்ச்சியாக ஆட்சி செய்தார்கள் என்பதை எடுத்துக்கூறி சுதந்திரம் வழங்கச் சென்ற பிரித்தானியரிடமிருந்தே தமிழரின் பூர்வீகத் தாயகத்தை அவர்கள் கேட்டுப்பெறத் தவறியிருந்தார்கள்.

புலமைசார் தமிழ்த் தலைவர்களில் கணிதத்தில் பாண்டித்தியம் பெற்றவராக விளங்கிய பிரித்தானிய மகாராணியாருக்கே கணிதம் கற்பித்து அம்மகாராணியினால் கைலாகு கொடுத்து மதிப்பளிக்கப்பட்டதாகப் பிரலாபிக்கப்படும் சி.சுந்தரலிங்கம் என்பார் இலங்கை நாடாளுமன்றத்துக்கான வவுனியா உறுப்பினராக விளங்கியபோது கணித-விஞ்ஞானப் புலமையின் அடிப்படை இயல்பையே கொச்சைப்படுத்தும் விதமாக வன்னி வாழ் மக்களின் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையைக் கிண்டலடிக்கும் விதமாகத் தெரிவித்த கருத்துக்களினால் தான் அங்கம் வகித்த இலங்கை நாடாளுமன்றத்துக்கான வவுனியா ஆசனத்தையிழந்து யாழ்ப்பாணம் சென்றிருந்தமையோடு அதன் பின் சமூகம் தொடர்பிலான தமிழர் விடயங்களில் கடும் பிற்போக்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டதோடு தீண்டாமையைப் பேணும் விதமாகச் சத்தியாக்கிரக நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுமிருந்தார். அன்னாரின் இவ்வாறான நடவடிக்கைகள் அவருடைய கணிதப் புலமை தமிழரின் விமோசனத்துக்குச் சிறிதளவேனும் பயனளிக்க முடியாத நிலையில் அப்புலமையையே பொய்ப்பித்து நின்றதெனலாம். அவருடைய இச் சமூகம் சார்ந்த தமிழர் தொடர்பிலான நடவடிக்கைகள் சிங்கள ஆளும் வர்க்கத்திற்கு எதிரான தமிழர் ஐக்கியத்தைச் சிதைத்துச் சின்னாபின்னமாக்கியது என்னும் ஒரேயொரு காரணியே அவரது கணிதப் புலமை பொய்யாகிவிட்டது என்பதற்குத் தகுந்த சான்று பகர்வதாகவுள்ளது. இவ்வாறான பின்னணியில் அமைந்த தமிழர் தலைமைத்துவத்தில் எஸ்.ஜே.வி செல்வநாயகம் அவர்களின் வகிபாகம் சற்றே மாறுபட்டதாகவிருந்தபோதுங்கூட. அடிப்படையில் பெரியளவில் வேறுபாடானவொன்றாக இருக்கவில்லை. அன்னாரின் தலைமையின் கீழ் இடம்பெற்ற வெகுஜனப் போராட்டங்களின் காரணமாக அவரால் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியானது தமிழ் மக்களுக்குள் மிகுந்த செல்வாக்கைப் பெற்றிருந்தமையோடு இன்றுங்கூட வடக்குக்-கிழக்குத் தமிழ் மக்களுக்குள் அக்கட்சியினது இவ்வாறான செல்வாக்குத் தொடர்ந்தும் நீடித்துக்கொண்டேயிருக்கிறது.

எனினும் அக்கட்சியின் ஸ்தாபகர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்களும் 1965ஆம் ஆண்டு இடம்பெற்ற இலங்கை நாடாளுமன்றத்துக்கான பொதுத்தேர்தலில் ஆட்சி அமைத்த ஐ.தே.க ஆட்சியின் அமைச்சரவையில் தனது கட்சியையும் இணைத்துக்கொண்டதோடு அந்நாளில் அக்கட்சி சார்ந்த செனட்சபை உறுப்பினராக விளங்கிய திருச்செல்வம் என்பாரைத் தமிழரசுக்கட்சியின் அமைச்சுப் பொறுப்பிலும் அமர்த்தியிருந்தார். ஸ்தல ஸ்தாபன அமைச்சராகத் திருச்செல்வம் அவர்கள் பதவி வகித்த ஐ.தே.கட்சி அரசின் ஆட்சியிலேயே கிழக்கிலங்கையில் சிங்களக் குடியேற்றங்கள் தமிழர் தரப்புக் கட்சி எதனதும் எவ்வித எதிர்ப்புமில்லாமல் நிறுவப்பட்டதோடு. சில தொன்மை வாய்ந்த தமிழ் ஊர்களின் பெயர்களும் சிங்களப் பெயர்களாக உருமாற்றப்பட்டிருக்கின்றன.

ஆகவே தான் பிரித்தானியர் நாட்டிலிருந்து அகன்றுசென்றபோதிருந்த தமிழ்த் தலைவர்கள் தொடக்கம் இன்றுவரை இருந்துவரும் தலைவர்கள் அனை வருமே இலங்கை தமிழர் விமோசனந் தொடர்பில் தேசந்தழுவியளவில் உள்ளகமாக எதையுமே சாதிக்க முடியாதிருந்த வங்குரோத்தான நிலையில் இவ்விமோசனந் தொடர்பில் ஐ.நாவை நாடிச்செல்லும் மிகப் பரிதாபமான நிலைக்கு ஆளாகியிருந்தார்கள். ஆனால் ஐக்கிய நாடுகள் இப்பிரச்சினையின் நீடிப்பிலே தமது வல்லாதிக்க நலன்களைப்பேணும் விதமாகச் சுழியோடினார்கள். இன்றும் சுழியோடிக் கொண்டேயிருக்கின்றார்கள் அமரர் ஜி.ஜி. பொன்னம்பலம் காலம் தொடக்கம் இன்றைய இரா.சம்பந்தன் காலம்வரை இச்சாபக்கேடு தொடர்ந்தும் நீடித்துக் கொண்டேயிருக்கின்றது.

சுருங்கக்கூறிப் பெரிதாக விளங்கவைப்பின் யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட சங்கிலிய மன்னனுக்குப் பின்னரும் வன்னிப் பெரு நிலப்பரப்பை ஆண்ட பண்டாரவன்னியனுக்கு அடுத்ததாகவும் தமிழர் ஆட்சியை நிழல் ஆட்சி என்னும் மட்டத்திலாவது பிரபாகரன் ஒருவரால் மட்டுமே அமுலாக்கக்கூடியதாய் இருந்தது. எனவே இதன்பாற்பட்டு வெட்கித் தலை குனியவேண்டியவர்கள் அமரர்களாகிவிட்ட மெத்தப்படித்த தமிழ்த் தலைவர்கள் எனப்பட்டோரும் இன்றிருக்கும் மேதாவிலாசமுள்ள புதிய தலைவர்களுமே எனலாம்.

எனவே தமிழ்த் தலைவர்கள் எனப்படுவோரால் மொழியப்படும் தமிழ்த்தேசியத்தின் தொடர்ச்சியான வங்குரோத்துத்தனம் இன்றும் சோபையிழக்காத நிலையில் இதுவரை காலமும் இடம்பெற்றமை போலவே தமிழ் மக்களின் தீர்வுத்திட்டத்தில் ஐக்கிய நாடுகளின் தலையீடு தொடர்ந்தும் இருந்துகொண்டு தானிருக்கும். இவ்விடயத்தில் கல்வி கலாச்சாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் அங்கொன்றும் இங்கொன்றுமாக பலமைல்கள் இடைவெளிகளில் வீடுகளைக் கொண்டும் வேட்டையாடுதல். கால்நடை வளர்ப்பு. பயிர்ச்செய்கை போன்ற இயற்கையோடு இயைந்த தொழில்களை மேற்கொண்டும்வாழ்ந்தமக்களை ஆட்சிசெய்த பண்டாரவன்னியனுக்கு இயல்பாகவே இருந்த வெள்ளைத்தோலைப் பெரிதாக எடுக்காத மனோபாவம் சேர்.பொன்.இராமநாதன் தொடங்கி இன்றைய சம்பந்தன் போன்ற தலைவர்கள் வரை இல்லாமல் போனமை தமிழினம் ஒட்டுமொத்தமாக இழைத்த மாபாவத்தின் பெரும் அறுவடையே யெனக் கூறவும் வேண்டும்.

இவ்விடத்தில் தென்னாபிரிக்காவின் ஜோகனஸ்பேர்க் புகையிரத நிலையத்தில் காந்தியாருக்கு ஏற்பட்ட அனுபவமும் அதன் விளைவாக வெள்ளைத்தோல் பற்றிய அன்னாரின் கணிப்பீடும் எவ்வாறாக இருந்ததென்பதையும் நம்மவர்களுக்கு நினைவூட்டுவதும் வேண்டற்பாலானவொன்றே.

தமிழ் மக்களின் தீர்வுத்திட்டந் தொடர்பில் உலக வல்லாதிக்க ஐக்கிய நாடுகளிலொன்றான இந்தியாவின் தலைவர்கள் தேசத்தின் வடபகுதியைத் தமது பொருளாதாரக் கேந்திரமாக மாற்றுவதற்கான தன் முனைப்புடன் இராஜதந்திரக் காய்களை நகர்த்தி வருகின்றனர். யுத்தத்தில் தமிழ் ஈழ விடுதலைப்புலிகளை இல்லாதொழிப்பதற்காக இலங்கையின் அன்றைய மஹிந்த அரசுக்குச் சகல வழிகளிலும் பூரண உதவி ஒத்தாசைகளை வழங்கியிருந்த பாரத மத்திய அரசு யுத்த முறியடிப்பதற்குப் பின்னர் இலங்கைத் தமிழ் மக்கள் மீது கரிசனை கொண்டுள்ளது போல நடித்து வதிவிடங்களை இழந்த மக்களுக்கு வதிவிட வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தும் சீவனோபாயத்துக்கான முதலுதவிகளையும் புனர்வாழ்வுக்கான ஆதாரங்களை அனுசரித்தும் இலங்கையரசு தமிழ் மக்களை மீண்டும் தமது அடிமைச்சங்கிலியில் வரித்துக்கொள்வதற்கு புதிய கால்கோளிட்ட இந்திய அரசு இலங்கையின் வடபுலத்தை முழுமையாக விழுங்குவதற்கு காத்துக்கொண்டிருக்கிறது.

11ஆம் பக்கம் பார்க்க...

பிரபஞ்சன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை இறுதி யுத்தம்: இலங்கை இராணுவம் வென்றது எப்படி? பிரபாகரனின் இறுதி நாட்கள்

கடந்தவாரத் தொடர்ச்சி...

அன்று முழுதும் பிரபாகரனின் இருப்பிடம் பற்றி முற்றிலும் மாறுபட்ட பல்வேறு தகவல்கள் ஊடகங்களில் வெளியாகின. ஒரு தகவல், பிரபாகரன் முதியங்காட்டுக்குள் தப்பிச்சென்றுவிட்டார் என்றது.

பிரபாகரன், கடற்புலிகளின் தலைவர் சூசை, விடுதலைப்புலிகளின் உளவு அமைப்புத் தலைவர் பொட்டு அம்மான் ஆகியோர் கைப்பற்றப்பட்ட ஒரு அம்புலன்ஸில் ஏறித் தப்பிச்செல்லும்போது சுட்டுக் கொல்லப்பட்டனர் என்றும் அவர்களது உடல்கள் அடையாளம் தெரியாமல் எரிந்து போயின என்றும் இராணுவத்தைச் சேர்ந்த ஒருவரை மேற்கோள்காட்டி மற்றொரு தகவல். இந்தத் தகவல்கள் எவையுமே உண்மை இல்லை என்று பின்னர் தெரிய வந்தது.

ஒரு மூத்த இராணுவ அதிகாரி பின்னர் தெளிவுபடுத்தினார். ஏயார் மொபைல் பிரிகேடின் அம்புலன்ஸ் வாகனம் அது. அதனைத் தீவிரவாதிகள் கைப்பற்ற முயன்று தாக்கியபோது அது தீப்பிடித்து எரிந்தது.

எரிந்து நாசமான வண்டியின் உள்ளே ஓர் உடல் உள்ளது என்று படைவீரர்கள் தகவல் தெரிவித்தனர். அந்த உடல், பார்க்க பிரபாகரனின் உடலை ஒத்திருந்தது என்றனர். ஆனால் அந்தத் தகவல் தவறானது என்று நிருபணம் ஆனது.

ஆனால் இந்விளக்கம் வர நிறையத் தாமதம் ஆனது. எனவே 18 மே அன்று ஊடகங்களில் இருந்த நாங்கள் இந்தச் செய்தியைத் திரும்பத்திரும்ப ஒளிபரப்பிக் கொண்டிருந்தோம். இத்தனைக்கும் பாதுகாப்பு அமைச்சகமும் இராணுவமும் இந்தத் தகவலை அதிகாரபூர்வமாக உறுதி செய்ய மறுத்திருந்தன.

போர்முனையில் சுற்றிவளைக்கும் இராணுவத்திடமிருந்து தப்பிச்செல்ல விடுதலைப்புலிகளின் தலைமை செய்த அனைத்து முயற்சிகளையும் படைகள் தடுத்துவிட்டன. நாள் முழுவதும் போர் நடக்கும் பகுதியில் எஞ்சியுள்ள புலிகளைப் பிடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

6350க்கும் மேற்பட்ட விடுதலைப் புலிகளின் உடல்கள் கிடைத்தன. ஆனால் ஒவ்வொன்றும் யாருடைய உடல் என்று அடையாளம் காண்பதில் நிறையச் சிரமங்கள் இருந்தன. உளவு நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் அந்த வேலையில் இறங்கினர். தம்மிடம் உள்ள புகைப்படங்களைக்கொண்டு இறந்த ஒவ்வொருவரையும் கவனமாகப் பார்க்கத் தொடங்கினர்.

அன்று மாலைக்குள்ளாக, கொல்லப்பட்டதில் 30க்கும் மேற்பட்டோர் விடுதலைப்புலி அமைப்பின் மேல் நிலை, இடைநிலைத் தலைவர்கள் என்று இராணுவம் அடையாளம் கண்டு கொண்டது. ஆனால் பிரபாகரன், சூசை, பொட்டு அம்மான் ஆகியோர் எங்குமே காணப்படவில்லை.

எனவே கண்காணிப்பு தொடர்ந்து பலமாகவே இருந்தது. பிரபாகரனும் அவரது கூட்டாளிகளும் அங்கேதான் எங்கேயோ பதுங்கியுள்ளனர் என்பதை நன்கு உணர்ந்திருந்த படைத்தளபதிகள் ஒரு துளி கூடக் கவனம் சிதறிவிடக்கூடாது. துருப்புக்கள் கண்காணிப்பை தளர்த்திவிடக்கூடாது என்பதில் முனைப்பாக இருந்தனர். அடுத்த 12 மணி நேரம், மிகவும் முக்கியமானவை.

இலங்கையைப் பொறுத்தமட்டில் 19 மே 2009 மிக முக்கியமான நாளாக இருந்தது. காலை 9.30 மணிக்கு குடியரசுத் தலைவர் மகிந்த ராஜபக்ச நாடாளுமன்றத்தில் தன் உரையைத் தொடங்கினார்.

தமிழில் பேச ஆரம்பித்து அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தினார். ஆனால் ராஜபக்சவும் பிரபாகரன் பற்றி ஒன்றுமே சொல்லவில்லை. அதனால் இராணுவம் போரை முடித்துவிட்டதா என்ற கேள்விக்குப் பதில் ஏதும் கிடைக்கவில்லை.

ஆனால் யாருக்குமே தெரியாமல் அன்று அதிகாலையிலேயே 25 ஆண்டுகாலப்போர் அதன் உச்சக்கட்டத்தை அடைந்திருந்தது. ஆள்நடமாட்டம் இல்லாத ஒரு சதுப்புநிலக்காட்டில் கடும்போர் நிகழ்ந்திருந்தது.

18 மே இரவு முழுவதும், 19 மே அதிகாலையிலும் மேஜர் ஜெனரல் கமல் குணரத்னே, கர்ணல் ரவிப்பிரியா, லெப்டினண்ட் கர்ணல் லலாந்த கமகே ஆகியோர் கரய முள்ளிவாய்க்கால் தரைப்பாலத்தின் மீது எப்படி இறுதித் தாக்குதலைச் செய்வது என்று திட்டமிட்டபடி இருந்தனர்.

அதிரடிப்படையினர் அதற்கு முதல் நாளே பெரும்பகுதி சதுப்பு நிலத்தை முழுவதுமாகச் சோதனை செய்திருந்தனர். அன்று 8.30 மணிக்கு மிச்சம் உள்ள சதுப்பு நிலங்களை டாஸ்க்போர்ஸ் 8ம் 4ம் விஜயபா இன்பண்ட்ரி றெஜிமெண்டும் சோதனை செய்யத்தொடங்கினர்.

லெப்டினண்ட் கர்ணல் லலாந்த கமகேயுடன் 4வது விஜயபாவின் தளபதி லெப்டினண்ட் கர்ணல் ரோஹித அலுவிஹாரேயும்நேரடியாகப்படைகளுக்குத் தலைமை தாங்கி முன்னே சென்றனர்.

8 வீரர்கள் கொண்ட இரு குழுக்கள், 4 வீரர்கள் கொண்ட ஒரு குழு என மூன்று குழுக்கள் சதுப்பு நிலத்தில் நீரில் அமிழ்ந்தபடி தேடுதலைத் தொடங்கின.

சார்ஜண்ட் எஸ்.பி.விஜேசிங்க தலைமையிலான முதல் குழு சதுப்பு நிலத்தில் நுழைந்ததும் அவர்களை நோக்கி துப்பாக்கிக் குண்டுகள் எகிற ஆரம்பித்தன. நெஞ்சளவு நீரில், முள்புதர்களுக்குப் பின் வீரர்கள் பதுங்கவேண்டியிருந்தது.

ஒரு மணிநேரம் நடைபெற்ற துப்பாக்கிச் சண்டைக்குப்பிறகு, விஜேசிங்கவின் படை சுமார் 50 மீட்டர் தூரம் முன்னேறியது. அங்கே ஐந்து உடல்கள் கிடந்தன. இறந்தவர்கள் உடல்களில் பிஸ்டல்களும் ரிவால்வர் துப்பாக்கிகளும் கிடந்தன.

விஜேசிங்கவுக்கு உடனடியாகப் புரிந்துவிட்டது. அவர்கள் மிக முக்கியமான தலைவர்களுக்கு அருகில் இருக்கின்றார்கள். ஏனெனில் விடுதலைப் புலிகளின் உயர்மட்டத் தலைவர்களின் மெய்க்காப்பாளர்கள் மட்டுமே பிஸ்டல்களை வைத்திருக்கலாம்.

சார்ஜண்ட் உடனே தன் பிரிகேட் தலைவருக்கும் கமாண்டிங் அதிகாரிக்கும் தகவல் அனுப்பினார். சில நிமிடங்களுக்குள்ளாக இறந்த ஒருவரது உடல் வினோதனுடையது என்று கண்டுபிடிக்கப்பட்டது.

பிரபாகரனின் உள்வட்டப் பாதுகாப்பு அணியின் மூத்த மெய்க்காப்பாளர்களில் வினோதன் ஒருவர். "உடனேயே இது முக்கியமான கண்டுபிடிப்பு என்று எங்களுக்குத் தெரிந்துவிட்டது" என்று லலாந்த கமகே பின்னர் தெரிவித்தார்.

தங்கள் இறுதி இலக்குக்கு மிக மிக அருகில் வந்துவிட்டோம் என்று படைகளுக்குப் புரிந்துபோனது. மேஜர் ஜெனரல் கமல் குணரத்னே தன் அணியின் ஒவ்வொரு நகர்வையும் மிகவும் நெருக்கமாகப் பார்த்து வந்தார்.

அவர் உடனேயே சார்ஜண்ட் விஜேசிங்கவின் ஆட்களைத் தடுப்பு வியூகத்தில் நிற்கச் சொன்னார். தப்பிச் செல்லும் அனைத்து வழிகளையும் அடைக்குமாறு கூறினார்.

8 பேர் அடங்கிய தரைப்படைக் குழு ஒன்றும் நால்வர் அடங்கிய டாஸ்க் போர்சும் விஜேசிங்கவின் குழுவுக்குப் பக்க பலமாக உடனடியாக அனுப்பப்பட்டன. இந்த இரண்டாவது குழுவுக்கு சார்ஜண்ட் டி.எம். முத்துபண்டா தலைமை தாங்கினார்.

இந்த அணியினர் முன்னேறும் போது மீண்டும் துப்பாக்கிச்சூடு ஆரம்பமானது. கடுமையான துப்பாக்கிச் சண்டை நிகழ்ந்தது. ஒரு மணி நேரத்துக்குப் பிறகு சதுப்பு நிலக்காட்டில் அமைதி. இரு அணிகளும் மிகவும் மெதுவாகப் புதர்களுக்கு இடையே முன்னேறினர். 18 இறந்த உடல்கள் கிடைத்தன.

அதில் வேலுப்பிள்ளை பிரபாகரனும் ஒருவர். இலங்கை அரசை 30 ஆண்டுகளாகத் துன்புறுத்தி வந்தவர்.

அப்போது காலை 8.30 மணி. 19 மே 2009.

உடனே இராணுவத் தளபதிக்குத் தகவல் பறந்தது. ஆனால் உலகுக்குத் தகவலை அறிவிப்பதற்கு முன் ஜெனரல் பொன்சேகா இருமுறை உறுதிசெய்து கொள்ள விரும்பினார். பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவுடனான ஆலோசனைக்குப்பிறகு விநாயகமூர்த்தி முரளிதரன் என்னும் கர்ணல் கருணாவை அழைத்து பிரபாகரனது உடலை அடையாளம் காட்டுமாறு கேட்டுக்கொண்டனர்.

அத்துடன் சில நாட்களுக்கு முன் இலங்கை அரசிடம் தஞ்சம் புகுந்திருந்த விடுதலைப் புலிகளின் ஊடகத் தொடர்பாளர் தயா மாஸ்டரையும் போர் முனைக்கு அழைத்து வந்தனர். இருவருமே, நந்திக்கடல் காயலில் வீழ்ந்துகிடந்த உடல் பிரபாகரனுடையதே என்று உறுதி செய்தனர்.

உலகின் மிகப் பயங்கரமான தீவிரவாத அமைப்பைத் தோற்றுவித்த பிரபாகரனின் கதை முடிந்துவிட்டது. விடுதலைப் புலிகளின் இராணுவத் தோல்வி முழுதானது. அப்போதுதான் நாடாளுமன்றத்தில் தன் பேச்சை முடித்திருந்த குடியரசுத் தலைவருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

ஒரு மணி நேரத்துக்குள் இராணுவ உடையில் பிரபாகரனின் உடல் உலகின் அனைத்துத் தொலைக்காட்சி சனல் களிலும் ஒளிபரப்பாக ஆரம்பித்தது.

யாராலும் இதனை நம்ப முடியவில்லை. விடைதெரியாத பல கேள்விகள் தான் எஞ்சியிருந்தன.

எத்தனையோ புதுமையான தீவிரவாத வழிமுறைகளைப் புகுத்திய ஒரு மனிதர். எப்படி ஒரு சாதாரண சாவைச் சந்தித்திருக்க முடியும்? தப்பிக்க அவரிடம் வழியே இருக்கவில்லையா? அவர் ஏன் பிற விடுதலைப்புலி வீரர்களைப் போல சயனைட்டைச் சாப்பிட்டு உயிர்துறக்கவில்லை? எவ்வளவோ இன்னல்கள் வந்த போதும் ஆச்சரியமூட்டும் வகையில் எதிர்த்தாக்குதல்களைப் புரிந்த ஒருவர் இம்முறை ஏன் அப்படி ஏதும் செய்து நிலைமையை மாற்றவில்லை?

அவரது நெருங்கிய கூட்டாளிகளால் அல்லது குடும்பத்தினரால் மட்டுமே இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்லமுடியும். ஆனால் அவர்கள் அனைவரும் இறந்திருந்தனர்.

பிரபாகரன் இறந்து பல நாள்கள் ஆன பிறகும் வதந்திகள் பரவிய வண்ணம் இருந்தன. எப்படி பிரபாகரனையும் அவரது குடும்பத்தினரையும் இராணுவம் உயிருடன் பிடித்து, அவர்களைத் துன்புறுத்தி ஒவ்வொருவராக கொலை செய்தது என்றது ஒரு வதந்தி.

மற்றொரு வதந்தியில் தங்களை இராணுவம் சுற்றி வளைத்துவிட்டது என்பதை அறிந்த பிரபாகரன், தன் மனைவி மதிவதனி, மகள் துவாரகா(23), இளைய மகன் பாலச்சந்திரன் (11) ஆகியோரைத் துப்பாக்கியால் சுட்டுக்கொன்றுவிட்டு, தன்னைத்தானே சுட்டுக்கொன்றதாகச் சொன்னது.

ஆனால் இந்த வதந்திகள் எதையுமே உறுதிசெய்ய முடியவில்லை. அதே நேரம் இலங்கை அரசும் மதிவதனி, துவாரகா, பாலச்சந்திரன் ஆகியோர் பற்றி அமைதி காத்தது. விளைவாக வதந்திகள் பரவுவதை தடுக்க வழியில்லாமல் இருந்தது.

பிரபாகரனின் இறப்புக்கு அடுத்த வாரம், புலி ஆதரவு இணையத்தளங்களும் தமிழ் இதழ்களும் செய்தித்தாள்களும் பிரபாகரன் உயிருடன் இருப்பதாகவும் இராணுவம் காட்டிய உடல் பிரபாகரனைப் போன்ற வேறு ஒருவரது உடல் என்றும் எழுதின.

ஆனால் இலங்கை அரசைப் பொறுத்தமட்டில் இராணுவத்தால் பிரபாகரன் கொல்லப்பட்டது உறுதியே. ஒரு மாதம் கழித்து டி.என்.ஏ சோதனை மூலம் நந்திக்கடல் காயலில் கண்டெடுக்கப்பட்ட உடல் பிரபாகரனுடையதே என்று உறுதி செய்யப்பட்டது.

விடுதலைப் புலிகளின் அழிவுக்குப் பலகாரணங்களைச்சொல்லலாம். ஆனால் "கர்ணல் கருணா, பிரபாகரனின் உடலை அடையாளம் காட்டிய மறுநாள் என்னிடம் சொன்ன ஒரு வாக்கியம், பிரபாகரனின் சுய அழிவைத் தெளிவாக விளக்குகின்றது.

தன் முன்னாள் தலைவரின் கோரமான சாவுக்காகத்தான் வருந்துவதாக என்னிடம் ஒப்புக்கொண்ட கருணா சொன்னார். " பிரபாகரன் அமைதிக்கான மனிதர் கிடையாது. அவருக்கு அழிக்க மட்டுமே தெரியும். ஆக்க அல்ல.

இந்த உலகுக்கு மனித வெடிகுண்டுகளை அறிமுகப்படுத்திய ஒருவரைப் பற்றிய மிகச் சரியான கணிப்பு இது. பிரதமர்களையும் குடியரசுத் தலைவர்களையும் கொல்வதற்கு ஆணையிட்டவர் பிரபாகரன்.

ஆயிரக்கணக்கான இளம் ஆண்களையும் பெண்களையும் கவர்ந்து தமிழ் ஈழத்துக்காகத் தம் உயிரையும் கொடுக்குமாறு தூண்டியவர் பிரபாகரன். ஆனால், எப்போதுநிறுத்திக்கொள்வதுஎன்று பிரபாகரனுக்குத் தெரிந்திருக்கவில்லை.

பல வருடங்களாகத் தொடர்ந்து பெற்ற வெற்றிகள், விடுதலைப்புலிகளின் தலைவருக்குத் தன் திறமை மீது அதீத தன்னம்பிக்கையையும் சுயதிருப்தியையும் வளர்த்துவிட்டது. அதனால் மாறும் நிலைமைகளை அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒரு பயங்கரவாதியாகவே வாழ்ந்து ஒரு பயங்கரவாதியாகவே மறைந்தார். ஒரு அரசியல் தலைவராக அவர் முன்னேறவே இல்லை.

தன் அழிவுக்கான வித்தை பிரபாகரன் தானே விதைத்தது. 2008க்குப் பிறகான காலகட்டத்தில் தான் என்கிறார் கருணா. நோர்வே முன்வைத்த போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்ட பிரபாகரன் அதை முன்னெடுத்துச் செல்ல முயற்சிக்கவே இல்லை.

இந்தோரிலிருந்து டெல்லிக்கு விமானத்தில் வந்து கொண்டிருக்கும்போது தான் இந்தப் புத்தகத்தை எழுதும் எண்ணம் எனக்குத் தோன்றியது. உத்தராஞ்சல் மாநிலத்தின் மோ நகரில் உள்ள புகழ்வாய்ந்த இராணுவப்படைக் கல்லூரியில் " இராணுவத்துக்கும் ஊடகங்களுக்கும் இடையேயான உறவு: என்ற தலைப்பில் பேசிவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்தேன்.

அந்தப் பேச்சின் போது, சமீபத்தில் இலங்கையில் நடந்து முடிந்த போரைப் பற்றி என்னிடம் இந்திய இராணுவத்தினர் ஏகப்பட்ட கேள்விகளைக் கேட்டிருந்தனர்.

நான் இலங்கைக்குச் சென்று அங்கு நடந்த போரை, என்.டி.டி.வி. தொலைக்காட்சிக்காகப் பின்பற்றி செய்திகளை அனுப்பிக்கொண்டிருந்தேன். போர் முடிந்த காரணத்தால் அப்போது தான் இந்தியா திரும்பி வந்திருந்தேன்.

என் அனுபவங்களை இந்திய இராணுவ வீரர்களிடம் பகிர்ந்து கொண்டபோது தான் இந்தப் போரைப் பற்றிய பல விஷயங்கள் வெளி உலகுக்குச் சற்றும் தெரிந்திருக்கவில்லை என்பதைப் புரிந்து கொண்டேன். இலங்கை இராணுவத்தின் வெற்றிக்கான சூத்திரம் என்ன என்று பலரும் கேட்டனர்.

இன்னும் பலர், விடுதலைப் புலிகள் தவறு செய்த இடம் எது என்று தெரிந்துகொள்ள விரும்பினர். எனவே, உலகின் மிகக் கொடூரமான ஒரு தீவிரவாதக் குழுவை எப்படி இலங்கை இராணுவம் ஒழித்துக் கட்டியது என்ற கதை எழுதப்பட்டே ஆகவேண்டும் என்று எனக்குத் தோன்றியது.

இந்தப் புத்தகம் இலங்கைப் பிரச்சினையை ஆழமாக அலசும் என்று நீங்கள் எதிர்பார்க்கக்கூடாது. எப்படி இலங்கை அதிபர் மகிந்த ராஜபக்சவும் அவரது படைத்தளபதிகளும் அரசியல் இராணுவச் செயற்திட்டங்களை வகுத்து, இதுவரையில் வெல்லவே முடியாமல் இருந்த ஓர் அமைப்பை வெற்றி கண்டனர் என்பது பற்றியே என் கவனம் முழுவதும் இருக்கும்.

தொடரும்...

நிதின் ஏ.கோகலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் தந்திரோபாய நடவடிக்கைகளில் யுத்தத்தின் கருவியாக பாலியல் வல்லுறவு

கடந்தவாரத் தொடர்ச்சி...

ருவாண்டாவில் போரில் தப்பிய இளம் அப்பாவிப் பெண்களை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த ஆயுததாரிகள் பணிக்கப்பட்டனர். இவ்வாறு கர்ப்பம் தரிக்கப்பட்ட பெண்கள் அவர்களது குடும்பங்களிலும். சமூகத்திலும் விரும்பத் தகாதவர்களாக ஆனார்கள். சிலர் தற்கொலையும் செய்துகொண்ட சம்பவங்களும் பதிவானது. இவ்வாறான செயற்பாடுகளின் மூலம் அப்பெண்ணையும். அப்பெண்சார்ந்த குடும்பத்தையும். அவர்களின் இனக்குழுமத்தின் உளப்பலத்தை குறைப்பதும். இனத் தூய்மை மீதான மாசுபடுத்தலும். அவர்களின் அடையாளத்தை உருக்குலைப்பதும். அவர்களின் கலாச்சார நம்பிக்கைகளை கேலிக்குரியதாக்குவதும் நோக்கமாக இருந்திருக்கின்றன. இவை எதிரிப்படைத் தலைமைகளால் ஊக்குவிக்கப்பட்டுமிருக்கின்றன.

இலங்கையில் அநுராதபுரத்தில் படையினரை நம்பியே மிகப்பாரிய அளவிலான பாலியல் தொழில் விடுதிகள் நடத்தப்படுகின்றன. எல்லைப்புறக் கிராமங்களில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பல பெண்கள். குறிப்பாக கணவரை இழந்தவர்கள் பலர் இதில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். இவ்வாறான விடுதிகள் இராணுவ அதிகாரிகள் சிலரது சொந்த விடுதிகளாகவும் உள்ளன. பெண்கள் அமைப்புக்கள் பலவற்றின் அறிக்கைகளில் இந்த விடுதிகள் குறித்து சுட்டிக்காட்டப் பட்டுள்ளன.

இப்படி யுத்த காலங்களில் எதிரித் தரப்பின் பெண்கள் படையினருக்கு விருந்தாக ஆக்கப்படுவதும் பலருக்கான பாலியல் போகப்பொருளாக. பாலுறவு யந்திரமாக ஆக்கப்படுவதும் அங்கு மட்டுமல்ல இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது ஜப்பானியப் படைகள் கிழக்காசிய நாடுகளில் புரிந்த கொடுமையும் இவைதான். அவை நீண்ட காலமாக வெளித்தெரியாமல் இருந்து மிக அண்மையில் தான் பெண்களை பாலியல் அடிமைகளாக முகாம்களில் வைத்திருந்த விடயங்கள் வெளிச்சத்துக்கு வந்தன. ஜப்பான் அன்று இந்தோனேசியா. பிலிப்பைன்ஸ். மற்றும் கொரியா உள்ளிட்ட நாடுகள் பலவற்றில் பெண்கள் பலரையும் கடத்தி வைத்து படையினரின் பாலியல் தேவைகளுக்கு பயன்படுத்தி வந்த சம்பவங்கள் உலகையே உலுக்கியது. எதிரி நாட்டுப் படையினர் மீது நடத்தப் பட்டு வந்த இத்தகைய மனிதநேயமற்ற சம்பவங்களே இலங்கையிலும் நடந்து வருகின்றன.

ஒரு சில ஆண்டுகளுக்கு முன் கூட இந்தோனேசியாவில் சுகர்னோ அரசாங்கத்துக்கு எதிரான கிளர்ச்சியின் போது சீன நாட்டைச் சேர்ந்த பெண்கள் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட செய்தி இன்று உலகப்புகழ் பெற்றவை.

ஸ்ரீலங்கா அரசின் யுத்த அணுகுமுறைகள் எதிரி நாட்டுடனான யுத்தமென்பதையும் தமிழ்ப்பெண்கள் தங்கள் நாட்டுப் பெண்களில்லை வேற்று நாட்டுப்பெண்களே என்பதையும் நமக்கெல்லாம் தெளிவுறுத்தியதும் இந்த அரச படைதான். சிங்கள இராணுவத்திற்கான சிங்கள இராணுவ ஆட்சேர்ப்பு. தமிழ் மக்கள் மட்டும் வேட்டையாடப்படல். தமிழர் பகுதிகளின் மீதான குண்டுவீச்சுக்கள். அழிப்புக்கள் என்பவற்றின் வெளிப் பாடுகள் அத்தனையும் இது சிங்களப் படை தான் என்பதை நிரூபித்தது. எனவே ஸ்ரீல ங்கா அரச படையும் வேற்று நாட்டுப் படையெனும் உணர்வும். ஆக்கிரமிப்பு இராணுவம். எதிரிப் படை என்கின்ற மனப்பதிவுக்கும் தமிழ் மக்கள் எப்போதோ உள்ளாக்கப்பட்டுவிட்டனர்.

ஸ்ரீ லங்கா படையை அவ்வாறு "சிங்களப் படை". "எதிரிப் படை"யென்று சொல்வதற்கு முழுத்தகுதியையும் படிப்படியாக குறுகிய காலத்தில் அடைந்தது இவ்வாறுதான்.

(சிங்களப்" படையென்ற சொல் இனவாதத்தை வெளிப்படுத்துவதாக விமர்சிக்கப்பட்ட காலமொன்று இருந்தது. ஆனால் சிங்களவர்களை மட்டுமே கொண்ட படையாகவும் எதிரி நாட்டின் மீது யுத்தம் செய்வதுபோல யுத்தக் குற்றங்களில் ஈடுபடுவதாலும் இப்பதம் பொருத்தமானதே)

எனவே இப்படிப்பட்ட சிங்க ளப் படையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பாலியல் வல்லுறவுகள் தமிழ் மக்களின் இனத்துவத்தை அவமானப் படுத்த பயன்படுத்துகின்ற ஒன்றாகவே கொள்ள முடிகிறது.

ஆனால் தற்செயலாக கிருஷாந்தி குமாரசுவாமி பாலியல் வல்லுறவுக்குள் ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதும். கிருஷாந்தியைத் தேடிச்சென்ற அவரது தாயார். சகோதரன். அயலவர் ஆகி யோரையும் கொன்று புதைத்த சம்பவம் தற்செயலாக அம்பலத்துக்கு வந்ததும் (கிரு ஷாந்தி குடும்பத்தின் வர்க்கப்பின்னணி காரணமாக அதற்கு தொடர்பு சாதனங்கள். பெண்கள் அமைப்புகள். சட்ட உதவிகள் வாய்ப்பாக அமைந்ததால்) அது உலக அளவில் அரசை அம்பலத்துக்கு கொண்டு வந்தது.

தவிர்க்க இயலாமல் சிங்கள அரசு. தாம் போர்க்குற்றங்களுக்கு எதிராக எப்போதும் உறுதியாக இருப்பதாக பிரச்சாரப்படுத்துவதற்காக கிருஷாந்தி வழக்குக்கு அரசினால் முக்கியத்துவமும் கொடுக்கப்பட்டது. அதன்படி 20 மாதங்களாக நடந்த கிருஷாந்தி வழக்கின் தீர்ப்பாக 6 பொலிஸாருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது.

இதனை சாதகமாக்கியபடி அரசு இன்றும். பாதிக்கப்படும் பெண்கள் மீதான தனது கரிசனையை பிரச்சாரப்படுத்தி வருகிறது. இந்த பிரச்சாரங்களின் முன்னால் ஏனைய சம்பவங்கள் அனைத்தையும் மூடி மறைத்து வருகிறது. ஏனைய சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர் கள் சமூக அளவிலும் அந்தஸ்துடையவர் கள் அல்லர்.

இன்று வெளிக் கொணரப்படு கின்ற சம்பவங்கள் அனைத்துமே பாதிக்கப்பட்ட பெண் செத்தால் மாத்திரம் தான் சாத்தியமாகிறது. பெண்கள் ஊடக நிறுவனத்தைச் சேர்ந்த பெண்ணியவாதியான ஷாமினி பெர்ணாண்டோ இதுகுறித்து அப்போது கருத்துதெரிவிக்கையில் "ஒரு பெண் படை யினரால் தனக்கு ஏற்பட்ட அவலத்தை சட்டத்தின் முன்கொண்டு வர வேண்டு மெனில் நிச்சயம் சாகத்தான் வேண்டுமா." என வினவுகிறார். உண்மையில் இன்று வழக்கு தொடரப்பட்டிருக்கும் சொற்ப சம்பவங்களைத் தேடிப்பார்த்தால் அவை பாலியல் வல்லுறவின் பின்னர் கொலை செய்யப்பட்டவர் குறித்தானதாகத் தான் இருக்கின்றது. கிருஷாந்தி. ராஜனி. கோணேஸ்வரி போன்றோரை [illegible] உதாரணங்கள்.

இதே வேளை இதுவரை சிங்களப் படையினரால் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கிற பாலியல் வல்லறவு சம்பவங்கள் அனைத்திலும் பெண்கள் அதிக சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு ள்ளனர்.

ஈழப்போராட்ட வரலாற்றில் அதிகளவு பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளானது சந்திரிகா என்கிற பெண்ணொருவர் ஜனாதிபதியாக இருந்த காலத்தில்தான் (1994-2005) என்பது பதிவாகியிருக்கிறது. சர்வ வல்லமை பொருந்திய நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாகவும். முப்படைகளின் தளபதியாகவும். பாதுகாப்பு அமைச்சராகவும் சந்திரிகா தான் இருந்தார் என்பது இங்கு கவனிக்கவேண்டிய ஒன்று.

1996இல் மாத்திரம் 150 தமிழ் பெண்கள் படையினரின் பாலியல் வதைக்கு உள்ளாக்கப்பட்டதாக சீனப் பத்திரிகையொன்று அறிக்கை வெளி யிட்டது. (South China morning Post, 11 January 1997)

1997 ஒக்டோபர் 16அன்று அம்பாறையில் பொலிஸாரும் படையி னரும் தங்கநாயகி எனும் பெண்ணை கூட்டாக பாலியல் வல்லுறவு கொண்டு விட்டு அப்பெண்ணின் பெண்குறியை வெட்டி சின்னாபின்னப்படுத்தி விட்டே சென்றனர். அதேபோல 97 மே 17 அம்பாறையில் கோணேஸ்வரி பாலி யல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட பின்னர் கோணேஸ்வரியின் பெண்குறியில் கிரனைட் வைத்து சிதறச்செய்தனர். பெரும்பாலான பாலியல் வல்லுறவுச் சம்பவங்களின் பின் இறுதியில் கொலை புரிந்து வந்திருக்கின்றனர். இதன் மூலம் சகல சாட்சிகளையும் இல்லாது போய் விடுமென்றே சிங்களப் படையினர் நம்புகின்றனர்.

இதைவிட இதுவரை காலம் போரின்போது கைதுசெய்யப்பட்ட பெண் புலிகள் பலரை பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டமை குறித்த சம்பவங்கள் 94க்கு முன்னர் அதிகளவு தகவல் கிடைத்திருந்தன. ஆனால் உயிர்விடும் தறுவாயில் பிடிக்கப் பட்ட பெண் போராளிகளை நிர்வாணப் படுத்தி பாலுறுப்புகளில் போத்தல் களாலும். கம்பிகளாலும் சேதப்படுத் தியதை நிருபிக்கின்ற புகைப்படங்கள் எமக்கு கிடைத்த போது மிகுந்த அதிர்ச்சிக்கு உள்ளானோம். குறிப்பிட்ட தாக்குதல் சம்பவம் முடிந்ததும் மரணமுற்ற பெண் போராளிகளை நிர்வாணப்படுத்தி காட்சிப்படுத்தப்பட்டதை தொலைக்காட்சி செய்திகளிலும்காட்டப்பட்டது. அவைபற்றிய புகைப்படங்களும் கிடைத்திருக்கின்றன.

இதன் மூலம் எதிர்பார்க்கப்படு வது என்ன? குறிப்பிட்ட சமூகத்தை அவமானப்படுத்திவிட்டதன் வெற்றிக் களிப்பையல்லவா? ஏற்கெனவே சமூகத்தில் ஒருவர் தனக்கு வேண் டாத இன்னொருவரை அவமானப்படுத்த வேண்டுமென்றால் அவருக்கு கிட்டிய பெண்ணை வல்லுறவுக்குள்ளாக்கு வேன் என்று (வழக்கிலுள்ள துஷணம்) கூறினாலே மற்றவர் ஆத்திரப்படுவார் அல்லவா? அப்படிப்பட்ட வெளிப்பா டொன்றே இந்த நிர்வாணக் காட்சிப்படுத் தலும்.

"தமிழ் மக்களை பயங்கரவாதிகளிட மிருந்து மீட்டெடுப்பதற்காக நடத்தப்படும்" சமாதான யுத்தத்தின் மறு பக்கம் எவ்வளவு கோரமானது என்பதைக்காட்ட தமிழ் மக்களுக்கு எதிரான இந்த சம்பவங்கள் போதுமானது. அரசாங்கத்தின் சர்வதேச பிரச்சாரங்கள் சமீபகாலமாக தோல்வியடைவதற்கு ஒரு காரணம் போர்க்கால கொடுமைகளின் அத்தனை விபரீதங்களும் எல்லைத்தாண்டி போகு மளவுக்கு அதிகாரித்திருப்பதே.

அரசு இவ்வாறான இம்சைகளின் வாயிலாக தமிழ் மக்களை பணிய வைத்து அரசு தரும் தீர்வினை ஏற்கச் செய்கின்ற நடவடிக்கையாக. போரின் கருவி யாக. வதையின் கருவியாக. பாலியல் வல்லுறவு தொடர்ச்சியாக பாவிக்கப்பட்டு வருகிறது. அரச பயங்கரவாதத்தின் உச்ச வடிவம் இது தான். இது இனிமேல் தொட ராது என்பதற்கான உறுதியை எவரும் தந்துவிடமாட்டார்கள்.

**– நெற்றிப்பொறியன் –**

## மூடப்படும் யால வனவிலங்குகள் சரணாலயம்

*யால தேசிய வனவிலங்குகள் சரணாலயம் தற்காலிகமாக மூடப்படவுள்ளதாக வனவிலங்குகள் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது. இதற்கமைய செப்டெம்பர் மாதம் முதலாம் திகதியிலிருந்து ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதி வரை இது மூடப்படவுள்ளதாக குறிப்பிடப் பட்டுள்ளது.*

*விலங்குகளின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் சரணாலயம் தற்காலிகமாக மூடப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இங்கு ள்ள விலங்குகளின் இயற்கை நடத்தைகள் குறுக்கீடு இல்லாமல் இடம்பெறுவதற்கும் யால வனவிலங்குகள் சரணாலயம் மூடப்படுவதாக வனவிலங்குகள் பாதுகாப்பு திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. இதேவேளை ஒவ்வொரு வருடமும் குறித்த காலப்பகுதியில், யால சரணாலயத்தை தற்காலிகமாகமூட நடவடிக்கைஎடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.*

## கடற்கரையில் உருக்குலைந்த நிலையில் சடலம் மீட்பு

*புத்தளம் - கற்பிட்டி - மாம்புரி கடற்கரையில் அடையாளம் தெரியாத ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. மீனவர் ஒருவர் பொலிஸாருக்கு வழங்கிய தகவலை அடுத்து இந்த சடலம் மீட்கப்பட்டுள்ளது. சடலத்தில் கை மற்றும் கால்கள் இல்லை எனவும் சடலமாக மீட்கப்பட்ட நபர் யார் என இதுவரை அடை யாளம் காணப்படவில்லை. பிரேத பரிசோதனைகளுக்காக சடலம் புத்தளம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. கற்பிட்டி பொலி ஸார் சம்பவம்குறித்துவிசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.*



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பிராந்தியச் செய்திகள்



## தாயைக் கொலைசெய்த தனயனுக்கு 8 ஆண்டுகள் கடூழியச் சிறை

கல்முனை சம்மாந்துறையில் 68வயது நிரம்பிய தாயாரை தடியால் அடித்துக் கொலை செய்த தனயனுக்கு. யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் எட்டு ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளார். இந்தக் கொலைச் சம்பவம் கடந்த 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதி நடைபெற்றுள்ளது. சாரதாதேவி என்ற பெண்ணே கொல்லப்பட்டவராவார். கு.சிவகுமார் என்பவருக்கு எதிராக சட்டமா அதிபரால் கல்முனை மேல் நீதிமன்றத்தில் கொலை வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

பிரதம நீதியரசரின் விசேட நியமனத்தின் அடிப்படையில் கல்முனை மேல் நீதிமன்றத்தில் யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன். இந்தக் கொலை வழக்கில் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்ப்பளித்துள்ளார். வழக்குத் தொடுனர் தரப்பில் அரச சட்டவாதி லாபிர் சாட்சிகளை நெறிப்படுத்தினார். எதிரி தரப்பில் சட்டவாதி லியாகத் அலி நீதிமன்றத்தில் ஆஜராகினார். மரணமடைந்த சாரதாதேவியை 2010ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி. எதிரி கிளிசூரியா தடியாலும். பனை மட்டையாலும் அடித்துக் கொலைசெய்ததாக கண்கண்ட சாட்சிகள் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கையில் தெரிவித்தனர்.

இறந்தவரின் தலை. கழுத்து. நெஞ்சு. அடிவயிறு மற்றும் எலும்புகளில் தாக்குதல் நடத்தப்பட்டது எனவும் சிறிதளவு கூர்கொண்ட மொட்டையான ஆயுதத்தாக்குதல் காரணமாக மரணம் சம்பவித்துள்ளது என மருத்துவ பரிசோதனை நடத்திய வைத்தியர் சாட்சியமளித்தார். இந்தக் கொலைச் சம்பவம் குறித்து எதிரி கனகசிங்கம் சிவகுமார் எதிரிக்கூண்டில் நின்று வாக்குமூலமளித்தார். "நான் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். அப்போது எனது தாய் கெட்ட வார்த்தைகளால் என்னைப் பேசினார். எனக்குக் கோபம் வந்தது. அந்தக் கோபத்தில் வேலியில் இருந்த கிளிசூரியா தடியைப்பிடுங்கி இரண்டு மூன்று அடி அம்மாவை அடித்தேன். அடித்ததும் அவர் மயங்கிவிட்டார்.

அதன் பின்னர் அவரைத் தூக்கிச்சென்று வீட்டு மண்டபத்தில் வளத்திவிட்டு. தண்ணீர் எடுத்து வந்து அவருடைய முகத்தில் தெளித்தேன் ஆனால் அவர் எழும்பவில்லை. எனது தாயார் என்னை கெட்ட வார்த்தைகளினால் பேசி கோபப்படுத்தியதால் தான் திடீரென அம்மாவைத் தாக்கிவிட்டேன் என குற்றத்தை ஒப்புக்கொண்டு வாக்குமூலமளித்தார். அதேவேளை. எதிரி தரப்பு சட்டத்தரணி எதிரி மீது கருணை காட்டுமாறு கருணை விண்ணப்பம் செய்தார். விசாரணைகளின் முடிவில் திடீர்க் கோபம் காரணமாக இடம்பெற்ற கொலையாக இக்கொலைச் சம்பவம் நடைபெற்றுள்ளதாகவும் எனினும் இந்த வழக்கில் பல விடயங்களைக் கவனத்திற் கொள்ள வேண்டியுள்ளது என்று நீதிபதி இளஞ்செழியன் தனது தீர்ப்பில் தெரிவித்தார்.

அவர் வழங்கிய தீர்ப்பில் மேலும் தெரிவித்ததாவது:- தாயாரை அடித்துக் கொல்லும் எண்ணம் எதிரிக்கு இருக்கவில்லை. தாயார் கெட்ட வார்த்தைகளினால் அவரைக் கோபப்படுத்தியதே இந்தக் கொலைக்குப் பிரதான காரணமாக உள்ளது. ஆயினும் இறந்தவரின் நிலைமை. கொலைச்சம்பவ நிகழ்வு குறித்து எதிரி கூறியுள்ள நிகழ்வுகள் மற்றும் நடைபெற்றுள்ள சம்பவத்தின் பாரதூரத் தன்மை என்பவற்றை நீதிமன்றம் கவனத்தில் எடுத்து பரிசீலித்துள்ளது. இந்தப் பரிசீலனையின் அடிப்படையில் தாயாரைக்கொன்ற இந்த வழக்கில் எதிரி கைமோசக் குற்றவாளி என இந்த நீதிமன்றம் காண்கின்றது. இறந்தவர் தாயாராவார். கொலை செய்தவர் மகன். இந்தக் கொலையை நேரில் கண்டதாக கண்கண்ட சாட்சியமளித்தவர் தந்தையாவார். எனவே. ஒரு குடும்பத்தின் உணர்வுபூர்வமான வழக்கில் தீர்ப்பளிக்க வேண்டியிருக்கின்றது. கொலைக் குற்றவாளியாகக் காணப்படுகின்ற எதிரிக்கு இந்த நீதிமன்றம் எட்டு ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கின்றது.

எதிரி பத்தாயிரம் தண்டப்பணமாக செலுத்த வேண்டும். அதனைச் செலுத்தத் தவறினால் மூன்று மாதம் சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டும் என்று நீதிபதி இளஞ்செழியன் தனது தீர்ப்பில் தெரிவித்தார். இந்தத் தீர்ப்பையடுத்து தண்டனை வழங்கப்பட்ட எதிரியை சிறைக்காவலர்கள் பொறுப்பெடுத்து நீதிமன்றத்தில் இருந்து மட்டக்களப்பு சிறைச் சாலைக்குக் கொண்டு சென்றனர்.

## விடுமுறையில் வீடு திரும்பியவருக்கு ஏற்பட்ட அவலம்

தம்புள்ளை மற்றும் பகமூன ஆகிய பிரதேசங்களுக்கு இடையிலான பிரதான வீதியின் ரிதீஹெல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மோட்டார் சைக்கிள் ஒன்றும் தனியார் பேரூந்து ஒன்றும் நேருக்கு நேர் மோதிக்கொண்டமையினால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர். பிற்பகல் இடம்பெற்ற இந்த வாகன விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இராணுவ வீரரொருவரே உயிரிழந்துள்ளார்.

குருநாகல் - போயகனே இராணுவ முகாமில் பணியாற்றிவரும் இராணுவ வீரர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த இராணுவீரர் விடுமுறைக்காக வீடு திரும்பிக்கொண்டிருந்த போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை, சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



## யுவதியை கர்ப்பமாக்கிய இளைஞன் கைது

திருமணம் செய்யும் வயது பூர்த்தியாகாத இளம் யுவதியை கர்ப்பமாக்கிய இளைஞர் ஒருவரை சிலாபம் பொலிஸார் கைது செய்துள்ளனர். ஆராச்சிக்கட்டு-ஆடிப்பல பிரதேசத்தை சேர்ந்த 24வயதான இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சட்ட ரீதியாக திருமணம் செய்யாது பால்ய வயது யுவதி கர்ப்பமடைந்துள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு கிடைத்த தகவலை அடுத்து, சிலாபம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் பின்னர் குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார். 15 வயதான யுவதியே இளைஞரால் கர்ப்பமாக்கப்பட்டுள்ளதாக சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர்.


## கண்டலடி ஆலயத்திற்கு ஒலிபெருக்கி வழங்கல்

வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் கண்டலடி கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு ஒலிபெருக்கி சாதனங்கள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தியிடம் ஆலய நிர்வாகத்தினர் விடுத்த வேண்டுகோளுக்கமைய ஒலிபெருக்கி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் ஆலய நிர்வாகத்தினர்,



ஊர் பிரமுகர்கள், வாகரை மாற்றுத் திறனாளிகள் அமைப்பின் தலைவர் உட்பட பலர் கலந்துகொண்டனர். இதன்போது தன்னால் முடிந்த அனைத்து உதவிகளையும் இப் பிரதேசத்திற்கு வழங்குவேன் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி மக்களிடம் வாக்குறுதியளித்தார்.



## மஞ்சள் காமாலை நோயாளர்களின் எண்ணிக்கை உயர்வு

மஞ்சள் காமாலை நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இந்த வருடத்தில் மஞ்சள் காமாலை காரணமாக 2500 பேர் பாதிக்கப்பட்டிருப்பதாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த காலகட்டத்தினுள் கிட்டத்தட்ட 20 பேர் மஞ்சள் காமாலை காரணமாக உயிரிழந்துள்ளதாகவும் தொற்று நோயியல் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் பபா பலிகஹவதன தெரிவித்துள்ளார்.

மண் மற்றும் நீர் ஆகியவற்றில் அதிகளவில் தொழில் புரிபவர்களுக்கே இந்த நோய் ஏற்பட வாய்ப்பு இருப்பதாக வைத்தியர் மேலும் தெரிவித்துள்ளார். இந்த நோய் காரணமாக இரைப்பை மற்றும் சிறுநீரகங்களே அதிகளவில் சேதமடைவதாகவும் வைத்தியர் குறிப்பிட்டுள்ளார்.



## காயமுற்ற நிலையில் மரை மீட்பு

வெளிஓயா பகுதியில் காயமுற்று உபாதைக்குள்ளான நிலையில் மரை ஒன்று பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது. பிரதேச மக்களினால் வட்டவளை பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து கடந்த 30 காலை 11 மணியளவில் மரையை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது. காட்டுப் பகுதியிலிருந்து இரைதேடி திரிந்துகொண்டிருந்தபோது மரைநாய் கடிக்குள்ளாகியிருக்கலாம் அல்லது இனம்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டு காயமுற்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். இதேவேளை. மீட்கப்பட்ட மரை அட்டன் மிருக வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.



## யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகள் கையளிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாலையடித் தோணா பிரதேசத்தில் இந்திய வீட்டுத்திட்டத்தின் ஒரு தொகுதி பயனாளிகளிடம் வீடுகள் கையளிக்கப்பட்டன. மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர்.பி.எஸ். எம்.சாள்ஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் டெல்லி இந்திய தூதரகத்தின் இணைச் செயலாளர் அஜித் குப்தே பிரதம அதிதியாகக் கலந்துகொண்டதுடன் பிரேம் நாயர்கீர்த்தி ஷாவர்மா உள்ளிட்ட அதிகாரிகளும் மட்டக்களப்பு மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் இரா.நெடுஞ்செழியன் மற்றும் இலங்கைக்கான இந்திய தூதரக அதிகாரி கள் என பலரும் கலந்துகொண்டனர்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் 49ஆயிரம் வீடுகள் அமைக்கப்படுகின்றன. கிழக்கு மாகாணத்தில் அமைக்கப்பட்டுள்ள 4000 வீடுகளில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் 2880 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட 2168 குடும்பங்களுக்கும் வன்னியிலிருந்து அகதிகளாக வந்த 697 குடும்பங்களுக்கும், இந்தியாவில் அகதிகளாக தங்கியிருந்த 15 குடும்பங்களும் மற்றும் கடந்த காலங்களில் யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட 1625 குடும்பங்களும் இத்திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் அமைக்கப்பட்ட 318 வீடுகளில் பாலையடித்தோனா கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்ட 15 வீடுகள் இதுவரை பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன. பயனாளிகளின் ஒத்துழைப்புடன் ஒரு வீட்டினை அமைக்க ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா செலவிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இந்தியத் தூதரகத்தின் அதிகாரிகள் குறித்த வீட்டுத்திட்டத்தின் நிறைவு சம்பந்தமாகவும் பயனாளிகளின் திருப்தி தொடர்பாகவும் மக்களிடம் கலந்துரையாடி குறைநிறைகளையும் கேட்டறிந்து கொண்டனர்.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் குடியிருப்பு வசதிகள் அற்ற மக்களுக்கு தொடர்ந்தும் இந்திய அரசாங்கத்தின் உதவிகளை எதிர்பார்ப்பதாகவும் மேலதிகமாக 500 வீடுகளை இந்திய அரசாங்கம் தமது மாவட்டத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்தியத் தூதரக அதிகாரிகளிடம் அரசாங்க அதிபர் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய மேலும் ஒருதொகுதி வீடுகளை வழங்க நடவடிக்கை எடுப்பதாக அதிகாரிகள் உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



பொகவந்தலாவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொகவான தோட்டத்தில் பத்துபேர் குளவி கொட்டுக்கு இலக்காகியுள்ளனர். தேயிலை மலையில் கொழுந்து பரித்துகொண்டிருந்த பெண் தொழி [illegible] 30.07.2016 அன்று பகல் [illegible] மணியளவில் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். பாதிக்கப்பட்டவர்களில் ஆறு பேர் பொகவந்தலாவ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளதுடன் மேலும் நான்கு பேர் [illegible] பெற்று வருவதாக வைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

நோட்டன் பிரிட்ஜ் நிருபர் மு.இராமசந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சிம்புவிற்கு ஜோடியாக விஜயின் நாயகி



சிம்பு தற்போது தன் முழு கவனத்தையும் படங்களில் மட்டுமே செலுத்தி வருகிறார். இவர் ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் AAA படத்தில் நடித்து வருகிறார். இந்த படத்தில் இவர் 80'ஸ் கெட்டப்பில் ஒரு கதாபாத்திரத்தில் வருகிறார், இதில் இவருக்கு ஜோடியாக ஸ்ரேயா நடித்துள்ளார்.

இதைத்தொடர்ந்து சிம்புவின் மற்றொரு கதாபாத்திரத்திற்கு ஜோடியாக கீர்த்தி சுரேஷை கமிட் செய்ய பேச்சுவார்த்தை நடந்து வருகிறதாம். கீர்த்தி சுரேஷ் தற்போது விஜய்-60 படத்தில் நடித்து வருகிறார்.

## விவாகரத்து வரை சென்றது ஏன்?



விஜய்-அமலாபால் விவாகரத்து தான் தற்போது ஹொட் டொபிக். விஜய் மிகவும் அமைதியானவர். அவருக்கு இப்படி ஒரு நிலைமையா என பலரும் வருத்தப்பட்டு வருகின்றனர். மேலும், அமலா பாலை திருமணத்திற்கு பிறகும் சினிமாவில் நடிக்க முழு சுதந்திரம் கொடுத்துவிட்டாராம் விஜய்.

ஆனால், இவர் தொடர்ந்து சினிமாவில் நடிப்பது விஜய் குடும்பத்தினருக்கு இஷ்டம் இல்லையாம். இரண்டு தரப்பில் இருந்தும் விஜய்க்கு ப்ரஷர் வர, இறுதியாக விவாகரத்து முடிவுக்கு இவர் வந்துள்ளதாக கூறப்படுகின்றது.

## தேசிய விருதை அவமதித்த ரஜனி

கபாலி படம் வெளியாகி வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது. இன்னொரு பக்கம் பெரிய பிரச்சினை எழும்பியுள்ளது. அதாவது தேசிய விருதுகளை பெறுபவர்கள் அந்தப் பட்டங்களை திரைப்பட விளம்பரத்திலோ, படங்களின் டைட்டிலிலோ பயன்படுத்தவே கூடாது என்று சட்டம் இருக்கிறது.

ஆனால் ரஜனியின் கபாலி படத்தின் டைட்டில் கார்டில் பத்ம விபூஷண் ரஜனி என்று இருக்கிறது. இதனை எதிர்த்து தெலுங்கானா மாநிலத்தில் உள்ள ரஷின



வேதிகே அமைப்பு இதுகுறித்து சென்சர் போர்டிடம் புகார் தெரிவித்துள்ளார்கள். தேசிய விருதை அவமதித்ததற்காக அதைப் பயன்படுத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் என்றும் புகார் அளித்துள்ளனர்.

## அஜித் ரசிகர்களின் சோகம், சந்தோஷம்

அஜித் படம் குறித்து ஒரு செய்தி வருகிறது என்றால் அதற்காக அவருடைய ரசிகர்கள் தவம் இருப்பார்கள். இந்நிலையில் ஓகஸ்ட் 2ம் திகதி பல்கேரியா நாட்டில் தல-57 படப்பிடிப்பு தொடங்கவுள்ளது.

இப்படத்தில் அஜித்திற்கு ஜோடியாக காஜல் அகர்வால் நடிக்க, அக்ஷரா ஹாசன் ஒரு முக்கியமான ரோலில்



நடிக்கவுள்ளார். இந்நிலையில் இப்படத்திற்காக அஜித் பல்கேரியா செல்ல அங்கு ரசிகர்கள் எடுத்த புகைப்படம் தான் தற்போது வைரஸ்.



## தீபிகா படுகோனே, கங்கனா, அலியா பட்

நாயகிகளின் ஒரு படம் ஹிட் அமைந்தாலே தங்கள் சம்பளத்தை ஏற்றிவிடுகிறார்கள். அந்த வகையில் தொடர் வெற்றிப் படங்களை கொடுத்தவரும் பொலிவூட் நடிகையுமான தீபிகா படுகோனே தனது சம்பளத்தை ரூ.12 கோடி ரூபாய்க்கு ஏற்றியுள்ளார். குயின் படம் வெற்றியடைந்ததால் தனது சம்பளத்தை ரூ.11 கோடியாக கங்கனா உயர்த்தினார். தற்போது அதிக சம்பளம் ஏற்றி முதல் இடத்தில் இருக்கிறார் தீபிகா படுகோனே.

இவர்களைத் தொடர்ந்து நடிகைகள் கரீனா கபூர் ரூ.10 கோடியும், வித்யாபாலன் ரூ.7 கோடியும், அனுஷ்கா சர்மா ரூ.6 கோடியும், அலியாபட் ரூ.5 கோடியும் சம்பளம் வாங்குகின்றனர். தமிழில் நயன்தாரா அண்மையில் தனது சம்பளத்தை ரூ.4 கோடிக்கு ஏற்றியுள்ளதாக தகவல்கள் வெளியாகி இருக்கிறது.



## திருமண பந்தத்தில் இணையும் மலையாள நடிகை

நடனக் கலைஞரும், சீரியல் நடிகையுமான ஷாலு மேனன் திருமண பந்தத்தில் இணைய இருக்கிறார். சீரியல் நடிகர் சஜி என்பவரை தான் திருமணம் செய்ய இருக்கிறார்.

இவர்களது திருமணத்துக்கான பத்திரிகை வலைதளங்களில் பரவி வருகிறது. செப்டெம்பர் 8ம் திகதி குருவாயூரில் இவர்களது திருமண நடைபெற, அடுத்த நாள் இவர்களது திருமண வரவேற்பு நிகழ்ச்சி சுரபி ஒடிடோரியத்தில் நடக்க இருக்கிறதாம்.

## படங்களுக்காக தனுஷ் எடுத்த அதிரடி முடிவு

தனுஷ் படங்களில் நடிப்பதோடு, மற்ற நாயகர்களைவைத்துபடம்தயாரித்தும்வருகிறார். தற்போது இவர் தான் தயாரிக்கும் படங்களின் போஸ்ட் புரொடக்ஷன் வேலைகள் செய்வதற்காக சென்னையிலுள்ள அடையாறில் ஒரு ஸ்டுடியோ திறந்துள்ளார். 10 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள இந்த ஸ்டுடி



யோவில் அவர் தயாரிக்கும் படங்களின் எடிட்டிங், டப்பிங், சவுண்ட் எபெக்ட்ஸ், பாடல் என அனைத்துப் பணிகளும் நடக்கிறதாம்.

## கிரிக்கெட்டில் கவனம் செலுத்தும் அனிருத்

கிரிக்கெட் ரசிகர்களை ஒட்டுமொத்தமாக மிகவும் கவர்ந்த ஒரு போட்டி ஐபிஎல் கிரிக்கெட். இந்த பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டி போன்று தமிழ்நாடு பிரிமியர் லீக் என்ற 20 ஓவர் கிரிக்கெட் போட்டி தொடர் விரைவில் தொடங்கவுள்ளது.

இதற்கான 8 அணிகள் சமீபத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ளது. கோவைஅணியைபிரபல தயாரிப்புநிறுவனமும், தூத்துக்குடிஅணியை சென்னையில் உள்ள ஆல்பர்ட் திரையரங்கு



உரிமையாளர் பெற்றுள்ளதாகவும் செய்திகள் வந்துள்ளது. ஓகஸ்ட் முதல் தொடங்கவுள்ள இந்தப் போட்டிக்காக TPL Anthem என்ற பாடலை பிரபல இசையமைப்பாளர் அனிருத் கம்போஸ் செய்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



## ரகுமானுக்கு கிடைத்த கௌரவம்

இந்தியாவின் 70வது சுதந்திர தினத்தை முன்னிட்டு பல இடங்களில் நிறைய நிகழ்ச்சிகள் நடக்க இருக்கிறது. இந்நிலையில் வரும் ஓகஸ்ட் 15ம் திகதி ஐ.நா சபையிலும் சுதந்திர தின ஸ்பெஷல் கொண்டாட்டம் நடக்க இருக்கிறதாம். இந்த விழாவில் இசை நிகழ்ச்சி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அந்த இசை நிகழ்ச்சியை 50 ஆண்டுகளுக்கு பிறகு இந்தியரான ஏ.ஆர்.ரகுமான் நடத்துகிறாராம். இதற்கு முன்பு 1966ம் ஆண்டு பிரபல பாடகி எம்.எஸ்.சுப்புலட்சுமி இசை நிகழ்ச்சி நடத்தியிருக்கிறார்.



## மலையாள படத்தை ரீமேக் செய்யும் உதயநிதி

உதயநிதி நடிப்பில் சமீபத்தில் வெளிவந்த மனிதன் படம், இதுவரை அவர் நடித்த படங்களிலேயே அதிக வரவேற்பைப்பெற்று, வசூல் ரீதியாகவும் வெற்றி பெற்றது. இது ஜாலி LLB 2 என்றஹிந்திபடத்தின் ரீமேக். தற்போது வந்துள்ள தகவல்படி உதயின் அடுத்த படம் ஒரு மலையாள படத்தின் ரீமேக் தானாம்.

சில மாதங்கள் முன்பு வெளிவந்த 'ஹேப்பி வெடிங்' என்ற படத்தின் தமிழ் ரீமேக் உரிமையை வாங்க தற்போது பேச்சுவார்த்தை நடத்தி வருகிறாராம் உதயநிதி.

## நடிக்க மறுத்த காஜல்

காஜல் தென்னிந்தியாவில் பல முன்னணி நடிகர்களுக்கு ஜோடியாக நடித்துவிட்டார். இவருக்கு அஜித்துடன் நடிக்கவேண்டும் என்பது நீண்ட நாள் ஆசை. இந்நிலையில் அஜித் அடுத்து நடிக்கவிருக்கும் படத்தில் இவரை ஹீரோயினாக கமிட் செய்துள்ளனர். ஆனால், அதேநேரம் விக்ரமிற்கு ஜோடியாக கருடா படத்திலும் நடிக்க கமிட் ஆகியுள்ளார். அஜித்தா? விக்ரமா? என யோசித்து



அஜித்தை பைனல் செய்துள்ளார் காஜல். இதன் மூலம் விக்ரம் படத்தில் காஜல் தொடர்வாரா? இல்லை நீக்கப்படுவாரா? என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

தேவதர்ஷினி திரைப்படங்களில் கலக்கி வரும் திறமையான நடிகை. ஆனால் இவருடைய அப்பா கொலேஜ் பிரின்சிபல், அம்மா ஸ்கூல் பிரின்சிபல், அக்கா கோல்ட் மெடலிஸ்டாம். இப்படி குடும்பமே படிப்ஸ், நீங்க எப்படி சினிமா துறைக்கு வந்தீங்க என்ற ரசிகர்கள் கேள்விக்கு மனம் திறந்து பேசியுள்ளார். நான் ஸ்கூல், கொலேஜில் ஒரு நாடகம் கூட நடித்ததில்லை. திடீர்னு ஒரு வாய்ப்பா 'மர்மதேசம்' சீரியல்ல நடிக்கிறதுக்கான வாய்ப்பு கிடைச்சது. வீட்ல பணம் கேட்கவேண்டாம் என்ற சின்ன யோசனையில் இதை ஒரு ஹொபியா பண்ண ஆரம்பிச்சேன். நடுவில் அங்கரிங் பண்ண ஆரம்பிச்சேன், மர்மதேசம் சீரியல் டைரக்டர் நாகா நிறைய கத்துக்கொடுத்தார். அதுக்கப்புறம்தான் முழுக்க முழுக்க நடிப்புத்தொழிலை கையில எடுக்க ஆரம்பிச்சேன என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரி–ரணில் ஆட்சி மற்றுமொரு ஆயுதப் போராட்டப் பாதைக்கு வழி வகுக்கிறதா?



தற்போது இலங்கையை ஆட்சிசெய்து கொண்டிருக்கின்ற மைத்திரி-ரணில் ஆட்சியானது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் செல்லப்பிள்ளையாகவும், பிரித்தானிய நவகாலனித்துவத்தின் நண்பனாகவும், பிரான்சினதும், ஜப்பானினதும் கைத்தொழில் தொழில்நுட்ப விஸ்தரிப்பின் தள கர்த்தாவாகவும் இந்திய நில விஸ்தரிப்புவாதத்தின் விசுவாசியாகவும் விளங்கிவருகின்றது.

இவ்வாறான ஒரு பின்னணியில் தான் இலங்கையின் இன நெருக்கடியும் முப்பது ஆண்டுகளாகத் தொடர்ந்து நீடித்த ஆயுதப் போராட்டத்திற்கு முன்னர் இழுபறிப்பட்ட பாணியைவிட வேறுபட்ட ஒரு பாணியில் தொடர்ந்தும் இழுபறிக்கொண்டே வருகின்றது. ஆனால் இலங்கை இனநெருக்கடியில் சிறுபான்மை இனத்தைப் பிரதிநிதித்துவ தப்படுத்திக்கொண்டிருக்கின்ற அரசியல் தலைவர்களுங்கூட மைத்திரி-ரணில் அரசின் அமெரிக்கா, பிரித்தானியா, பிரெஞ்சு, ஜப்பான் ஆகிய தேசங்களின் தொடர்பிலான நிலைப்பாட்டிற்கு ஒத்த நிலையிலேயே செயலாற்றியும் வருகின்றனர். மேலும் தற்போது நாட்டில் தத்தமது மக்கள் குழுமங்களுக்குள் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்துகொண்டிருக்கின்ற முஸ்லீம் லீக் என்னும் அரசியல் கட்சியும், மலையக அரசியல் கட்சிகள் சிலவுங்கூட மேற்றரப்பட்ட நாடுகள் தொடர்பில் வடக்கின் தமிழ்த் தலைவர்களுடைய அதே நிலைப்பாட்டையே கொண்டிருக்கின்றன.

மைத்திரி-ரணில் அரசாங்கமாகவிருந்தாலுஞ் சரி, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பாகவிருந்தாலுஞ் சரி, முஸ்லீம் லீக்காகவிருந்தாலுஞ் சரி தமிழ் முற்போக்கு அணியாகவிருந்தாலுஞ் சரி மேற்றரப்பட்ட நாடுகள் தொடர்பில் அடிப்படையில் ஒரு நிலைப்பாட்டையே கொண்டிருக்கின்றன. இந்நாடுகள் அனைத்தும் உலகளாவியளவில் வல்லரசுகளாக விளங்குகின்றமை தெரிந்ததே. எனவே இத்தேசங்கள் தொர்டர்பில் ஸ்ரீலங்காவின் இன்றைய மைத்திரி-ரணில் அரசும், சிறுபான்மையினங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சிகளும் கொண்டுள்ள வகிபாகம் எவ்வாறான பெறுபேறுகளைத் தோற்றுவிக்குமென ஆராய முதல் வல்லரசு என்பதன் அடையாளங்களைக் காலஞ்சென்ற இந்திய ஜனாதிபதியும், அணு விஞ்ஞானியுமான அப்துல்கலாம் அவர்களின் எண்ணோட்டத்தின்பால் கூறப் புகின் "பொருளாதாரத்தில் உயர்ந்து நிற்கின்றமையும் வாழ்வியல் வசதிகள் தொடர்பில் மேலோங்கியிருப்பதுமே எனலாம்"

எனவே வல்லரசு நாடுகள் பொருளாதாரத்திலும், வாழ்வியல் வசதிகள் தொடர்பிலும் மேலோங்கியிருப்பதால் இலங்கையின் தற்போதைய மைத்திரி-ரணில் அரசானது ஏனைய சிறுபான்மைக் கட்சிகளின் அனுசரணையோடு அமெரிக்க ஏகாதிபத்தியம் உள்ளடங்கலான உலக வல்லரசு நாடுகளின் கைப்பொம்மையாக விளங்கிவருவதால் இலங்கைத் தமிழர் பிரச்சினையும் மேலும் நெருக்கடிகளுக்கும், சிக்கல்களுக்கும் ஆளாவதோடு ஏற்கனவே குறிப்பிட்டதைப்போன்ற வல்லரசு நாடுகளின் பொருளியல், வாழ்வியல் வசதி மேம்பாடு ஸ்ரீலங்காவின் பொருளாதார வங்குரோத்துத்தனத்துக்கு ஒத்தடம் கொடுப்பதாகவே அமைகின்றதனாலும், இந்நாடானது தனது நாடாளுமன்றத்தின் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் அமைச்சர்களுக்குமாகப் பெருந்தொகை நிதியை வல்லரசு நாடுகளிடமிருந்தும் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்தும் கடனாகப் பெற்றும் வருகின்றது. இக்கடன்தொகை தற்போதே மிகப் பெருந்தொகையாக உள்ளது. மேலும் இக்கடன் துரிதகதியில் அதிகரித்துச் செல்வதற்குமான வாய்ப்பும் உள்ளது.

எனவே கடனாளியாகிவிட்ட மேலும் கடனாளியாகிக்கொண்டிருக்கின்ற ஸ்ரீலங்காவானது மீளச்செலுத்த முடியாத நிலையில் நாட்டை ஒட்டுமொத்தமாக இத்தேசங்களுக்கு அடைவுவைக்கவேண்டிய மிகப் பரிதாபகரமான அரசியல் களஅமைவொன்று நிச்சயமாக அமைந்தே தீருமெனலாம். இவ்வாறான ஓர் களஅமைவின் வலுவானது மேலும் பலம் பெறுவதற்கேதுவாகச் சிறுபான்மையினக் கட்சிகளும் இவ் வல்லாதிக்க சக்திகளோடு தோழமைபூண்டு செயற்படுவது மேலும் உறுதுணையாகவுள்ளதெனலாம். இவ்விடயத்தில் அமெரிக்காவுக்கான தென் கிழக்காசிய நாடுகளின் இராஜாங்கச் செயலா ளர் நிஷா பிஸ்வால் அவர்களோடு இன்னும் பல அமெரிக்க இராஜீஜியப் பிரதிநிதிகளும் ஏனைய வல்லரசு நாடுகளின் தலைவர்களும் அடிக்கடி இலங்கைக்கு விஜயம் செய்து அரச தலைவர்களையும் சிறுபான்மையினங்களின் தலைவர்களையும் சந்தித்து வருவதன் உள்ளார்ந்தத்தை உற்றுநோக்குவதோடு நாடு மிகுந்த பொருளாதார நெருக்கடியையும், இனநெருக்கடியையும் சாதிக்கும் அபாயத்தையும் எடைபோடுவதன் நிமித்தம் தேசத்தில் 1971இல் இடம்பெற்ற வர்க்க ரீதியான போராட்டத்தைப் போலவும், 1980களில் இடம்பெற்ற இன ரீதியான போராட்டத்தை ஒத்ததாகவும் ஆயுதப் போராட்டங்கள் வெடிக்கக்கூடிய ஏதுநிலையுண்டெனலாம்.

இதில் முதலாவதான வர்க்க ரீதியான ஆயுதப்போராட்டந் தொடர்பில் எடுத்து நோக்கும்போது அவ்வாயுதப் போராட்டம் இடம்பெற்ற காலப்பகுதியில் இன்று இலங்கையிலுள்ளதைப் போன்று கடன்சுமையும் இனநெருக்கடியும் பாரியளவில் இருக்கவில்லை. எனினும் 1971ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் இலங்கையில் முதன்முதலாக வர்க்க அடிப்படையிலமைந்த கிளர்ச்சியை மக்கள் விடுதலை முன்னணியே (JVP) மேற்கொண்டிருந்தது. இவ்வாறான ஒரு கிளர்ச்சியை 1980களிலும் அக்கட்சியினர் மேற்கொள்வதற்கான பிரயத்தனங்களை மேற்கொண்டபோதுங்கூட அன்றைய பிரதமர் பிரேமதாஷ அவர்கள் ஆரம்பத்திலேயே அவ்வமைப்பின் தலைவர் றோகண விஜேவீர உள்ளடங்கலான சோமவன்ஷ அமரசிங்க தவிர்ந்த அனைத்து முக்கியஸ்தர்களையும் கொன்றொழித்து அவ்வாறான ஒரு வர்க்கரீதியான கிளர்ச்சி 1971ஐப் போல தேசந் தழுவியளவில் பெரிதாகப் பரவாதவாறுந்தடுத்து நிறுத்தியிருந்தார் என்பதுந் தெரிந்ததே.

இதன் பின்னர் வடபகுதியில் தனித் தமிழ்நாடு நாடி இடம்பெற்ற ஆயுதப் போராட்டம் ஆட்சியாளர்களை மிகவும் கதிகலங்க வைத்ததெனலாம். எனினும் 1976ஆம் ஆண்டு வட்டுக்கோட்டையில் இடம்பெற்றதமிழர்விடுதலைக்கூட்டணியின் மாநாட்டில் அக்கூட்டணியில் முன்னணி வகித்த இலங்கைத் தமிழரசுக் கட்சியினால் அக்கட்சியின் ஸ்தாபக ஆண்டான 1949இலிருந்து வலியுறுத்தப்பட்டு வந்த இலங்கைத் தமிழர் தொடர்பிலான சமஷ்டிக் கோரிக்கை கைவிடப்பட்டுத் தனித் தமிழ் ஈழக் கோரிக்கை பிரகடனப்படுத்தப்பட்டதோடு 1977ஆம் ஆண்டு நடைபெற்ற இலங்கை நாடாளுமன்றத்துக்கான பொதுத்தேர்தலில் த.வி.கூ. அமைப்பானது இக்கோரிக்கையை முன்வைத்துத் தேர்தலில் போட்டியிட்டுத் தமிழ் மக்களிடமிருந்து இக்கோரிக்கை தொடர்பில் மிகவும் வலுவான ஆணையைப் பெற்றிருந்தமையை மிகுந்த அவதானத்துடன் கையாண்ட இலங்கை ஆட்சியாளர்கள், வட பகுதித் தமிழ்க் கட்சிகளுக்குள் வழமையாக இருந்துவந்த இலங்கைத் தேசிய அளவிலா னதும் சர்வதேசிய அடிப்படையிலானதுமான வர்க்க நலனைச் சாதகமாகப் பயன்படுத்தி அவ்வமைப்பைத் தமிழ் மக்களிடமிருந்து பெற்ற ஆணையைத் துஷ்பிரயோகம் செய்யும் விதமாக இயங்கும் நிலைக்கு ஆட்படுத்தியது. இதனால் வெகுண்டெழுந்த ஆயுத தரப்பார் த.வி.கூ மீது வெறுப்படைந்து தன்னிச்சையாகவே தமது ஆயுதப்போராட்டத்தை நகர்த்த ஆரம்பித்திருந்தார்கள். இவ்வாறான ஆயுதப் போராட்ட நகர்வின் போது பின்னாளில் எவருமே எதிர்பாராதவிதமாக இராணுவத்தினருடன் ஆயுதாரிகளில் ஒரு சாரார் இணைந்து வேலைசெய்யும் துரதிட்ட வசமான சூழ்நிலை அன்றைய பிரதமர் பிரேமதாஷ அவர்களின் சூழ்ச்சியினால் தோற்றுவிக்கப்பட்டது.

இதன் காரணமாகத் தனித் தமிழ்நாடு கோரி ஆரம்பிக்கப்பட்ட ஆயுதப்போராட்டம் பெரிதும் தளர்ச்சியடைய ஆரம்பித்தது. விடுதலைப்புலிகளின் அசாதாரணமான ஆற்றல்மிகு யுத்த உபாயங்களினால் தமிழ் ஈழம் என்னும் வரையறுக்கப்பட்ட பிரதேசத்தின் இதயப் பகுதியான யாழ்ப்பாணம் அவ்வமைப்பின் கட்டுப்பாட்டுக்குள் வந்திருந்ததோடு, அப்பகுதியில் புலிகள் அமைப்பினர் நிழல் ஆட்சியையும் மேற்கொண்டிருந்தனர். எனினும் ஆயுததாரிகளில் ஒரு சாராரின் இராணுவத்தினருடனான இணைவு புலிகள் அமைப்பினர் தாம் கைப்பற்றிய யாழ்ப்பாணப் பிரதேசத்தைத் தொடர்ந்தும் தக்கவைத்துக்கொள்ள இயலாதவாறான ஒரு பரிதாப நிலையைத் தோற்றுவித்தது.

இவ்வாறாக விடுதலைப்புலிகள் அமைப்பினர் தாம் கைப்பற்றிய யாழ்ப்பாணத்தைத் தக்கவைத்துக்கொள்ள முடியாத நிலையில், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தமையோடு தொர்டர்ந்தும் தம்முடைய தாக்குதல்களை முன்னெடுத்து வந்தனர். அப்படியிருந்தும் அவர்களால் இழந்த யாழ்ப்பாணத்தை மீள வும் கைப்பற்றப்படமுடியாத நிலையில் யுத்தத்தைத் தொடர்ச்சியாக மேற்கொண்டு இறுதியில் முள்ளிவாய்க்கால் அளவுக்குப் பின் நகர்ந்துசென்று தோல்வியைத் தழுவியமையும், முப்பது வருடங்களாகத் தொடர்ச்சியாக இடம்பெற்ற ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டமையுந் தெரிந்ததே.

இதன்பின்னர் தமிழ் மக்கள் மீதான விடுதலைப்புலிகளின் பிரதிநிதித்துவம் அற்றுப்போய் வழமைபோலவே அம்மக்கள் மீதான இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பிரதிநிதித்துவம் ஆரம்பமாகியதோடு அக்கட்சியானது ரெலோ (Telo), ஈ.பி.ஆர்.எல்.எப் (EPRLF), புளொட் (PLOT) ஆகிய குழுக்களையும் இணைத்துக்கொண்டு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்னும் பெயரில் தற்போது வடக்குத் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியும் வருகின்றது. இக்கூட்டமைப்பானது இலங்கைத் தமிழரசுக் கட்சியினால் நீண்டகாலமாகத் தமிழ் மக்கள் மத்தியில் பிரலாபிக்கப்பட்டுச் செல்லாக்காசாகிவிட்ட சமஷ்டிக் கோரிக்கையையே மீண்டும் முன்வைத்துத் தமது குறுகிய அரசியல் நலனுக்கு ஒத்தடம் கொடுத்துக்கொண்டுமிருக்கின்றது.

எனினும் இலங்கைக்குள் தமிழ் ஈழக் கோரிக்கையை முன்வைக்கமுடியாத இக்கட்டான நிலையே இன்றைய தமிழ்த் தலைமை எதிர்கொண்டபோதும் தமிழ் ஈழம் நாடி முப்பது ஆண்டுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டிருந்த ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட நிலையில் நாடு கடந்த தமிழ் ஈழம் என்னும் எண்ணக்கருவும் அதன் பிரதமர் உருத்திரகுமாரன் என்கின்ற பதவி நிலையும் தோற்றுவிக்கப்பட்டது. நடைபெற்று முடிந்த ஆயுதப்போராட்டம் மீண்டும் உயிர்பெற வேண்டும் என்னும் ஆதங்கத்தினாலேயேயெனலாம். எனவே மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் ஆட்சிக்காலத்தில் முறியடிக்கப்பட்டிருந்த இனரீதியான ஆயுதப்போராட்டமும் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அவர்களின் ஆட்சியின் போதும், ஜே.ஆர்.பிரேமதாஷ அவர்களின் ஆட்சியின்போதும் இல்லாதொழிக்கப்பட்ட வர்க்க அடிப்படையிலான ஆயுதக்கிளர்ச்சியும் மீண்டும் உருவாகுவதற்குரிய பாதையை மைத்திரி-ரணில் அரசு செப்பனிடுகின்றதென்பதற்குப் பொருளாதார ரீதியாக அமெரிக்காவிடமிருந்தும், ஐரோப்பிய நாடுகளிடமிருந்தும், இந்தியாவிடமிருந்தும், சர்வதேச நாணய நிதியத்திடமிருந்தும் பெறும் பெருந்தொகைக் கடன்பளுவை ஈடு செய்வதற்காகச் இந்நாட்டில் வதியும் சிங்கள, தமிழ், இஸ்லாமிய அனைத்துச் சாமான்ய மக்களிடமும் பல்வேறு உபாயங்களின் பாற்பட்டு வரிப்பழுவைச் சுமத்துகின்றமையும் காரணிகளாகவுள்ளனவெனலாம்.

இன ரீதியான ஆயுதப்போராட்டம் வெடிப்பதற்கு மைத்திரி-ரணில் அரசின் தமிழ்ப் பிரதேசங்கள் மீதான தொடர்ச்சியான இராணுவ நிலைவைப்பும், தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினர்களென்னும் சந்தேகத்தின் பேரில் வருடக்கணக்காக விசாரணையெதுவுமின்றி சந்தேகத்தின் பேரில் சிறைவைக்கப்பட்டிருக்கும் அரசியல்கைதிகளின் அவலமும், அவர்களுடைய குடும்பத்தவர்கள் வடிக்கும் கண்ணீரும், காணாமல் போனவர்கள் தொடர்பில் எவ்வித தகவலையும் பெற முடியாத நிலையில் இன்னல்களை அனுபவித்துக்கொண்டிருக்கும் அவர்களது குடும்ப அங்கத்தவர்களின் போராட்டங்கள் கண்டுகொள்ளப்படாத நிலையின்பாற்பட்டு அமைந்துள்ள வெறுப்பும், விரக்தியும், பல்லைக்கழக மாணவர்களுக்கிடையில் இடம்பெற்றுவரும் மோதல்களும், வடக்கில் தொடர்ச்சியாக நிகழ்ந்துகொண்டிருக்கும் கொலை, கொள்ளை, வாள்வெட்டு, சிறுவர், சிறுமியர்கள் மீதான பாலியல் வன்முறைகள் உள்ளடங்கலான வன்புணர்வுகளும் கஞ்சா போன்ற உயர்மட்டப் போதைப் பொருட்களின் அசாதாரணமான பாவனையும் விபச்சாரமும் மீண்டும் ஒரு ஆயுதப் போராட்டம் உருவாகுவதற்கான ஏதுநிலையுண்டென்னும் கணிப்புத் தொடர்பில் முதனிலை வகிக்கின்றன வெனலாம்.

ஏனெனில் விடுதலைப்புலிகளின் நிழல் ஆட்சிக் காலப்பகுதியின்போது மேற்றரப்பட்ட நிகழ்வுகள் இல்லாதொழிக்கப்பட்டிருந்தமையோடு, தற்போது இவ்வாறான சம்பவங்கள் தமிழர் வாழ்விடங்களில் அடிக்கடி இடம்பெறும் போதெல்லாம் இயக்கம் இருந்தால் உவங்களை உடன் சுட்டுப்பொசுக்கிவிடும். இயக்கம் இருந்தால் உந்தக் கொலை நடந்திருக்குமா? வன்புணர்வு நடந்திருக்குமா? உதற்கெல்லாம் இயக்கம் இருக்கவேண்டும். இருந்தால் உவ்வாறான அடாவடிகள் இடம்பெறுமா? எனப் பொதுமக்களுக்குள் பரவலாகப் அபிப்பிராயங்கள் இடம்பெறுவதொன்றே. ஆயுதப் போராட்டமொன்று மீண்டும் முளைவிடுவதற்குப் பிரதான தூண்டுகோலாகவுள்ளதெனலாம்.

11ஆம் பக்கம் பார்க்க...

வீரப்பதி விநோதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04ஆம் பக்கத் தொடர்ச்சி...

இதைவிட யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் அமைக்கப்பட்ட புதிய சந்தைத் திறப்பு விழாவின்போது குறிஞ்சாத்தீவில் கோரத் தாக்குதலுக்கிலக்காகிக் காயப்பட்ட மாவை சேனாதிராஜா அவர்கள் அப்போது அமைச்சராகவிருந்த ஈபிடிபி அமைப்பின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா அவர்களோடு [illegible]ட்டிக்கொண்டு நின்று அச்சந்தையைத் திறந்துவைத்தமையும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நடைபாதை அரசியலின் இன்னுமொரு பெறுபேறு எனலாம்.

இவ்வாறான கூட்டமைப்பின் நடை பாதை அரசியலின் தொடர் நிகழ்வுகளாகத் தற்போது ஆட்சியிலிருக்கும் மைத்திரி-ரணில் தரப்பினருக்கு வாக்களித்தமையால், மஹிந்த ஆட்சியின்போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பார் கடைப்பிடித்த நடைபாதை அரசியலைவிடத் தற்போது அதி வலுவான நிலையில் அதே அரசியலைத் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றனர்.

மஹிந்த ராஜபக்ஷ அவர்களுடைய ஆட்சியின்போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நடைபாதை அரசியல் பெருமளவில் உள்ளகப்பொறிமுறையின் பாற்பட்டதொன்றாகவே விளங்கியிருந்தது. ஆனால் இன்றோ அவ்வரசியல் வெளியகச் சர்வதேச முகாமுக்குள்ளேயே மிகப் பெருமளவில் வியாபகம் பெற்று விளங்குகின்றதெனலாம்.

எடுத்துக்காட்டாக அண்மைக்காலத்தில் அமெரிக்க இராஜ்ஜியப் பிரதிநிதிகள் அடிக்கடி இலங்கைக்கு விஜயம் செய்வதும், அப்பிரதிநிதிகளை இலங்கை அரசோடு சம நிலை நின்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பாரும் பேரம்பேசும் கண்றாவித்தனமானது உலகந் தழுவி யளவில் கூட்டமைப்பில் கூசாமல் மேற்கொள்ளப்படும் நடைபாதை அரசியலின் உச்சக்கட்டமேயெனலாம்.

அதுமட்டுமல்லாமல் கூட்டமைப்பானது ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகளை யும் பாரத நடுவண் அரசின் இராஜ்ஜிய இராஜதந்திரிகளையும் இலங்கையின் ஆளுவோரோடு சமநிலை நின்று கனம் பண்ணுவது அவ்வமைப்பின் நடைபாதை அரசியலின் ஆபத்தான கட்டமேயெனலாம்.

எனவே இலங்கைத் தீவின் வட பகுதியானது இந்தியாவிற்குச் சொந்தமாகவும் அதன் தென்பகுதியானது அமெரிக்காவுக்கு உரித்தாவதற்குமான ஆபத்து உண்டென அத்தீவின் அரசியலாளர்களில் ஒரு பகுதி யினர் சுட்டிக்காட்டுவதைப்போன்ற ஒரு நிலைமை உருவாகுவதற்குத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தற்போதைய நடை பாதை அரசியல் பெரிதும் உறுதுணையாக விருக்குமெனலாம்.

ஆதலால் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பானது பொதுவாக நாட்டு நலன் கருதி யும் சிறப்பாகத் தமிழ் மக்கள் விமோசனம் நோக்கியும் உடனடியாக அவர்களால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் நடைபாதை அரசியலைக் கைவிடுவதே அறிவுடமையாகும்.

10 பக்கத் தொடர்ச்சி...

அத்தோடு தமிழ்ப் பிரதேங்களின் சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தலையீடு இருப்பதானாலும் தமிழர் சுயமரி யாதை, யுத்தம் முடிவுற்று ஏழு வருடங்களாகி விட்டபோதுங்கூடத் தொடர்ந்தும் கேள்விக் குறியோடு இயைந்ததாகவுமுள்ளது. இதன் காரணமாகவும் ஆயுதப்போராட்டம் மீண்டும் தோற்றம் பெறும் நிலையுண்டெனலாம்.

மேலும் நாடுகடந்த தமிழ் ஈழம் என்னும் எண்ணக்கருவும் அதன் பிரத மரான உருத்திரகுமரன் அவர்களினால் புலம்பெயர் தமிழர்களுக்குள் விதைக்கப்படும் கருத்துக்கள் தொடர்பிலும் பழ.நெடுமாறன், வை.கோபால்சாமி ஆகிய தமிழக அரசியல்வாதிகள் தமிழ் ஈழம் தொடர்பில் பிரஸ்தாபிக்கப்பட்டுவரும் கருத்துக்கள் விடயத்திலும் ஆயுதப் போராட்டம் மீண்டும் களை கட்டுமெனக் கருதுவதற்கிடமிருக்கின்றது. இவ்விடத்தில் பழ.நெடுமாறன் அவர்கள் பிரபாகரன் தலைமையில் விரைவில் ஐந்தாங்கட்ட ஈழப்போர் ஆரம்பமாகும் எனக் கருத்துவெளியிட்டமையுமையும் சுட்டிக்காட்டுவது பொருத்தமுடையதாக விருக்கும்.

இது இவ்வாறிருக்கத் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் முன்னிலை சோசலிக் கட்சியின் (Front Sccialist Party) தலைவரும் தற்போது குடியுரிமை பிரச்சினையில் சிறைவைக்கப் பட்டிருப்பவருமான கேகாலையைச்சேர்ந்த குமார் குணரட்ணம் அவர்களும், அக்கட்சியின் ஏனைய சில உறுப்பினர்களும் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் முகாமிட்டிருந்து முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர் களோடு இணைந்து தேசந் தழுவியளவில் 1971ஆம் ஆண்டு சித்திரை மாதம் இடம்பெற்ற ஆயுதக் கிளர்ச்சி போன்ற ஒரு கிளர்ச்சியை மேற்கொள்வதற்கு முயன்றமை அரசினருக்குத் தெரிய வந்தமையால் குமார் குணரட்ணம் உள்ளடங்கலான அக்கட்சியின் பிரதான மான உறுப்பினர்கள் யாழ்ப்பாணத்தில் கைதுசெய்யப்பட்டுமிருந்தார்கள்.

எனவே நாடு ஜனாதிபதியையும், பிரதமரை யும், அமைச்சர்களையும், மாகாண சபை முதல்வர்களையும், அமைச்சர்களையும், ஏனைய பொறுப்பு மிகு அரசசார்பு உயர்மட்டக் குழாமினரையும் அசாதாரண மான நிலையில் போஷிப்பதற்காக உலக நாடுகளிடமிருந்தும், சர்வதேச நாணய நிதியத்திடமிருந்தும் பெருந்தொகையான கடனைப் பெற்று அக்கடனை மீளச் செலுத்த முடியாத வங்குரோத்தான நிலையில் பொதுமக்கள் மீது விலைவாசி உயர்வு, சம்பளப் பற்றாக்குறை, சம்பளம் இன்மை, பெறுமதி சேர் (வற்) வரி உள்ளடங்கலான அசாதாரண மான வரிச் சுமை போன்ற இன்னோரன்ன காரணிகளினால் தீவு தழுவியளவில் வர்க்க அடிப்படையிலான ஆயுதக் கிளர்ச்சியும் தமிழ் மக்களின் சுயமரி யாதையோடு இயைந்த வாழ்வுக்குத் தொடர்ந்தும் பங்கம் விளைவதனால் தமிழர் தழுவியளவில் இன ரீதியான ஆயுதப்போராட்டமும் இடம்பெறுவதற்குரிய கள அமைவுகள் உருவாக்கப்பட்டிருப்பதோடு இவ்விரு வேறுபட்ட ஆயுதப் போராட்டங்களிலும் ஒன்று சேரும் நிலை யில் குமார் குணரட்ணம் போன்ற புரட்சியாளர்களின் ஆதங்கமும் ஓரளவாவது தணியும் நிலையும் தோன்றலாம்.

05ஆம் பக்கத் தொடர்ச்சி...

இவ்வாறே அமெரிக்காவும் தற்போதைய மைத்திரி-ரணில் அரசின் தனது நாடு சார்ந்த நலனைச் சாதகமாக்கிக்கொண்டு தன்னுடைய இராஜ்ஜியப் பிரதிநிதிகளை அடிக்கடி இலங்கைக்கு அனுப்பி மோப்பமிட்டும் வருகின்றது. குறைந்தது மாதம் இரு தடவைக ளாவது அமெரிக்க அரச பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்வதையும், தமிழர் பிரச்சினையைச் சாக்காகவைத்துப் பொருளா தாரக் சுபளீகரத்தை மேற்கொள்வதற்குமான நடவடிக்கைகளை மிகவும் துரிதகதியில் முடுக்கிவிடுவதையும் வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர்.

இப்பிரதிநிதிகள் தற்போது பொதுவாகச் சிங்கள மக்களையும் அம்மக்களுக்குள் உள்ள வாலிபர்களையும், மாணவர்களையும் சிறப்பாகத் தமிழ் மக்களையும் அம்மக்கள் சமூகத்தைச் சார்ந்த வாலிபர்களையும், மாணவர்களையும் கவரும் விதமாகத் தெற்கிலும் வடக்கிலும் விருந்துபசார விழாக்களிலும், களியாட்ட நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு உண்டு மகிழ்ந்தும் ஆடித்துக் கூத்தாடியும் குதூகலித்துச் செல்வது வழக்கமானதொன்றாகிவிட்டது.

இப்பிரதிநிதிகளின் வருகையைப் பொறுக்க முடியாத சிங்கள அரசியல்வாதியொருவரே அமெரிக்காவின் தென்கிழக்காசிய நாடுக ளின் இராஜாங்க விவகாரங்களுக்கான செயலர் நிஷா பிஸ்வால் என்னும் பெண்மணியொருவரின் தொடர்ச்சியான இலங்கை விஜயம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போது நிஷா பிஸ்வால் என்னும் அமெரிக்க இராஜ்ஜியப் பிரதிநிதியான இப்பெண்மணி மாப்பிள்ளை பார்க்கவா இலங்கைக்கு அடிக்கடி வருகின்றார்? எனத் தரக்குறைவாக விமர்சனமுஞ் செய்துள்ளார்.

இந்நாட்டில் ஆட்சிக்கு வரக்கூடிய இருபெரும் சக்திகளில் நீல அணியுஞ் சரி, பச்சை அணியாகவிருந்தாலுஞ் சரி அடிப்படையில் அமெரிக்க நலன்பேணியே ஆட்சி செய்பவையாகவிருந்த போதுங்கூட நீலக் கட்சியினரைவிடப் பச்சை அணி யினர் மிகக் கடும்போக்கான அமெரிக்க நலன் பேணுபவர்களாகவே விளங்கி வருகின்றார்கள். மாற்றீடாக நீலக் கட்சியினர் அமெரிக்க சார்பு நிலையை இயன்றளவு தவிர்த்து சீன நலனோம்பும் தன்மையையும் ஐ.நா அவை நாடுகளுக்கிடையில் பிரதிபலித்தும் வருகின்றார்கள்.

எனவே தற்போதைய மைத்திரி-ரணில் அரசு அமெரிக்க சார்பு கடும்போக்கான அரசாங்கமாக விளங்குவதோடு வடக்கின் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும், இஸ்லாமிய மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முஸ்லீம் லீக் என்னும் அரசியல் கட்சியும், இவ்வரசுக்குச் சார்பானவையும் மலையகத் தமிழ் மக்களுக்குள் பெருமளவு செல்வாக்குப் பெற்றவையாகத் திகழும் சில அரசியல் இயக்கங்களும், போதாக்குறைக்கு வடக்கின் சுவாமிநாதன், விஜயகலா போன்ற சோற்றுப் பிண்டங்களும் அவ்வமெரிக்க தேசத்துக்கே சூடு, சொரணையின்றிப் பச்சை விளக்குக் காட்டுவதும் இலங்கைத் தமிழ் மக்களின் தீர்வுத் திட்டம் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் தலையீடு மிக விரை வில் இலங்கைத் தீவின் வடபுலத்தை இந்திய மேலாதிக்க சக்திகளுக்கும் தென்பகுதியை அமெரிக்க ஏகாதிபத்திய வெறியர்களுக்கும் தாரைவார்த்துவிடுமென்னும் முடிவை ஒளிபடைத்த கண்களோடும் உறுதிகொண்ட உள்ளத்தோடும் எடுப்பதற்கான கால்கோளாகவே விளங்குகின்றதெனலாம்.

## நன்னீர் மீன்பிடியாளர்களது வாழ்வாதாரம் உயர்த்தப்பட்டுள்ளது – பா.டெனிஸ்வரன்

மன்னார் கட்டுக்கரை நன்னீர் மீனவர்களது வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கோடு வடக்கு மீன்பிடி அமைச்சால் அமைத்துக்கொடுக்கப்பட்ட நன்னீர் மீன் சந்தைக்கு திடீர் விஜயம் மேற்கொண்ட வடக்கு மீன்பிடி அமைச்சர் பா.டெனிஸ்வரன். அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் மற்றும் கிராம அபிவிருத்தி திணைக்கள மாகாணப் பணிப்பாளர் ஜெ.ஜெ. சி.பெலிசியன் ஆகியோர் அடங்கிய குழுவி னர் அங்கு விற்பனை செய்யப்பட்ட மீன்கள் மற்றும் நன்னீர் இறால் போன்றவற்றை பார்வையிட்டதோடு அங்குள்ள மீனவர் களுடனும் கலந்துரையாடினர். அக் கலந்துரையாடலில் குறித்த நன்னீர் இறால் தற்போது மிகுந்த தரமான வருமானத்தை தமக்கு தருவதாகவும், இவ்வகை இறால்கள் சாதாரணமாக இரண்டு இறால்கள் ஒரு கிலோ எடை வருவதாகவும் ஆகவே இவற்றை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்பவர்கள் தம்மிடம் கிலோ ஒன்று 800 தொடக்கம் 1000 ரூபாய் வரை கொள்வனவு செய்கின்றனர் என்றும் அதனால் தமது வாழ்வு இப்போது மிகுந்தசந்தோஷமாக இருப்பதாகவும், மிகுந்த மகிழ்வோடு அமைச்சருக்கு தெரிவித்தனர்.

அந்த சந்தர்ப்பத்தில் அமைச்சர் அவர்களது வாழ்வாதாரம் உயர்த்தப்பட்டுள்ளது என்றும் இந்த முயற்சி வீண்போகாமல் மிகுந்த பலன் தந்துள்ளதாகவும் தெரிவித்ததோடு, இவ்வகை நன்னீர் இறால்களை கடந்த 7 தொடக்கம் 9 மாதங்களுக்கு முன்னர் வடக்கில் உள்ள அனைத்து பிரதான மீன்பிடி குளங்களுக்கும் சுமார் 06 இலட்சம் இறால் குஞ்சுகளை தம்முடைய அமைச்சு (NAQ DA) நிறுவனத்தினருடைய உதவியோடு வைப்பிலிட்டதாகவும் அவை இன்று சுமார் ஒவ்வொன்றும் 600 தொடக்கம் 800 கிராம் நிறையுடையவையாக வளர்ந்து, நன்னீரின் மீன்பிடியில் ஒரு புதிய திருப்பத்தை வடக்கில் ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்ததோடு, அந்த வேளையிலே இவ்வாறான தனது செயற்திட்டங்களை எப்பொழுதும் உயிரூட்டம் கொடுக்கும் தனது அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் அவர்களை பாராட்டுவதாகவும் தெரிவித்தார்.



## பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு

கல்விச்சேவை ஊழியர்களின் கூட்டுறவு சிக்கன கடனுதவி சங்க உறுப்பினர்களின் 2013/2014ம் ஆண்டு வருடத்தில் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவ மாணவிகளுக்கு புலமைப்பரிசில் வழங்கும் வைப வம் 30 ஆம் திகதி காலை Y.M.C.A மண்டபத்தில் இடம்பெற்றது. முதல் நிகழ்வாக மங்கள விளக்கேற்றல் மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வசந்த பியதிஸ்ஸ அவர்களால் மங்கள விளக்கேற்றப்பட்டது.

அதைத்தொடர்ந்து இலங்கை ஆசி ரியர் சேவை சங்க உபதலைவரும், கல்வி கூட்டுறவு சங்க உபதலை வருமான சுந்தரலிங்கம் பிரதீப் அவர்களினால் தலைமை உரை வழங்கப்பட்டதுடன் 30 பேருக்கான புலமை பரிசில்கள் வழங்கிவைக்கப்பட் டது. இந்த நிகழ்வுக்கு மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வசந்த பிய திஸ்ஸ, கல்வி கூட்டுறவு தலைவர் பிர தீப் மற்றும் சமய தலைவர்கள், மாணவ மாணவிகள் எனப் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



## சிவனு மனோஹரனின் 'மீன்களை தின்ற ஆறு' சிறுகதை நூல் வெளியீடு

சிறுகதை எழுத்தாளர் சிவனு மனோஹரனின் முதலாவது படைப்பான 'மீன்களை தின்ற ஆறு' நூல் வெளியீட்டு விழா 23.07.2016 சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு அட்டன் [illegible] மண்டபத்தில் நடைபெற்றது.

[illegible]

யோர் தொகுத்து வழங்கினர். நூலின் சிறப்பு பிரதிகள் வழங்கப்பட்டது. நிகழ்வின் இறுதி அம்சமாக ஏற்புரையும் நன்றியுரையும் நூலாசி ரியர் நிகழ்த்தினார். எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஆசிரிய சமூகத்தினர், இலக்கிய ஆர்வலர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

நோட்டன் பிரிட்ஜ் நிருபர்
மு.இராமசந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்துல்கலாமின் பொன்மொழிகள்



வெற்றி என்பது உன் நிழல் போல. நீ அதைத் தேடிப்போகவேண்டியதில்லை. நீ வெளிச்சத்தை நோக்கி நடக்கும்போது, அது உன்னுடன் வரும்.

உலகம் உன்னை அறிவதைவிட, உன்னை உலகிற்கு அறிமுகம் செய்துகொள்.

முடியாது என்று நீ சொல்வதையெல்லாம் யாரோ ஒருவன் எங்கோ செய்து கொண்டிருக்கிறான்.

நீ கடவுளின் குழந்தை என்பதால் உனக்கு என்ன நடந்தாலும் அதையெல்லாம் விட நீ சிறந்தவன் உயர்ந்தவன் என்ற உறுதி வேண்டும்.

நம்பிக்கை நிறைந்த ஒருவர் யார் முன்னேயும் எப்போதுமே மண்டியிடுவது இல்லை.

காலத்தின் மணல் பரப்பில் உன் கால்சுவடுகளைப் பதிக்க விரும்பினால் உன் கால்களை இழுத்து இழுத்து நடக்காதே.

வெற்றி பெற வேண்டும் என்ற பதற்றம் இல்லாமல் இருப்பதுதான் வெற்றி பெறுவதற்கான சிறந்த வழி.

அலட்டிக்கொள்ளாமல் இருக்கும் போது அபாரமான செயற்பாட்டிற்குப் பலன் கிடைக்கும். விஷயங்கள் எப்படி வருகின்றனவோ அதை அப்படியே எடுத்துக் கொள்ளவேண்டும்.

கஷ்டம் வரும்போது கண்ணை மூடாதே. அது உன்னை கொன்றுவிடும். கண்ணை திறந்து பார். நீ அதை வென்று விடலாம்.

நமது பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம் ஆனால் இறப்பு ஒரு சரித்திரமாக இருக்க வேண்டும்.

ஒருமுறை வந்தால் கனவு. இருமுறை வந்தால் ஆசை. பலமுறை வந்தால் லட்சியம்.

துன்பத்தை அனுபவித்த காலத்தை மறந்துவிடு. ஆனால் அது உனக்குக் கற்பித்த பாடத்தை மறந்துவிடாதே

தனித்துவமாக இருக்க இதற்கு முன் எவரும் சந்தித்திராத கடினமாக யுத்தத்தை சந்திக்க வேண்டியதிருக்கும். அந்த யுத்தத்தில் வெற்றி பெற்றால் பலன் நிச்சயம். இதற்கு நான் உத்தரவாதம்.

தனித்துவமாக இருக்கவேண்டும் என்பதே இளைஞர்களின் குறிக்கோளாக இருக்க வேண்டும்.

எப்போதும் வித்தியாசமாக சிந்திக்க துணிவு வேண்டும். தனித்துவமாக இருக்க வேண்டும்.

வாரிசு அடிப்படையில் ஒருவர் தலைமை இடத்துக்கு வரலாம். ஆனால் தலைவருக்கான தகுதிகளை ஒருவர் சொந்தமாக மட்டுமே உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

புதிய விஷயங்களை படைக்கவேண்டும் என இலட்சியம் உள்ளவர்களுக்கு அவர்களது வேட்கையே ஊக்கமாக அமையும். மற்றவர்களை தோற்கடிக்கவேண்டும் என்ற எண்ணம் தேவையில்லை. உங்களுக்குள் இறக்கைகள் உள்ளன. தவழ முயற்சிக்காதீர்கள். பறக்க கற்றுக் கொள்ளுங்கள். உச்சத்திற்கு பறந்து செல்லுங்கள்.

சரியான காரியத்தை செய்ய எளிமையான வழி என என்னிடம் கேட்கிறார்கள். தாயின் முகத்தில் புன்னகை அரும்ப செய்யும் காரியத்தை செய்யுங்கள். அதனை நேர்மையாகவும், கடின உழைப்புடனும் செய்யுங்கள்.

## விவேகானந்தரின் சிந்தனைகள்

பழமையைப் பற்றி ஒன்றுமே தெரியாமல் புதுமையைச் சிறப்பாகப் படைக்க முடியாது.

வாசிப்புப் பழக்கம் என்பது அருமையான ருசி, அழகான பசி. ஒருமுறை சுவைக்கப் பழகிவிட்டால் அது தொடர்ந்து வரும்.

நீங்கள் விரும்புவது ஒருவேளை உங்களுக்கு கிடைக்காமல் போகலாம். ஆனால் உங்களுக்கு தகுதியானது உங்களுக்கு கண்டிப்பாக கிடைத்தே தீரும்.

அறிவு ஒன்றுதான் அச்சத்தை முறிக்கும் அரிய மருந்து. அறிவை வளர்த்துக்கொண்டால் எல்லாவிதமான பயங்களும் அகன்றுவிடும்.

தவறு நேர்ந்து விடுமோ என்று அஞ்சி அஞ்சி எந்த செயலையும் செய்யாமல் பின் வாங்குவது இழிவானது.

இருதயம் விரிவடைந்துள்ள இடத்தில்தான் உண்மை ஞானம் உதிக்கும். அந்த உண்மை ஞானம்தான் நம்பிக்கை.

அடக்கப்படாமல் உள்ள மனமும், அற வழியில் செலுத்தப்படாத மனமும் நம்மை எப்போதும் கீழ் நோக்கியே இழுத்துச்சென்று அழித்துவிடும். அடக்கப்பட்ட மனமும், அறவழியில் செல்லும் மனமும் நமக்குப் பாதுகாப்பை அளித்திடும். உலகை பந்தங்களில் இருந்து விடுதலையளிக்கும்.

கபடம் இல்லாத நாத்திகன் வஞ்சகனை விடச் சிறந்தவன் ஆவான். காமம், பொன்னாசை இவைகளால் ஆளப்படும் அற்பர்கள் பொருட்படுத்தப்படக்கூடியவர்கள் அல்லர்.

எவர் ஒருவருடைய நெஞ்சு ஏழை மக்களுக்காகத் துயரத்தில் அழுமோ. அவரையே நான் மகாத்மா என்பேன்.

அன்புநெறியிற்சென்று உலகம் உய்வடைந்திட வழிகளைக் கூறும் முறை மதம் எனப்படும்.

கோழைகளே பாவ காரியங்களைப் புரிந்திடுவர். தைரியமுடையோர் ஒருக்காலும் பாவம் செய்யார்.

பலமற்ற மூளையில் நாம் எதையுமே செய்ய இயலாது. அதனால் நாம் அதைப் பலப்படுத்த வேண்டும்.

அச்சமேநமக்குத்துயரத்தைத்தருவது. அச்சமே கேட்டை விளைவிப்பது. அச்சமே மரணத்தைத் தருவது. நமது உண்மை இயல்பை நாம் அறிந்து கொள்ளாமல் இருப்பதனால்தான் நமக்கு அச்சம் ஏற்படுகின்றது.

இவ்வுலகில் பிறந்த நீங்கள் அதற்கு அடையாளமாக ஏதேனும் விட்டுச்செல்லுங்கள். இல்லையேல் உங்களுக்கும் மரங்கள் கற்களுக்கும் வேறுபாடு இல்லாமற் போய்விடும்.


முதலில் வேலைக்காரனாயிருக்கக் கற்றுக் கொண்டால், எஜமானாகும் தகுதி பின்னர் தானாகவே வரும்.

அன்புடையவனே வாழ்பவன். சுயநலமுடையவனோ செத்துக் கொண்டிருக்கின்றான் என்றே பொருள்.

## உலகின் பெரிய விமானத்தை உருவாக்கும் சீனா

தண்ணீரிலும் செல்லும் வகையிலான விமானத்தை (AG 600), சீன விமானப் போக்குவரத்துத்துறை தயாரித்து வருகிறது. காட்டுத்தீயை விரைந்தும் முழுமையாகவும், கட்டுப்படுத்தும் ஒரு முயற்சியாக நீர்நிலைகளில் இறங்கி நீரை அள்ளிக்கொண்டு தேவையான இடங்களில் தெளிக்கும் வகையில் ஒரு விமானத்தைச் சீனா வடிவமைத்துக் கட்டி வருகிறது.

சீனாவின் சுகாய் நகரில் உள்ள விமானப் போக்குவரத்துத் துறைக்குச் சொந்தமான பணிமனையில் இதற்கான வேலை மும்முரமாக நடைபெறுகிறது. வெளிப்புற வேலைகள் முடிந்த நிலையில் உட்புற வடிவமைப்பில் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். தரையிலும், தண்ணீரிலும்



இறங்கி, மேலெழும்பும் திறன் பெற்றுள்ளது. இந்த விமானம் தண்ணீரில் இறங்கும்போது அதன் அடிப்பகுதியில் உள்ள கொள்கலனில் தண்ணீர் நிரப்பிக்கொள்வதுடன், தண்ணீரிலேயே ஓடி மேலெழும்பிப் பறந்து செல்லும் திறன் கொண்டதாக இருக்கிறது. இந்த ஆண்டு இறுதியில் பணி முடிந்து விமானம் இயக்கத்துக்கு வரும் எனச் சீன விமானப் போக்குவரத்துத்துறை அறிவித்துள்ளது. தண்ணீரிலும் செல்லும் 17 விமானங்கள் வாங்குவதற்கு இதுவரை கொள்முதல் ஆணைகள் வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.



## கற்றாழையின் மருத்துவ பயன்கள்

சோற்றுக்கற்றாழை என்பது பூக்கும் தாவர இனத்தைச் சேர்ந்தது. இதில் ரோஜா இதழ்கள் போன்ற பெரிய அமைப்பும், தடிமனான சதையுள்ள இலைகளும் இருக்கும். இதன் ஜெல்லியை கற்றாழை சோறு என்பர், இந்த ஜெல்லி தான் அதிக குளிர்ச்சியை தரும் தன்மை கொண்டது. விட்டமின் A, விட்டமின் B, விட்டமின் C, விட்டமின் E போன்ற விட்டமின்கள் அதிகமாக இருக்கின்றன. மேலும் கால்சியம், மக்னீசியம், பொட்டாசியம், சோடியம் போன்ற தாதுக்களும் இருக்கிறது.

மருத்துவ பயன்கள்

சோற்றுக் கற்றாழையின் சோற்றை எடுத்து வெண்படையின் மீது தினமும் பூசிவர வெண்படை குணமாகும்.

கோடைக்காலத்தில் உருவாகக்கூடிய நீர்கடுப்பு,' நீர்தாரை எரிச்சல், மாதவிடாய் கோளாறுகள், உடல் வெப்பம், உடல் காந்தல் மற்றும் உடல் உஷ்ணமும், எரிச்சலும் குறையும்.

வெயில் காலங்களில் ஏற்படும் கண் எரிச்சல் மற்றும் கண் சிவப்பிற்கு இந்த சோற்றுக் கற்றாழை சிறந்த மருந்தாக பயன்படுகிறது. மேலும் இது நல்ல உறக்கத்தை தூண்டுகிறது.

பெண்களுக்கு உண்டாகும் நீர்க்கடுப்பு, வயிற்றின் எரிச்சலைக் குணப்படுத்துகிறது. சர்க்கரை நோய்க்கு கண் கண்ட மருந்தாக சோற்றுக் கற்றாழை திகழ்கிறது.

சோற்றுக் கற்றாழையை தினமும் ஜூஸாக தொடர்ந்து எடுத்துக்கொள்வதன் மூலம் ரத்தத்தில் சர்க்கரை அளவு கட்டுப்படும். நமது உடலில் நோய் எதிப்பு சக்தியை தூண்டுகிறது.

வாய்ப்புண்ணை ஆற்றவும், பற்களின் பாதுகாப்பிற்கு மிகச் சிறந்த மருந்தாக இந்த கற்றாழை பயன்படுகிறது.

நமது உடலில் உள்ள தேவையில்லாத தீங்கு விளைவிக்கும் பக்டீரியாக்களை வெளியேற்றும் தன்மை உடையது. தீயினால் ஏற்படும் காயங்கள் விரைவில் குணமாக முக்கிய பங்கு வகிக்கிறது.

சோற்றுக் கற்றாழையை உரித்து அதில் உள்ள சோற்றுப் பகுதியை எடுத்து தலையில் தேய்த்து குளித்து வந்தால் முடி உதிர்வது நின்று முடி நன்கு அடர்த்தியாகவும்,கருமையாகவும் வளரும்.

முகத்தில் உள்ள கரும்புள்ளிகள், தழும்புகள், உலர்ந்த சருமம், வெயிலில் ஏற்படும் சரும பாதிப்புகள் போன்றவைகளை குணப்படுத்தும் சிறந்த மருந்தாக திகழ்கிறது. அழகு சாதனப்பொருட்கள் தயாரிப்பில் கற்றாழை பெருமளவு பயன்படுத்தப்படுகின்றது.

## புவியில் மிக ஆழமான இடம் இதுதான்

Murmansk, Russiaவிலுள்ள ஆழமான துளையே புவியில் மிக ஆழமானது என அறியப்படுகிறது. இதன் ஆழம் புவியோட்டிலிருந்து 12 கிலோமீட்டர்களாகும். இதுமுன்னர்மனிதர்களால்உருவாக்கப்பட்டு, கைவிடப்பட்ட எண்ணெய் கிணறாக நம்பப்பட்டு வந்தது.

ஆனால் உண்மையில் இது US, USSR இக்கிடையில் ஏற்பட்ட தொழில்நுட்பபோட்டி நிலைமைகளால் உருவான துளையாகும். அதாவது இருவரில் யார் புவியின் மையத்தில் துளைகளை ஏற்படுத்துவது என்பதாகும். இதில் வேடிக்கை என்னவென்றால் இது அப்போது யாராலும் பெரிதுபடுத்தப்பட்டிருக்கவில்லை. ஏனெனில் உலகம் விண்வெளியை நோக்கி சந்திரனில் தரையிறங்கிய காலம் அது. இது இடம்பெற்ற காலப்பகுதி 1960களிலாகும்.

இங்கு ரஷ்யா மற்றும் லண்டன்



ஆய்வாளர்கள் தனித்தனியாக துளைகளை ஏற்படுத்தியிருந்தனர். அதில் யார் அதிகளவு ஆழமாக துளையிடுவது என்பதைத்தவிர வேறு எந்த நோக்கங்களும் இருந்திருக்கவில்லை.

லண்டனானது 'Project Mohole' எனும் பேரில் துளைகளைத்தோண்ட தொடங்கியிருந்தது. இவர்கள் கடல் மட்டத்திற்கு கீழே 11700 அடிகள் தோண்டியிருந்தனர். ரஷ்யாவானது Kola Peninsula எனும் இடத்தில் தங்கள் வேலையை தொடங்கியிருந்தனர். இவர்கள் 1970ஆம் ஆண்டு தொடக்கம் 1994 ஆம் ஆண்டு வரை தோண்டியிருந்தனர். இதுதான் தற்போது அதிக ஆழமானதாகப் பார்க்கப்படுகிறது.

ஒட்டுமொத்த இந்தியாவில் கைப்பேசி வசதி இல்லாத 55 ஆயிரம் கிராமங்களில் உடனடியாக கைப்பேசி சேவையை துவங்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. நாட்டில் உள்ள 5.97 லட்சம் கிராமங்களில் 5.41 லட்சம் கிராமங்களுக்கு தற்போது கைப்பேசி சேவை வசதி உள்ளது. எனினும், இன்னும் 55,669 கிராமங்களில் கைப்பேசி சேவை வசதியே இல்லாமல் உள்ளது. இந்நிலையில், விரைவில் இந்த கிராமங்களில் மொபைல் கவரேஜை ஏற்படுத்தி அங்கு கைப்பேசி சேவைகளை கொண்டு வர மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இந்த தகவலை தகவல்தொடர்புத்துறை இணை மந்திரி மனோஜ் சின்ஹா பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறிவியல் உலகம்

## பேஸ்புக்கின் வருமானம் எவ்வளவு தெரியுமா?



தற்போதைய இணைய உலகை மட்டுமன்றி மக்களையும் ஆட்டிப்படைக்கும் உலகின் மிகப்பெரிய சமூக வலைத்தளமாக பேஸ்புக் காணப்படுகின்றது. இந்த நிறுவனமானது ஒவ்வொரு வருடத்தினதும் ஒவ்வொரு காலாண்டுப் பகுதியின் வருமானத்தினை தொடர்ச்சியாக வெளியிட்டு வருகின்றது. இதன் அடிப்படையில் 2016ஆம் ஆண்டிற்கான இரண்டாம் காலாண்டுப் பகுதிக்கான வருமானத்தை தற்போது வெளியிட்டுள்ளது. இது தொடர்பாக அந்த நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுமார் 6.44 பில்லியன் டொலர்களை வருமானமாக ஈட்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வருமானம் ஆனது கடந்த வருடம் இதே காலப் பகுதியில் ஈட்டப்பட்ட வருமானத்திலும் பார்க்க 59 சதவீதம் அதிகமாகும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தவிர தற்போது மொபைல் சாதனங்கள் ஊடாகவே அதிக பயனர்கள் பேஸ்புக்கினை பயன்படுத்தி வருவதாகவும். இவ் எண்ணிக்கையானது. கடந்த ஆண்டை விடவும் 76 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய தொழில்நுட்பத்தில் Samsung நிறுவனம்



Samsung நிறுவனம் TST (Turbo Speed Technology) எனும் தொழில்நுட்பத்தை தனது புதிய ஸ்மார்ட் போன்களில் புகுத்த உள்ளது. சமீபத்தில் அறிமுகமான J2 Pro ஸ்மார்ட்போனில் இந்த தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் புதிய தொழில்நுட்பம் மூலம் அப்ஸ்களால் போன் மெதுவாவதை தடுக்க முடியும். இதன் மூலம் RAM அளவை அதிகரித்து 40 சதவீதம் வரை போனை வேகமாக வைத்துக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் இந்த தொழில்நுட்பத்தை இனி வெளியி டும் அனைத்து ஸ்மார்ட் போன்களிலும் கொண்டுவரப்போவதாக Samsung நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்த தொழில்நுட்பத்தை தெளிவாக விளக்கும் கானொளி ஒன்றையும் அந்நிறுவனம் வெளியிட்டுள்ளது.

## புதிய அம்சங்களுடன் கூகுள் மெப்பின் புதிய பதிப்பு



கூகுள் நிறுவனத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட பல்வேறு சேவைகளுள் கூகுள் மெப் சேவையும் ஒன்றாகும். இன்று உலகளாவிய ரீதியில் பல மில்லியன் பயனர்களால் இவ் வசதி பயன்படுத்தப்படுகின்றது. இதனைக்கருத்திற் கொண்டு தனது பயனர்களுக்கான சேவையினை கூகுள் நிறுவனம் இலகுபடுத்தி வருகின்றது. இதன் ஒரு பகுதியாக கூகுள் மெப் அப்பிளிக்கேஷனின் புதிய பதிப்பினை அறிமுகம் செய்கின்றது.

இப்புதிய பதிப்பில் சில புதிய அம்சங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவற்றில் பிரதானமாக WiFi Only Mode வசதி தரப்பட்டுள்ளது. இவ்வசதியின் ஊடாக மொபைல் சேவை வழங்குனர் ஊடாக டேட்டா வீண்விரயமாவது தடுக்கப்படுகின்றது. இதுதவிர போக்குவரத்து தொடர்பாக ஏற்படும் தாமதங்களுக்கான காரணங்களையும் உடனுக்கு உடன் தெரிந்துகொள்ளும் வசதியும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த அப்பிளிக்கேஷன் ஆனது தற்போது அன்ரொயிட் சாதனங்களுக்காக மட்டும் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

## யாகூவை 483கோடி டொலருக்கு வாங்கும் வெரிஸான்





வெரிஸான் தொலைத்தொடர்பு நிறுவனம் யாகூ நிறுவனத்தை 483கோடி டொலர் கொடுத்து வாங்குவதாகத் தெரியவந்துள்ளது. ஒருகாலத்தில் இணையத்தையே ஆட்சி செய்து வந்த யாகூ நிறுவனத்தின் ஆதிக்கம் 2000ம் ஆண்டிற்கு பின்னர் சரியத் தொடங்கியது. யாகூவின் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை குறைய தொடங்கியது. இதனால், சில மாதங்களுக்கு முன்பு யாகூ நிறுவனம் விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டது.

இந்நிலையில், வெரிஸான் நிறுவனம் யாகூ நிறுவனத்தை 483கோடி டொலர் கொடுத்து வாங்க உள்ளது. இந்த இணைப்பு அடுத்த ஆண்டு மே மாதத்திற்குள் முடிவடையும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. மேலும், கடந்த 2008ம் ஆண்டு மைக்ரோசொப்ட் நிறுவனம் 4.400 கோடி டொலர் கொடுத்து யாகூ நிறுவனத்தை விலைக்குக் கேட்டது. ஆனால் யாகூ நிறுவனம் மறுத்துவிட்டது குறிப்பிடத்தக்கது

## iPhone விற்பனையில் புதிய மைல் கல்லை எட்டிய அப்பிள்






*சமகாலத்தில்பல்வேறுநிறுவனங்கள் ஸ்மார்ட் கைப்பேசிகளை அறிமுகம் செய்து வருகின்றபோதிலும் அப்பிளின் ஐபோன்களுக்கு என்று ஒரு தனி வரவேற்பு இருக்கத்தான் செய்கின்றது. அப்பிள் நிறுவனம் தனது முதலாவது ஐபோனினை 2007ம் ஆண்டின் பிற்பகுதியில் அறிமுகம் செய்திருந்தது. இக் கைப்பேசி முதன் முறையாக அறிமுகம் செய்வது தொடர்பில் அப்பிள் நிறுவனத்தினை உருவாக்கிய காலம் சென்ற ஸ்டீவ் ஜாப்ஸ் 2007ம் ஆண்டு அறிவித்தலை விடுத்திருந்தார். இதனைத் தொடர்ந்து இன்றுவரை பல்வேறு புதிய அம்சங்கள். வடிவமைப்புக்களை கொண்ட கைப்பேசிகளை அறிமுகம் செய்த வண்ணம் உள்ளது. அவ் வகையில் இதுவரை சுமார் ஒரு பில்லியன் வரையான ஸ்மார்ட் கைப்பேசிகளை உலகமெங்கும் விற்பனை செய்து புதிய மைல்கல்லை எட்டியுள்ளது அப்பிள் நிறுவனம்.*

*இது தொடர்பான அறிவித்தலை அப்பிள் நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரியான டிம் குக் வெளியிட்டுள்ளார். இதேவேளை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் மேலும் மூன்று வகையான ஐபோன்களை அந் நிறுவனம் அறிமுகம் செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது.*

## அப்பிள் நிறுவனத்தின் இலாபத்தில் வீழ்ச்சி

*தொழில்நுட்ப பெருநிறுவனமான அப்பிள் தனது காலாண்டு நிகர இலாபத்தில் 27 சதவீதவீழ்ச்சி கண்டிருக்கிறது. இந்த நிறுவனத்தின் முக்கிய தயாரிப்பான, ஐஃபோன் விற்பனையில் இரண்டாவது தொடர் காலாண்டு பருவத்தில் வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதாக அறிவித்திருக்கிறது. கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் விற்கப்பட்ட ஐஃபோன்களின் எண்ணிக்கையைவிட 15 சதவீதம் குறைவான ஐஃபோன்களே இந்த காலாண்டில் விற்கப்பட்டிருக்கின்றன.*

*ஆயினும், இந்த வீழ்ச்சி என்பது அஞ்சப்பட்டதைக்காட்டிலும் குறைவானதே. அப்பிள் ஐஃபோன்கள், அந்நிறுவனத்தின் வருவாயில் மூன்றில் இரண்டு பங்கு அளவு வருவாயைத் தருகின்றன.*



*அப்பிள் நிறுவனத்தின் முக்கிய தயாரிப்பான ஐஃபோனின் பிரபல்யத்தில் ஏற்பட்டிருக்கும் வீழ்ச்சி குறித்து சில முதலீட்டாளர்கள் கவலைப்படுகின்றனர். ஆனால் இந்த வீழ்ச்சி வரும் செப்டெம்பரில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஐஃபோன் 7 விற்பனைக்கு வரும்போது தடுத்து நிறுத்தப்படும் என்று அவர்கள் நம்புகிறார்கள்.*

- BBC

## நிழல் ஏன் கருப்பாக இருக்கிறது?



*நமது வாழ்வில் நம்மைபிற மனிதர்கள் பின் தொடர்கிறார்களே இல்லையே. நமது நிழல் நம்மை பின்தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. இருட்டிய நேரத்தில் நாம் சாலையில் நடந்துசெல்கையில் நம்மை அறியாமலேயே நமது நிழலைப்பார்த்து சில நேரத்தில் அச்சம் கொள்கிறோம். இவ்வாறு சில நேரங்களில் நம்மை அச்சம்கொள்ள வைக்கும் நிழல் பற்றி தெரிந்துகொள்ளுங்கள்.*

*நிழல் என்றால் என்ன?*

*ஒரு திசையில் ஒளிவீசும் பொழுது அத்திசையில் ஒளி ஊடுருவாத ஒரு பொருள் இருந்தால், அப்பொருளால் ஒளி தடுக்கப்பட்டு, அப்பொருளின் பின்னே ஒளி விழாமல் இருக்கும் பகுதிக்கு நிழல் என்று பெயர்.*

*நிழல் ஏன் கருப்பாக இருக்கிறது?*

*நம்மில் பலபேர் நிழல் கருப்பாக இருக்கிறது என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் நிழல் கருப்பாக இல்லை. ஒளி அற்று இருக்கிறது. ஒளி அற்றதை நாம் கருப்பு என்கிறோம். எல்லா நிற ஒளியும் சீரான அளவில் கலந்து இருந்தால் அது வெள்ளையாகப் புலப்படும். சில நிறங்கள் தனித்தோ, கலந்தோ இருக்கும்போது பல வண்ணங்கள் காணப்படும். நிசப்தம் என்பது சப்தம் இன்மை என்பது போல, கருமை என்பது நிறம் அல்ல, ஒளி இன்மை.*

ஸ்மார்ட்போன் பயன்படுத்துபவர்கள் பேஸ்புக்கை விட போக்கிமொன் கேம் விளையாடுவதற்காக இரண்டு மடங்கு நேரத்தை செலவிடுவதாக ஆய்வில் தெரியவந்துள்ளது. அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட "போக்மொன் கோ" எனும் கேம் ஸ்மார்ட் போன் பயன்படுத்துபவர்கள் மத்தியில் மிகவும் பிரபலமாகியுள்ளது. ஜிபிஎஸ் கொண்டு விளையாடப்படும் இந்த கேம் உலகம் முழுவதும் ஏராளமானவர்களை அடிமையாக்கிவிட்டது. பேஸ்புக் பார்ப்பதற்கு 35 நிமிடங்கள் செலவிடுபவர்கள் போக்கிமொன் கோ விளையாடுவதற்காக 75 நிமிடங்கள் செலவிடுகிறார்கள்.

## தசை நார்களில் ஏற்படும் விகாரங்களை குணப்படுத்துவதற்கு ரோபோ

தசை இடர்பாடுகளிலிருந்து விடுபடும் பொருட்டு ஏற்படும் காயங்கள், விகாரங்களை குணப்படுத்துவதற்காக ஒரு ரோபோ ஒன்று சிங்கப்பூர் விஞ்ஞானிகளால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இந்த இயந்திரக் கையானது விளையாட்டு நிகழ்வுகளின் போது ஏற்படும் வலிகளிலிருந்து நிவாரணம் பெற உதவும் எனச் சொல்லப்படுகிறது. இது பற்றி Chinese physician Zhang கூறுகையில், வடிவமைக்கப்பட்ட இந்த திருத்தமான



ரோபோவானது, நோயாளர்களில் தானாக சிகிச்சைகளை மேற்கொள்ளக்கூடியது என்கிறார்.

மேலும் இதுவே வடிவமைக்கப்பட்ட முதல் ரோபோ என்றும் சொல்லப்படுகிறது. இந்த ரோபோவானது 6 அச்சுக்களாலான இயந்திரக் கைகளைக்கொண்டுள்ளது. இதனால் தெளிவான அசைவுகளை மேற்கொள்ளக்கூடியதாக உள்ளது. அத்துடன் பார்வைக்காக 3D-stereoscopic கெமராவினைக் கொண்டுள்ளது. நோயாளியின் பாதுகாப்பிற்கும், சௌகரியத்துக்குமென அழுக்க உணரிகள் முதல் பலவகையான உருக்களையும் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இது முதற்கட்டமாக 50 நோயாளிகளில், வேறுபட்ட சூழ்நிலைகளில் பரிசீலிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு  உலகம்

## கால்பந்து அணி வீரர்களின் சம்பளப் பட்டியல் வெளியீடு



இங்கிலாந்து பிரீமியர் லீக் தொடரில் முக்கிய பங்கு வகிக்கும் மான்செஸ்டர் யுனைடெட் கால்பந்து அணி இங்கிலாந்தின் மிகவும் பழமை வாய்ந்த கிளப் அணிகளில் ஒன்றாக உள்ளது. இந்த அணி ஒவ்வொரு வீரர்களையும் மில்லியன் கணக்கில் பவுண்ட் கொடுத்து வாங்கியுள்ளது. இந்த நிலையில் பிரான்ஸ் நாட்டின் நடுக்கள வீரரான பால் போக்பாவை சுமார் 100 மில்லியன் பவுண்ட்க்கு யுவான்டஸ் கிளப்பிடம் இருந்து வாங்கியுள்ளது. இந்த அளவு டிரான்ஸ்ஃபர் என்பது கால்பந்து கிளப் அணி வரலாற்றில் இதுதான் முதன்முறை. போக்பாவிற்கு வாரச் சம்பளம் மட்டும் சுமார் 2.75.000 பவுண்ட் கொடுக்க மான்செஸ்டர் யுனைடெட் சம்மதித்துள்ளது. அதாவது போக்பா சுமார் 2 கோடியே 43 லட்சம் ரூபாய் வாரச் சம்பளமாக பெற இருக்கிறார்.

இந்த அணியில் 19 வீரர்களில் கடைசியாக 1300 பவுண்ட் வரை வாரச் சம்பளம் வாங்குகிறார்கள். அணியின் மனேஜர் ஜோஸ் மௌரினோ 3.12.500 பவுண்ட் என அதிகமாக சம்பளம் வாங்குகிறார். மான்செஸ்டர் அணியில் விளையாடும் வீரர்கள் வாங்கும் வாரச் சம்பள விபரம்:-

பால் போக்பா- 2.75.000 பவுண்ட்
வெயின் ரூனே - 2.60.000 பவுண்ட்
ஸ்லாடன் இப்ராஹிமோவிக் - 2.50.000 பவுண்ட்
ஹென்றிக் - 2.00.000 பவுண்ட்
பாஸ்டியான் ஸ்வெயின்ஸ்டெய்கர் - 2.00.000 பவுண்ட்
டேவிட் டி ஜியா - 2.00.000 பவுண்ட்
ஜூயான் மாடா - 1.40.000 பவுண்ட்
அஸ்லெ யங் - 1.10.000 பவுண்ட்
மோர்கன் ஸ்னெய்டர்லின் - 1.00.000 பவுண்ட்
கிறிஸ் ஸ்மாலிங் - 80.000 பவுண்ட்
மைக்கேல் கார்ரிக் - 80.000 பவுண்ட்
டேலே பிளின்ட் - 75.000 பவுண்ட்
அன்டர் ஹெர்ரேரா - 75.000 பவுண்ட்
மெம்பிஸ் - 90.000 பவுண்ட்
பெல்லைனி - 80.000 பவுண்ட்

## இலங்கை கிரிக்கெட் அணியின் புதிய பீல்டிங் பயிற்சியாளர்


இலங்கை கிரிக்கெட் அணியில் பீல்டிங் பயிற்சியாளராக தென் ஆபிரிக்க துடுப்பாட்ட வீரர் Nic Pothas நியமிக்கப்பட்டுள்ளார். இதுதொடர்பாக இலங்கை கிரிக்கெட் வாரியத்தின் தலைவர் திலங்கா சுமதிபால கூறியுள்ளதாவது, நமது கிரிக்கெட் அணியின் பந்துவீச்சு மற்றும் துடுப்பாட்டத்தில் சிறிது முன்னேற்றம் காணப்படுகிறது. ஆனால், பீல்டிங் முறை யில் நாம் சற்று கீழே செல்வதுபோன்று இருக்கிறது. அதனால் தென் ஆபிரிக்க வீரர் Nic Pothas, இதற்கான பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார், வருகின்ற ஓகஸ்ட் 8 ஆம் திகதி முதல் அவரது பணி தொடரும் என்று கூறியுள்ளார்.

அதுமட்டுமன்றி, நமது இலங்கை அணிக்கு, சிறந்த தொழில்முறை ஆலோசகர் மற்றும் சிறந்த தொழில்நுட்பவசதி போன்றவற்றையே ஏற்பாடு செய்ய விரும்புகிறோம். அதன்படி



இந்த முடிவு இலங்கை அணிக்கு நேர்மறைபடியாக அமையும் எனக் கூறியுள்ளார். தன்னை இலங்கை அணியின் பீல்டிங் பயிற்சியாளராக நியமித்துள்ளதற்கு நன்றி தெரிவித்துள்ள Nic Pothas, சிறப்பாக செயற்படுவேன் எனக் கூறியுள்ளார். இவர் தென் ஆபிரிக்க அணிக்காக மூன்று சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்று விளையாடியுள்ளார். இவர் கடைசியாக 2000ஆம் ஆண்டில் பாகிஸ்தானுக்கு எதிராக ஒருநாள் போட்டியில் விளையாடினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தற்கொலைக்கு முயற்சித்த இந்திய வீரர்



ஊக்கமருந்து சோதனையில் சிக்கி ஒலிம்பிக்கில் பங்கேற்கும் வாய்ப்பை இழந்த இந்திய மல்யுத்த வீரர் நர்சிங் யாதவ் தற்கொலைக்கு முயன்றதாக அவரது நண்பர் அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளார். பிரேசில் நாட்டின் ரியோ டி ஜெனிரோ நகரில் அடுத்த மாதம் நடக்கவிருக்கும் ஒலிம்பிக் போட்டிகளில் இந்தியா சார்பில் 120 வீரர்கள் பங்கேற்க உள்ளனர். முன்னதாக ஆடவர் 74 கிலோ எடை பிரிவு மல்யுத்த போட்டியில் பங்கேற்க இந்திய வீரர் நர்சிங் யாதவ் தகுதி பெற்றிருந்தார்.

இந்நிலையில் அவருக்குநடத்தப்பட்ட இரத்தப் பரிசோதனையில் அவர் தடை செய்யப்பட்ட ஸ்டீரொய்ட் மருந்து உட்கொண்டது கண்டுபிடிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து அவரின் ஒலிம்பிக் கனவுதகர்ந்துபோனது. இதனால் அவர் மிகவும் மனமுடைந்துபோனார். இந்த நிலையில் மிகவும் வெறுப்படைந்த நர்சிங் யாதவ் தற்கொலைக்கு முயற்சித்ததாக அவரது நண்பர் அதிர்ச்சித் தகவலை கூறியுள்ளார். இது குறித்து அவர் கூறுகையில், நர்சிங் மிகவும் கஷ்டப்பட்டு இந்த நிலையை அடைந்தார். ஆனால் இப்படி அவமதிக்கப்படுவார் என்று அவர் நினைக்கவில்லை. இதனால் மிகவும் மனமுடைந்த அவர் தற்கொலை செய்துகொள்ளும் முடிவுக்கே சென்றுவிட்டதாக தெரிவித்துள்ளார்.

## சங்காவின் சாதனையை நெருங்கும் குஷல் மெண்டிஸ்



அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான முதல் டெஸ்டில் சதம் விளாசியுள்ள குஷல் மெண்டிஸ் முன்னாள் தலைவர் குமார் சங்கக்காரவின் சாதனையை நெருங்கி வருகிறார். பல்லேகல மைதானத்தில் நடந்து வரும் முதல் டெஸ்ட் போட்டியின் 2வது இன்னிங்சில் இலங்கை அணியின் குஷல் மெண்டிஸ் அபாரமாக விளையாடி சதம் விளாசினார். தற்போது அவர் 169 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். இதன் மூலம் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் அதிக ஓட்டங்கள் எடுத்த இலங்கை வீரர்களில் 2வது இடத்தில் உள்ளார்.

முதல் இடத்தில் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார இருக்கிறார். அவர் 2007ல்ஹொபர்ட்டில்நடந்தபோட்டியில் 192 ஓட்டங்கள் எடுத்திருந்தார். குஷால் மெண்டிஸ் தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினால் குமார் சங்கக்காரவின் சாதனையை அவர் எளிதாக முறியடிப்பார்.

## கடலில் நீந்தி கிரேக்கம் சென்றவர் ஒலிம்பிக்கில் பங்கேற்பு

பிரேசிலில் இடம்பெறவுள்ள ரியோ ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கும் அகதிகள் அணியில் சாதிக்கும் நோக்குடன் மற்றுமொரு அகதிப்பெண் தயாராகியுள்ளார். யஸ்ரா மர்தினி என்ற 18 வயதான குறித்த யுவதி சிரியா நாட்டைச் சேர்ந்தவர். உள்நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக துருக்கியிலிருந்து ஐரோப்பா நோக்கிப் பயணித்தார். குறித்த யுவதி உள்ளிட்டவர்கள் பயணித்த படகு இடைநடுவே பழுதாகியுள்ளது. இதனால் யஸ்ரா மர்தினி மற்றும் அவரின் சகோதரியும் கிரேக்கத்தை நோக்கி நீச்சலடித்து சென்றுள்ளனர்.

இதுகுறித்து கருத்துதெரிவித்த யஸ்ரா மர்தினி, நீங்கள் நீருக்குள் இருக்கும் போது எதைபற்றியும் நினைப்பதில்லை. ஆனால், நீருக்குள் இருக்கும் போது எனது உலகமே வேறு. சில நேரங்களில் தண்ணீர் குளிரும் அதை சூடேற்ற எதுவும் இருக்கவில்லை. குண்டு வெடிப்பு, பாதுகாப்பு போதாமை போன்ற சூழலில் வாழ்ந்து வந்தோம். நாங்கள் வந்த படகு சரியில்லை என நினைக்கின்றேன். இடைநடுவில் இயந்திரம் செயற்படாமல் போனது. ஒருவர் கடலில் குதித்தால் நான் தொடர்ந்தும் பயணிக்கலாம் எனக் கூறினார்கள். உடனே என் சகோதரி கடலில் குதித்தால். நான் கடலில் குதிக்க அவள் அனுமதிக்கவில்லை. எனினும் மறுபுறத்தில் நானும் கடலில் குதித்தேன்.



வழியில் நாம் உயிரிழக்கலாம் என்ற பயம் இருந்தது. என் சொந்த நாட்டில் கிட்டத்தட்ட நான் இறந்துவிட்டதாகவே நான் கருதினேன். எவ்வாறாயினும். நீச்சல் பயிற்சி பெற்ற நாங்கள் நீரில் இறப்பது அவமானமல்லவா என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஜேர்மனி கால்பந்து அணியின் தலைவர் ஓய்வு



ஜேர்மனி கால்பந்தாட்ட அணியின் தலைவர் Bastian Schweinsteiger தாம் சர்வதேச போட்டியிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். 31வயதான அவர். Manchester United கழகத்திற்காகவும்விளையாடியுள்ளார். 2014ஆம்ஆண்டு பிரேசிலில் இடம்பெற்ற கால்பந்தாட்டப் போட்டியில் ஜேர்மனிய அணி வெற்றிப்பெற்றபோது அதில் பங்கேற்றார்.

ஜேர்மனியின் கால்பந்தாட்ட அணியிலிருந்து அண்மைக்காலத்தில் விலகும் முக்கியமான நான்காவது வீரராக Bastian Schweinsteiger கருதப்படுகிறார். ஜேர்மனிக்கு 2014ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தை பெற்றுக்கொடுத்தமையைப் போன்று மீண்டும் தம்மால் பெற்றுக்கொடுக்க முடியாது. எனவே தமது பயணத்தை இடைநிறுத்தியதாகக் குறிப்பிட்டுள்ள அவர். 2018ஆம் ஆண்டின் உலகக்கிண்ணப் போட்டிகளுக்காக ஜேர்மனி அணிக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

## ஒலிம்பிக் சின்னத்துடன் போதை மருந்து விற்பனை

ஒலிம்பிக்போட்டிகள் நடக்கவுள்ள மரக்கானா மைதானத்திற்கு அருகில் ஒலிம்பிக்சின்னம் அச்சிடப்பட்ட போதைப் பொருளான கொகையின் பக்கெட்டுகளை



பொலிசார் கைப்பற்றியுள்ளனர். ஒலிம்பிக் போட்டிகள் பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் அடுத்த மாதம் களைகட்டவிருக்கிறது. இந்த ரியோ டி ஜெனிரோ பிரேசிலின் 2வது மிகப்பெரிய நகரம். சுமார் 70 லட்சம் மக்கள் தொகைக்கொண்டது. உலகின் 207 நாடுகளில் இருந்து 17 ஆயிரம் வீரர் வீராங்கனைகள், அதிகாரிகள், பயிற்சியாளர்கள் இந்த ஒலிம்பிக்கில் பங்கேற்க ஆயத்தமாகி வருகின்றனர்.

இந்நிலையில் ஒலிம்பிக்போட்டிகள் நடக்கவுள்ள மரக்கானா மைதானத்திற்கு அருகில் 93 கொகையின் பக்கெட்டுகளை ரியோ பொலிசார் கைப்பற்றியுள்ளனர். கைப்பற்றப்பட்ட 93 பக்கெட்டுகளிலும் ஒலிம்பிக்சின்னம் அச்சிடப்பட்டிருப்பதாக ரியோ நகர ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ஒலிம்பிக்சின்னத்தையே கொகையின் பக்கெட்டுகளில் அச்சடித்து, போதை மருந்து கும்பல் விற்பனை செய்வது பிரேசில் அரசுக்கு பெரும் தர்ம சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது. ரியோ நகரம் முழுவதும் பரவலாக ஒலிம்பிக்சின்னம் அச்சிடப்பட்ட பக்கெட்டுகள் விற்பனை செய்யப்படலாம் என பொலிசார் சந்தேகிக்கின்றனர். இதனால் இந்த போதைமருந்து கும்பலைப் பிடிக்க நடவடிக்கை முடுக்கி விடப்பட்டுள்ளதாக பிரேசில் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகச் செய்திகள்


## விமானப்படைத் தளபதி சுட்டுக்கொல்லப்பட்ட காட்சிகள் வெளியீடு



இஸ்ரேல் நாட்டில் உள்ள பேரூந்து நிலையத்தில் அந்நாட்டு விமானப்படை தளபதி சுட்டுக்கொல்லப்பட்ட காட்சிகள் தற்போது வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. கடந்த பெப்ரவரி 24ம் திகதி விமானப்படைத் தளபதியான Eliav Gelman(30) பேரூந்து நிலையம் ஒன்றில் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்த சம்பவம் நிகழ்ந்தபோது காட்சிகள் அனைத்தும் அங்குள்ள கண்காணிப்பு கெமராவில் பதிவாகியுள்ளன. இந்த காணொளி தற்போது இணையத்தளத்தில் வெளியாகியுள்ளது.

பேரூந்து நிலையம் ஒன்றில் இராணுவ வாகனத்திற்காக தளபதி நின்றுக்கொண்டு இருந்துள்ளார். அவருடன் துப்பாக்கிகளைஏந்தியவாறு சில வீரர்களும் நின்றுள்ளனர். அப்போது எதிர்த்திசையில் நபர் ஒருவர் சாலையைக் கடந்து பேரூந்து நிலையம் அருகில் நடந்து வருகிறார். சில வினாடிகளுக்குப் பிறகு திடீரென துப்பாக்கியை எடுத்த அந்த நபர் தளபதியை நோக்கி சரமாரியாக சுட்டுள்ளார். இக்காட்சியைக் கண்ட வீரர்கள் நபரைநோக்கி சுட்டுள்ளனர். ஆனால், துரதிஷ்டவசமாக அந்த நபர் தளபதியை கடக்கும்போது வீரர்களின் துப்பாக்கியில் இருந்து புறப்பட்ட தோட்டாக்கள் தள பதியை சுட்டு வீழ்த்தியுள்ளன. குண்டடிபட்ட தளபதி சாலையில் விழுந்து உயிருக்குப் போராடியுள்ளார். தளபதியை நோக்கிச்சுட்ட அந்த நபருக்கும் குண்டடிபட்டதால் இருவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். ஆனால், 02 மணிநேரத்திற்குப்பிறகு சிகிச்சை பலனளிக்காமல் தளபதி உயிரிழந்தார். அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பிய அந்த நபர் தற்போது சிகிச்சை முடிந்து பொலிசாரால் கைது செய்யப்பட்டு விசாரணையில் ஈடுபடுத்தப்பட்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ISIS தீவிரவாதிகளின் புதிய வெளியீடு



பிரான்ஸ் நாட்டில் தேவாலயத்தில் புகுந்து பாதிரியாரைக் கொன்றதாக சுட்டுக்கொல்லப்பட்ட தீவிரவாதி அந்த நாட்டு ஜனாதிபதிக்கு பிரான்ஸ் நாட்டை அழித்து விடுவதாக மிரட்டல் விடுத்திருந்த காணொளி தற்போது வெளியாகியுள்ளது. பிரான்ஸ் நாட்டில் ரூயன் நகருக்கு அருகே உள்ள செயிண்ட் எடுன்னே டு ரவ்ரே என்ற பகுதியில் இருந்த தேவாலயத்தில் இரண்டுதீவிரவாதிகள் நுழைந்து அங்கிருந்த பாதிரியார், கன்னியாஸ்திரி மற்றும் பக்தர்கள் என 6 பேரை பணயக்கைதிகளாக பிடித்து வைத்திருந்தனர். அப்போது, தகவலறிந்துபொலிசார்செல்வதற்குள் தீவிரவாதிகள் பாதிரியாரின் கழுத்தை அறுத்து கொலைசெய்து விட்டனர். பின்பு பொலிசார் தீவிரவாதிகள் இருவரையும் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றனர்.

இந்த நிலையில், பொலிசாரால் சுட்டுக்கொல்லப்பட்ட தீவிர வாதிகளுள் ஒருவனான அப்டெல் மாலிக் நபில் பெட்டிட்ஜீன் தேவாலய தாக்குதலுக்குமுன்னதாகவேபிரான்ஸ் நாட்டின் ஜனாதிபதி பிராங்கோயிஸ் ஹொலண்டேவுக்கு ஒரு மிரட்டல் காணொளி அனுப்பியுள்ளான். அதில் 'காலங்கள் மாறிவிட்டது. நாங்கள் அனுபவிக்கும் வேதனையை நீங்களும் அனுபவிப்பீர்கள். உங்கள் நாட்டை நாங்கள் அழிக்கப்போகிறோம்' எனப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

## பிறநாட்டு இரை கௌவிகளை அகற்ற புதிய திட்டம்

New Zealandஆனது தங்கள் நாட்டுக்குள் அடைக்கலம் புகுந்த பிறநாட்டு இரை கௌவி விலங்குகளை 2050ஆம் ஆண்டளவில் முற்றாக அழித்து, இரை கௌவி (Invasive Predators) இல்லாத நாடாக மாற்ற முடிவு செய்துள்ளது. இதன் மூலம் உள்நாட்டு இனங்களை அவற்றிடமிருந்து பாதுகாக்க முடியும் என நம்பப்படுகிறது. தற்போது இவ்வினங்களைபாதுகாக்கும்நிறுவனங்கள் வருடாந்தம் US$2.3 பில்லியன்களை செலவிடுவதாக தகவல்கள் சொல்கின்றன.

இது தொடர்பாக அந் நாட்டின் பிர தமர் John Key கூறுகையில், முன்னர் காடழிப்பும், வேட்டையாடுதலுமே உள்நாட்டு இனங்களுக்கு அச்சுறுத்தலாக விளங்கியது. தற்போது இப் படையெடுத்துவரும் இனங்களால் உள்நாட்டு இனங்கள் பாரிய அழிவுக்குள்ளாகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது. Rats, possums மற்றும் stoats இனங்கள் 25 மில்லியன் உள்நாட்டு



பறவைகளை வருடாவருடம் கொன்று வருகி றது. அதேநேரம் lizards மற்றும் உள்நாட்டு இனங்களுக்கும் இவை பெரிதும் அச்சுறுத்தலாக உள்ளன. இவ்வாறான இனங்களை அழிக்கும் நடவடிக்கையே மேற்கொள்ளப்படவிருக்கின்றது. இதற் கென US$20 மில்லியன்களை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது. ஏற்கனவே வருடாவருடம் பீடைக் கட்டுப்பாட்டுக்கென US$50 மில்லியன்களை ஒதுக்குவதும் குறிப்பிடத்தக்கது.

## எதிர்ப்பை மீறி மரண தண்டனை நிறைவேற்றம்

சர்வதேச நாடுகளின் எதிர்ப்பை மீறி போதைப்பொருள் கடத்திய குற்றத்திற்காக இந்தோனேசியா அரசு 4 கைதிகளுக்கு மரண தண்டனை நிறைவேற்றியுள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்தோனேசியா நாட்டிற்குள் போதைப் பொருள் கடத்தியதாக, கடந்த 2004ம் ஆண்டு 14 பேர் கைது செய்யப்பட்டனர். பின்னர், நீதிமன்றத்தில் நடந்த விசார ணையில் இவர்கள் அனைவருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது. மரண தண்டனை நிறைவேற்றுவதற்கு 72 மணிநேரம் முன்னதாக கைதிகளுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் தகவல் அளிக்கப்படும்.

இதனைத்தொடர்ந்து, நைஜீரியா நாட்டை சேர்ந்த இருவர், செனகல் நாட்டை சேர்ந்த ஒருவர் மற்றும் இந்தோனேசிய நாட்டை சேர்ந்த ஒருவர் என 4 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படும் என தகவல் வெளியானது. இந்தோனேசியாவின் இந்த முடிவுக்கு சர்வதேச மன்னிப்பு சபை



உள்ளிட்ட அமைப்பும் பிற நாடுகளும் மரண தண்டனையை ரத்து செய்யுமாறு வலியுறுத்தின. ஆனால், உலக நாடுகளின் எதிர்ப்பை மீறி இந்தோனேசிய அரசு அதி காலை 4 பேருக்கும் மரண தண்டனையை நிறைவேற்றியுள்ளது. ஜாவாவில் உள்ள Nusakambangan பகுதிக்கு கொண்டு செல்லப்பட்ட கைதிகள், துணியால் கண்கள் மூடப்பட்ட அவர்களை பொலிசார் துப்பாக்கியால் சுட்டு மரண தண்டனையை நிறைவேற்றியுள்ளனர். சர்வதேச அளவில் போதைப்பொருள் கடத்தலுக்கு மரண தண்டனை விதிக்கும் 33 நாடுகளில் இந்தோனேசியாவும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

## வாக்காளர்களுக்கு ஒபாமாவின் உருக்கமான கோரிக்கை




ஜனநாயகக் கட்சி சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ள ஹிலாரியை ஜனாதிபதியாக வெற்றியடைய செய்ய வேண்டும் என வாக்காளர்களுக்கு ஒபாமா உருக்கமான கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார். அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு ஜனநாயகக் கட்சி சார்பில் ஹிலாரி கிளிண்டன் அதிகாரபூர்வமாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து Philadelphia நகரில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் தற்போதைய ஜனாதிபதியான ஒபா மாவும் ஹிலாரியும் பங்கேற்றனர்.

அப்போது, ஹிலாரியை ஜனாதிபதி யாகத் தெரிவுசெய்ய வாக்காளர்கள் அனைவரும் உதவவேண்டும் என ஒபாமா கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும், 'வெள்ளை மாளிகைக்கு இதுவரை தெரிவுசெய்யப் பட்டவர்களில் ஹிலாரி தான் மிக வும் தகுதி படைத்தவர்' என புகழாரம் சூட்டியுள்ளார். ஜனாதிபதி வேட்பாளர்களைத் தெரிவு செய்வதில் வாக்காளர்கள் 'நம்பிக்கை மற்றும் பயம்' ஆகியவற்றிற்கு இடையில் போராடி இறுதியில் நம்பிக்கையை தெரிவு செய்துள்ளனர். ஒபாமாவின் இந்த கருத்தின் மூலம் குடியரசு கட்சி சார்பாக ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டுள்ள டொனால்ட் டிரம்பை அவர் 'பயம்' என விமர்சித்து ள்ளார். எனினும், ஒபாமாவின் இந்தக் கருத்தை டொனால்ட் டிரம்ப் மறுத்துள்ளார். அமெரிக்காவில் மில்லியன் கணக்கானவர்கள் வறுமையில் வாடுவதாகவும் அவர் களுக்கு வாழ்வாதாரம் ஏற்படுத்தித் தருவதில் ஒபாமா தோல்வி அடைந்து விட்டதாக டுவிட்டரில் டிரம்ப் கருத்துத் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி ஒபாமாவின் கோரிக்கையை ஏற்று வாக்காளர்கள் ஹிலாரியை வெற்றியடையச் செய்தால், அமெரிக்க வரலாற்றில் ஹிலாரி தான் முதல் பெண் ஜனாதிபதி என்பது குறிப்பிடத்தக்கது.

## அடுக்குமாடி ஜன்னலில் இருந்து குதித்த அகதி சிறுமி



சுவிட்சர்லாந்து நாட்டில் அகதி சிறுமி ஒருவரை அதிகாரிகள் நாடுகடத்த முயன்றபோது சிறுமி ஜன்னல் வழியாகக் குதித்து படுகாயமடைந்துள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஆப்கானிஸ்தான் நாட்டைச் சேர்ந்த குடும்பம்ஒன்றுபுகலிடம்கோரிசுவிஸில் உள்ள பேர்ன் மாகாணத்தில் வசித்து வருகிறது. இந்நிலையில், டப்ளின் சட்டவிதிகள் அடிப்படையில் ஐரோப்பிய நாடுகளில் எந்த நாட்டிற்கு முதலில் செல்கிறார்களோ அதே நாட்டில் தான் புகலிடம் கோர வேண்டும். இவற்றில் ஆப்கானிஸ்தான் குடும்பம் தோல்வி அடைந்துள்ளதால், அக்குடும்பத்தை வெளியேற்ற அரசு உத்தரவிட்டது.

Zweisimmen நகரில் உள்ள குடியிருப்பு ஒன்றில் தங்கியிருந்த அக்குடும்பத்தினரை அழைத்துச் செல்ல காலை 7 மணியளவில் அதிகாரிகள் சென்றுள்ளனர். குடும்பத்தில் 15 வயதான சிறுமி ஒருவரும் இருந்துள்ளார். அப்போது குடும்பத்தினரை வெளியேற்றிக் கொண்டு இருந்தபோது சிறுமி திடீ ரென ஜன்னல் கதவுகளை திறந்து அங்கிருந்து குதித்துள்ளார். இதனை சற்றும் எதிர்பார்க்காத அதிகாரி கள் உடனடியாக சிறுமியை மீட்டு மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர். இதுகுறித்து அதிகாரிகள் பேசியபோது, சிறுமி யின் உடல்நிலை சரியா கும்வரை அக்குடும்பத்தினரை நாடுகடத்தும் நடவடிக்கை தள்ளி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

பிரித்தானிய நாட்டில் தண்ட வாளத்தை கடக்கும்போது ஏற்படும் ஆபத்துக்களை வலியுறுத்தி அந்நாட்டு பொலிசார் உண்மை காணொளி ஒன்றை வெளியிட்டு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பிரித்தானியா நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் தண்டவாளத்தை கடக்கும்போது ரயில்களில் மோதிய விபத்தில் 170 பேர் பலியாகியுள்ளனர். இவர்களில் பாதி பேர் 25 வயதிற்கும் குறைவானவர்கள் என்பது கவலைக் குரிய செய்தியாகும்.

வாலிபர்களில் 42 சதவிகிதத்தினர் 'குறுகிய நேரத்தில்' செல்வதற்காக தண்டவாளத்தை கடக்கின்றனர். 19 சதவிகிதத்தினர் 'சாகசம் செய்வதற்காக' தண்டவாளத்தை கடக்கின்றனர் என ஆய்வில் தெரியவந்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விந்தை உலகம்

## மிதக்கும் சுரங்கத்தில் நீருக்கடியில் ஒரு அற்புத பயணம்

பொதுவாக கடலில் பயணம் செய்யவேண்டும் என நிச்சயம் அனைத்து தரப்பு மக்களுக்கும் ஆசை இருக்கும். ஆனால் தற்போதெல்லாம் ஆகாயத்தில் பயணிப்பது, கடலில் பயணிப்பது என்றாலே சற்று பயம் தான் தொற்றிக் கொள்கிறது.

எதை எடுத்துக்கொண்டாலும் விபத்து விபத்து என்ற வார்த்தையே முன்பு வருகிறது. இருந்தாலும் ஆசை யாரைவிட்டது. ஒரு தடவையாவது கட்டாயமாக போகவேண்டும் என்ற எண்ணம் மட்டும் மனதிலிருந்து நீங்கவே நீங்காது. ஆனால் நோர்வேயில் நீருக்கடியில் பயணம். 19 பில்லியன் டொலர் மதிப்புள்ள மிதக்கும் சுரங்கம். 21 மணிநேர பயணத்தை பாதியாக குறைக்கும் 19 பில்லியன் டொலர் மதிப்புள்ள மிதக்கும் சுரங்கத்தில் நீருக்கடியில் ஒரு அற்புத பயணத்தினை நீங்களும் மகிழ்ச்சியாக மேற்கொள்ளலாம்.



## இன்னும் சில வருடங்களில் அழிந்து மறையக்கூடிய நகரங்கள்

இயற்கை சீற்றங்களால் ஒரு இடம் அழிவதற்கு நாம் நம் பூமி தாய்க்கு செய்யும் தீங்குகள் தான் காரணம். நாம் ஒவ்வொரு நாளும் பூமித் தாயை அழித்துக் கொண்டிருக்கிறோம். இதனால் ஒரு கட்டத்தில் பூமித் தாய் கோபம் கொண்டு, நாம் தாங்க முடியாத அளவிலான பாதிப்பை ஏற்படுத்துகிறது. இன்னும் சில காலங்களில் அழிந்து மறையக்கூடிய நகரங்களைப் பற்றி தான் பார்க்கப் போகிறோம். இங்கு கொடுக்கப்பட்டுள்ள நகரங்கள் ஒவ்வொன்றும் மிகவும் அழகானவை. பூமியில் உள்ள அந்த அழகான நகரங்களை இன்னும் சில வருடங்கள் கழித்து புத்தகங்களில் மாத்திரமே காணவேண்டிவரும்.

பேங்கொக்

கண்ணைப் பறிக்கும் அழகைக்கொண்ட பேங்கொக் என்னும் நகரம், மெதுவாக பெருங்கடலில் மூழ்கிக்கொண்டிருக்கிறது என்பது தெரியுமா? இதற்கு முக்கிய காரணம் நிலத்தடி நீர் நிலக்குடைவுகள் (Underground water caverns) தான். இதனால் இந்த நகரத்தின் நிலப்பகுதி பலவீனமாகி மூழ்கிக்கொண்டிருக்கிறது.

சான் பிரான்சிஸ்கோ

அமெரிக்காவில் உள்ள மிகவும் அற்புதமான ஓர் நகரம் தான் சான் பிரான்சிஸ்கோ. இந்த நகரமானது மிகவும் தவறான நிலக்கோட்டின் மேல் அமைந்துள்ளதால், இங்கு 75 சதவீதம் உயர் ரிச்டர் அளவில் நிலநடுக்கம் வரும் வாய்ப்பு உள்ளதாக அறிக்கைகள் கூறுகின்றன. இதனால் இந்த நகரம் முழுவதும் அழியும் வாய்ப்பு அதிகம் உள்ளது.

வெனிஸ்

உலகிலேயே வெனிஸ் மிகவும் கவர்ச்சிகரமான அழகிய நகரம். ஆனால் ஒரு கெட்ட செய்தி இந்த நகரம் முழுமையாக மறையப்போகிறது என்பது தான். இந்த நகரத்தில் உள்ள கட்டிடங்கள் ஒவ்வொரு நாளும் நீரில் மூழ்கிக்கொண்டிருக்கின்றன.

மெக்ஸிகோ

மெக்ஸிகோவின் பெரும்பாலான பகுதி உலர் ஏரிப்படுகையின் மேல் அமைந்துள்ளது. மேலும் இந்த நகரம் ஒவ்வொரு வருடமும் 4 இன்ச் மூழ்கிக் கொண்டிருக்கிறது. கடந்த 40 வருடத்தில், இந்த நகரமானது சுமார் 10 மீட்டர் மூழ்கியுள்ளது என்றால் பாருங்கள்.

ப்யாரிஜல்

இது ஆபிரிக்காவின் புறநகரில் அமைந்துள்ள ஒரு நகரம். ஒரு முக்கிய கவலை என்னவெனில், இங்கு கடல் மட்ட நீர் உயர்ந்துகொண்டே இருப்பது தான். கடலோரப் பகுதிகள் மெதுவாக அரிக்கப்பட்டு இருப்பதால், இன்னும் சில வருடங்களில் இந்த நகரத்தைக் காண்பது என்பது சந்தேகம் தான்.

நேபிள்ஸ்

இத்தாலியில் அமைந்துள்ள நேபிள்ஸ், வரலாற்றில் உள்ள மிகவும் பழமையான நகரம். இது ஒரு முக்கிய சுற்றுலாத்தளமும் கூட. இந்த நகரமானது வேசுவியஸ் எரிமலையை அடுத்து அமைந்துள்ளது. இந்த எரிமலை தான் பாம்பீ என்னும் நகரத்தையே அழித்தது. மேலும் ஆராய்ச்சியாளர்கள் இந்த எரிமலை செயலில் தான் உள்ளது மற்றும் எந்நேரமும் அது வெடிக்கலாம் என்று கூறுகின்றனர்.




















இப்பத்திரிகை இலக்கம்154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு தினப்புயல் நிறுவனத்தால் 31.07.2016 அன்று வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org